# பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுருக்கத் தொகுப்பு

இந்திய தேர்தல் ஆணையம்

**2016**

நிர்வாச்சன் சதன்,
அசோகா சாலை, புது தில்லி–110 001

# முன்னுரை

பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்ட நிகழ்வு தேர்தல் களத்தில் எப்போது இடம்பெறத் தொடங்கியது என்பதை துல்லியமாக சுட்டிக்காட்டுவது கடினமானதாகும். இருப்பினும், 2009, பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, சுதந்திரமானமற்றும் நேர்மையான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதிலும் நன்னெறி சார்ந்த பத்திரிக்கை தர்மம் மற்றும் ஜனநாயகத்தின் ஒட்டுமொத்தநலன் ஆகியவற்றிலும் அக்கறைகொண்ட மிகுந்த எண்ணிக்கையிலான நல்லெண்ணம் கொண்ட மக்கள் உரத்தக் குரல்எழுப்பி, பணம் கொடுத்து செய்தி வெளியிடும் வழக்கத்தை எதிர்த்து போராடினார்கள். அரசியல் தலைவர்கள், மூத்த பத்திரிக்கையாளர்கள், ஊடக அமைப்புகள் மற்றும் குடிமுறைசமூகக் குழுக்கள் உட்படபல தரப்பட்டவர்கள் தங்களுடைய ஆதங்கத்தை ஆணையத்திற்குத் தெரிவித்தனர். பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியால் ஏற்படும் தீங்குப் பற்றி பாராளுமன்றத்திற்குள்ளேயும், அரசுக்குள்ளேயும், ஊடகவட்டாரங்களிலும் விவாதிக்கப்பட்டன. அரசியல் கட்சிகளுடனான ஆணையத்தின் கூட்டத்தில் பரிகாரநடவடிக்கை எடுக்குமாறு தொடர்ச்சியான கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்தியப் பத்திரிக்கையாளர் மன்றத்திடமிருந்தும் கூடபரிந்துரைகள் ஆணையத்திற்கு வரப்பெற்றன.

தேர்தல்ஆணையம் அதனுடையஉரிமைக் கட்டளையினைசுதந்திரமானமற்றும் நேர்மையானதேர்தல்கள்நடத்துவதற்கும் மற்றும் ஏதேனும் தேர்தல்களத்தை சீர்குலைக்கும் அளவிற்கு அல்லது தேர்தல் சட்டமீறல்களை அனுமதிக்காமல் இருப்பதற்காக, இந்தியதேர்தல் ஆணையம், பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதற்கு எதிராக 2010 பொது தேர்தலில் அதனுடைய முதல் நடவடிக்கையைத் தொடங்கியது. அதிலிருந்து தேர்தலுக்கு தேர்தல், நாங்கள் இந்த நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளோம். அரசியல்கட்சிகள், வேட்பாளர்கள், ஊடகத்தைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் பொதுமக்கள்உட்படஅனைத்துப் பொறுப்பாளர்களுக்கும் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். தேர்தலில்பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்தி நிகழ்வை எதிர்கொள்வது என்பது ஐயமின்றி, இன்னும் படிப்படியாக வளர்கின்ற நடைமுறையாக உள்ளது. அனைவரின் ஆதரவும் இதற்குத் தேவைப்படும்.

பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதன் சிக்கலான தன்மையைக் கருத்திற்கொண்டு, இந்தியத் தேர்தலில் உள்ள பிரச்சனைகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையம் அதன் வழியில் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி தகவு நோக்கை, இந்தக் கையேட அளிக்கவிழைகிறது.

(அக்ஷய்ரவுட்)

பொதுஇயக்குநர்

அட்டவணை


| தொடர் எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1–5 |
| 2. | அறிவுரையின் சுருக்கம் | 6–12 |
| 3. | ஆணையத்தின் 15–4–2004ஆம் நாளிட்ட கடித எண்.509/ 75/2014/ஜர்னல்–Iஇல் தொலைக்காட்சி சேனல் மற்றும் கேபிள் நெட் ஒர்க் ஆகியவைகளில் அரசியல் தன்மை கொண்ட விளம்பரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் 13–4–2004 ஆம் நாளிட்டஆணை | 13–31 |
| 4. | விளம்பரச் சான்றிதழுக்கான விண்ணப்பப் படிவம் | 32–34 |
| 5. | தொலைக்காட்சி ஒளிபரப்புக்கான மாதிரி விண்ணப்பப் படிவம் | 35 |
| 6. | ஆணையத்தின் 22–07–2004 ஆம் நாளிட்டகடித எண் 509/75/2004 JS–ஐ/தொகுதிII ஆர் சிசி–இல் தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் கம்பிட இணைப்புத் தொடர்பு ஆகியவைகளில் அரசியல்தன்மை கொண்ட விளம்பரம் தொடர்பாக உச்ச நீதி மன்றத்தின் 13–4–2004 ஆம் நாளிட்ட ஆணை. | 36 |
| 7. | ஆணையத்தின் 21–11–2008 ஆம் நாளிட்ட கடித எண்.509/ 75/2004/ஜெஎஸ்/தொகுதிII/ஆர்.சி.ச. இல் தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் கம்பிவட ஒளிபரப்பு ஆகியவற்றில் அரசியல்தன்மை கொண்ட விளம்பரம் – வானொலிக்கும் நீட்டித்தல்– தொடர்பாக. | 37–40 |
| 8. | ஆணையத்தின் 18–03–2009 ஆம் நாளிட்டகடித எண் 509/75/2004–ஜெஎஸ்–ஐ/ தொகுதி ஐஐ/ ஆர்.சி.சஇல் தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும் கம்பிவட ஒளிபரப்பு ஆகியவைகள் மற்றும் வானொலிமீதான அரசியல் தன்மைகொண்ட விளம்பரம் தொடர்பாக. | 41–43 |
| 9. | ஆணையத்தின் 19–03–2009 ஆம் நாளிட்ட கடித எண்.3/ இ.ஆர்/2009/எஸ்.டி.ஆர்–இல் தொலைக்காட்சி ஒளிபரப்பு, கம்பிவட தொடர்பு மற்றும் வானொலிமீதான அரசியல் தன்மை கொண்ட விளம்பரம் – தொடர்பாக. | 44–46 |
| 10. | ஆணையத்தின் 08–06–2010–ஆம் நாளிட்ட கடித எண்.491/ ஊடகம்/2010–இல் தேர்தலின் போது பணம் கொடுத்து வெளியிட்ட செய்தியை நடவடிக்கை எடுத்து சரிபார்த்தல் அதாவது ஊடகத்தில் செய்தி அலங்கரிப்பில் விளம்பரம் – தொடர்பாக. | 47–52 |
| 11. | ஆணையத்தின் 23–09–2010 ஆம் நாளிட்டகடித எண்.491/ஊடகக் கொள்கை/– இல் தேர்தலின் போது பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியை நடவடிக்கை எடுத்து சரிபார்த்தல் அதாவது ஊடகத்தில் செய்தி அலங்கரிப்பில் விளம்பரம் – பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திமீதான இந்தியப் பத்திரிக்கை சம்மேளனத்தின் வழிகாட்டுதல்கள் தொடர்பாக. | 53–71 |

| | | |
|---|---|---|
| 12. | ஆணையத்தின் 03–02–2011 ஆம் நாளிட்டகடித எண். 3/1/2011 எஸ்.டி.ஆர் இல்மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961 ஆகியவைகளில் திருத்தம் செய்வதற்கான கருத்துகள்–தொடர்பாக. | 73–80 |
| 13. | ஆணையத்தின் 18–03–2011 ஆம் நாளிட்டகடித எண்.491/ஊடகம்/2009 இல்தேர்தலின்போது "பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியை நடவடிக்கை எடுத்து சரிபார்த்தல் அதாவது ஊடகத்தில் செய்தி அலங்கரிப்பில் விளம்பரம் மற்றும் மாநில அளவிலான ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவின் பெயர் – தொடர்பாக. | 81–82 |
| 14. | ஆணையத்தின் 16–08–2011 ஆம் நாளிட்டகடித எண்.491/ஊடகம்/2011 (விளம்பரம்)–இல் அரசியல் கட்சிகள் அல்லது அவர்களுடன் செயல்படுபவர்கள் / அலுலவகம் பொறுப்பாளர்களுக்கு சொந்தமான தொலைக்காட்சி / கேபிள் ஒளிபரப்புகளில் வேட்பாளர்களின் விளம்பரங்களை தேர்தலின் போது வெளியிடுவது தொடர்பான வழிகாட்டுதல்கள்–தொடர்பாக. | 83–85 |
| 15. | ஆணையத்தின் 15–03–2012 ஆம் நாளிட்டஆணை எண் 491/பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள்/2012/ஊடகம்–இல்மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அளவில் ஒரு குழு அமைத்து புகார்கள்/பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி குறித்து மாநிலதலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஊடகசான்றிதழ் கண்காணிப்புக் குழுக்களிடமிருந்து பெறப்பட்டவைகளை பரிசீலனைச் செய்தல்–தொடர்பாக. | 86–88 |
| 16. | பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவது குறித்து ஆணையத்தின் 27–08–2012 ஆம் நாளிட்ட விரிவான வழிகாட்டுதல்கள் எண்.491/ப கொடுவெசெ/2012/ஊடகம் | 89–101 |
| 17. | ஆணையத்தின் 09–10–2012 ஆம் நாளிட்டகடித எண்.491/பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள்/2012/ஊடகம்–இல் அறிவிப்புக்கு பதில் அளிக்க வேட்பாளருக்கான காலக் கெடு–தொடர்பாக. | 102 |
| 18. | ஆணையத்தின் 15–10–2012ஆம் நாளிட்ட கடித எண்.491/ ப.கெ.செ.வெ/2012–இல் தற்போதுள்ள ஊடகங்களுடன் திரையரங்குகளில் விளம்பரங்கள் திரையிடுவது உட்பட அனைத்திற்கும் சான்றளிப்பது – தொடர்பாக. | 103 |
| 19. | ஒலிபரப்பு ஊடகம் உட்படபணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளுக்காக தேவையான நடபடிக்கைகளை மேற்கொள்ள செய்தி ஒலிபரப்பாளர்கள் சங்கத்திற்கு எழுதப்பட்ட ஆணையத்தின் 12–02–2013 ஆம் நாளிட்ட கடித எண்.491/PN/ஊடகம்/2013. | 104–106 |
| 20. | பொது இடங்களில் விளம்பரங்களுக்கு சான்றிதழ் அளித்தலுக்கான விளக்கம் குறித்து ஆணையத்தின் 10–10–2013 ஆம் நாளிட்டகடித எண்.491/ஊடகக் கொள்கை/2013. | 107–108 |

| | | |
|---|---|---|
| 21. | தேர்தல் பிரச்சாரத்தில் சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆணையத்தின் 25–10–2013 ஆம் நாளிட்டஅறிவுரை. | 109–114 |
| 22. | விளம்பரத்திற்கு சான்றிதழளித்தலில் விளக்கம் தொடர்பான 07.02.2014 ஆம் நாளிட்ட 491/ PN/2014 ஆம் எண்ணிட்டஆணையத்தின் கடிதம். | 115–117 |
| 23. | பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளின் நேர்வுகளில் வாராந்திர அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியப் படிவம். | 118 |
| 24. | தேர்தல் முடிந்த பின்பு ஊடக அமைப்பு, வேட்பாளர் ஆகியோரின் பெயர் மற்றும் செலவினம் ஏற்பட்டது போன்றவற்றினைக் குறிப்பிட்டு பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளின் நேர்வுகளில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவம். | 119 |
| 25. | பல்வேறு மாநில தேர்தல்களின் போதுபணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்டதாக குறிப்பிடப்பட்ட வழக்குகள். | 120–121 |
| 26. | பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள். | 122–127 |
| 27. | தொலைக்காட்சிஒளிபரப்பு, மற்றும் கம்பிவட ஒளிபரப்புகளில் அரசியல்தன்மை கொண்ட விளம்பரங்களுக்கு சான்றளித்தல் மற்றும் ஊடகக் கண்காணிப்புக் குழு குறித்து அடிக்கடிக் கேட்கப்படும் வினாக்கள். | 128–129 |
| 28. | பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் குறித்த பரிந்துரைகள். | 130–133 |
| 29. | விளக்கங்கள்: பணம் கொடுத்துவெளியிடப்படும் செய்திகள்– ஐயப்படும் படியான நேர்வுகள். | 134–135 |

# பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுருக்கத் தொகுப்பு

# முகவுரை

இந்திய தேர்தல் ஆணையம், தேசிய வளர்ச்சியிலும் ஜனநாயகத்தைப் பேணிக் காப்பதிலும் ஊடகம் ஆற்றிய முக்கிய பங்கினை பெரிதும் பாராட்டுகிறது. கடந்த அறுபது ஆண்டுகளாக இந்திய ஊடகமானது, ஆணையத்தின் மிகவும் வலிமைவாய்ந்த உற்ற துணைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது, அதன் கண்களும் காதுகளும் களத்தில் இருந்ததுடன் ஆணையத்தின் அரசமைப்பு நீதியான ஆணைக்கு மிகுந்த ஈடுபாட்டோடு கூடிய ஆதரவாளராகவும் செயல்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் தேர்தல் தொடர்பான தகவல்களை பரவச்செய்தல், பல்வேறு விதிமீறல்களை கவனத்திற்கு கொண்டு வருதல், வாக்காளர்கள் பயனடையும் பொருட்டு அரசியல் விவாதம் செய்தல் ஆகியவற்றில் ஊடகம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது. அண்மைக் காலங்களில் ஊடகம், பல்வேறு பொது விவகாரங்களை தீவிரமாக கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. எனினும்அண்மைக்காலத்தில் தேர்தல் களத்தில் ஊடகச் செயல்பாடுகள் தொடர்பாக சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன, இவற்றுக்கு தீர்வுகாணப்பட வேண்டியிருக்கிறது.

பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது கடுமையான தேர்தல் முறைகேடாக உருவெடுத்துள்ளது. இது நேர்மையான மற்றும் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்துவது குறித்து ஆணையத்திற்கு கவலையைத் தோற்றுவித்துள்ளது. இது தேர்தல் செலவின வரம்புகளை மீறுவதுடன், சரியான தகவலை பெறுவதற்கான வாக்காளரின் உரிமைக்கு எதிரானதாகும். இந்திய பத்திரிகையாளர் மன்றம் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதற்கு பின்வருமாறு பொருள்விளக்கம் அளித்துள்ளது,யாதொரு ஊடகத்தில் (அச்சு & மின்னணு வடிவில்) ரொக்கத்திற்காக அல்லது பொருளுக்காக வெளியிடப்படுகின்ற யாதொரு செய்தி அல்லது பகுப்பாய்வு ஆகும். அரசியல் கட்சிகளும் ஊடக குழுக்களும், ஆணையத்தை சந்தித்து, பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதற்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளும் ஆணையத்துடன் 4.10.2010 அன்றும், மீண்டும் 9.03.2011 அன்றும் நடத்திய கூட்டத்தில், பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவதற்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்ற ஒருமித்த கருத்தை வலியுறுத்தின. ஆணையம், பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவது குறித்து உயரளவுக்கு கண்காணிக்கும் செயல்நோக்கத்திற்காகவும், அத்தகைய முறைகேட்டினைத் தடுப்பதற்காகவும், இது வரையில் பல முயற்சிகளை மேற்கொண்டு பல்வேறு வழிகாட்டிக்குறிப்புகளையும் ஆணைகளையும் பிறப்பித்துள்ளது. 2010–ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் தொடங்கி, கவனமுடன்

வரையறுக்கப்பட்ட நிருவாக அமைப்பு மற்றும் செய்முறை வாயிலாக கூர்ந்தாய்வு செய்து, கண்டறிந்து, பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படும் இனங்களைத் தெரிவிக்குமாறு மாநிலம் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

ஆணையம், 2010–ஆம் ஆண்டில், விளம்பரங்களுக்கு சான்றளிப்பதற்காகவும் (தற்போதுள்ள செயல்பாடாகும்), பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவது தொடர்பாக ஊடகத்தைக் கண்காணிப்பதற்காகவும், ஏனைய விதிமீறல்களுக்காவும் மாவட்டம் மற்றும் மாநில அளவில் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினை நியமித்தது. தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி, மாவட்டக் குழுவானது செய்தி வெளியீடு என்ற போர்வையில் நாளிதழ்களில் அரசியல் விளம்பரங்கள் வெளியிடப்படுவதைக் கண்டறியும் பொருட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து நாளிதழ்களையும் மின்னணு ஊடகத்தையும் கூர்ந்தாய்வு செய்கிறது. வேட்பாளர், அலைவரிசைக்கு, நாளிதழுக்கு உண்மையில் யாதொரு தொகை வழங்கியிருந்தாலும் வழங்காவிட்டாலும், வெளியிடப்பட்ட செய்திக்காக உண்மையில் ஏற்பட்ட செலவினத்தைச் சேர்ப்பதற்காக அல்லது அவர்களுடைய செலவுகள் கணக்கில் DIPR/DAVP கட்டண வீதங்களின் அடிப்படையில் பெயரளவிலான செலவினத்தைச் சேர்ப்பதற்காக, வேட்பாளர்களுக்கு அறிவிப்புகள் வழங்குவதற்காக, தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தகவல் தெரிவிக்கிறது, அறிவிப்பு வழங்கப்பட்டு 48 மணிநேரத்திற்குள் வேட்பாளரிடமிருந்து மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவுக்கு எந்த பதிலும் பெறப்படாத நேர்வில், ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவே இறுதியானதாகும். மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவானது, பதில் குறித்து விரைவாக முடிவு செய்து, அதன் இறுதி முடிவை வேட்பாளருக்கு/கட்சிக்கு தெரிவிக்கும் மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் முடிவினை வேட்பாளர் ஏற்காதிருப்பின், அம் முடிவை பெற்ற 48 மணி நேரத்திற்குள், மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவுக்கு தகவல் தெரிவிப்பதன் பேரில் மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிற்கு அவர் (ஆண்/பெண்) மேல் முறையீடு செய்யலாம். மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவானது, மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்து பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் குறித்த அனைத்து இனங்களையும், மேல்முறையீடு பெறப்பட்ட 96 மணிநேரத்திற்குள் பரிசீலித்து வேட்பாளருக்கு அறிவிப்பு வழங்குமாறு சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தன்னிச்சையாக உத்தரவிடுகிறது. வேட்பாளர், மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவை

எதிர்த்து, இந்தக் குழுவிடமிருந்து ஆணை பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம். ஆணையத்தின் முடிவே இறுதியானதாகும்.

பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதுடன் சம்பந்தப்பட்ட அச்சு மற்றும் மின்னணு ஊடகம் தொடர்பாக, பணம் கொடுத்து ஆணையம் வெளியிடப்படும் செய்தி குறித்து தீர்மானிக்கப்பட்ட இனங்களை தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக முறையே இந்திய பத்திரிக்கையாளர் மன்றத்திடமும் செய்தி ஒலிபரப்பாளர்கள் சங்கத்திடமும் அனுப்புகிறது.

2010–ஆம் ஆண்டு பீகார் சட்டமன்ற தேர்தல்களில் முதல் தடவையாக, பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதற்கு எதிராக செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் வாயிலாக, ஆணையம், 121 சந்தேகத்திற்கிடமான இனங்களில் அறிவிப்புகள் வழங்கியது. இவற்றில், பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்ட நேர்வுகளாக 15 இனங்கள் இறுதியில் முடிவுசெய்யப்பட்டன. 2011 ஆம் ஆண்டு தேர்தல்களில், கேரளாவில், பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்டது தொடர்பான 65 உறுதிப்படுத்தப்பட்ட இனங்களும், புதுச்சேரியில் 3 இனங்களும், அசாமில் 46 இனங்களும், மேற்கு வங்கத்தில் 8 இனங்களும், தமிழ்நாட்டில் 22 இனங்களும், இருந்தன. 2012–ஆம் ஆண்டு தேர்தல்களில் உத்தரப்பிரதேசத்தில் 97 இனங்களும், உத்தரகாண்ட்டில் 30 இனங்களும், பஞ்சாபில் 523இனங்களும்,கோவாவில் 9 இனங்களும் குஜராத்தில் 414 இனங்களும், இமாச்சல பிரதேசத்தில் 104 இனங்களும் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்டவையாக முடிவுசெய்யப்பட்டன. 2013ஆம் ஆண்டில் கர்நாடக சட்டமன்றத் தேர்தல்களில் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்ட 96 உறுதிப்படுத்தப்பட்ட இனங்கள் கண்டறிப்பட்டுள்ளன. எனினும், மேகாலயா, நாகாலாந்து மற்றும் திரிபுரா சட்டமன்றத் தேர்தல்களில், பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்ட இனங்கள் எவையும் கண்டறியப்படவில்லை.

யாதொரு வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்காக அல்லது யாதொரு வேட்பாளின் தேர்தல் வெற்றி வாய்ப்பை பாதிக்கின்ற வகையில் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது மற்றும் அவ்வாறு வெளியிடுவதற்கு உடந்தையாக இருப்பதை 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பகுதி VII–ன் அத்தியாயம்III–ன் கீழ் குறைந்தபட்சம் இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையுடன் கூடிய தேர்தல் குற்றமாகும் என வகைசெய்வதற்கு, ஆணையம் 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரக் கருதியுள்ளது. இந்த விவகாரம், மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது. ஆணையம், பல்வேறு மாநிலங்களில் உள்ள ஊடகத்தைச் சேர்ந்தவர்களையும்,

அரசியல் கட்சிகளையும் இந்த தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடாமல் தடுப்பதற்காக அவ்வப்போது பயிலரங்குகளை நடத்திவருகிறது.

இந்த சுருக்கக்குறிப்பானது, பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதிலுள்ள பிரச்சினைகளையும் தேர்தல் களத்தில் உள்ள பிரச்சினையை கையாளுவதற்கான் நடவடிக்கைகளையும் நிருவாக அமைப்பினையும்அனைத்துப் பொறுப்பாளர்களும் புரிந்துகொள்ளஉதவிடும்.

## கட்டளைகளின் சுருக்கக்குறிப்பு

### 1. அரசியல் தன்மை கொண்ட விளம்பரங்களுக்குச் சான்றளிப்பு

**(i) தொலைக்காட்சி அலைவரிசையிலும், கேபிள் கட்டமைப்பிலும் அரசியல் தன்மை கொண்டவிளம்பரங்களுக்கு சான்றளிப்பது தொடர்பான 13.04.2014ஆம் நாளிட்ட உச்சநீதிமன்றத்தின் ஆணை.**

உச்சநீதி மன்றம், 6679/ 2004ஆம் எண் சிறப்பு அனுமதி மனுவில் (தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் Vs திருவாளர்கள் ஜெமினி தொலைக்காட்சி பிரைவேட் லிமிடெட் மற்றும் ஏனையோர்)13.4.2004 அன்று, யாதொரு பதிவுபெற்ற அரசியல் கட்சியால்/ யாதொரு குழுவால் அல்லது அமைப்பால்/ சங்கத்தால்/ வேட்பாளரால் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும், கேபிள் கட்டமைப்பிலும் வெளியிடக் கருதிய அரசியல் விளம்பரங்கள், இந்திய தேர்தல் ஆணையத்தால் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்படவிருக்கின்ற குறிப்பிட்ட சான்றளிப்புக் குழுவால் முன்னரே சான்றளிக்கப்படவேண்டும் என ஆணைகள் பிறப்பித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக, தேர்தல் ஆணையம், 15.04.2004ஆம் நாளிட்ட அதன் கடிதத்தில், அனைத்து மாநிலங்களின்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு அத்தகைய குழுக்களை ஏற்படுத்துமாறு ஆணை ஒன்றை பிறப்பித்தது.(பக்கம் எண்7–16).

**(ii) தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் கேபிள் கட்டமைப்பிலும் அரசியல் தன்மை கொண்ட விளம்பரத்திற்கு சான்றளிப்பு – வானொலி மற்றும் திரையரங்குகளுக்கும் நீட்டிப்பு**

வானொலியில் வர்த்தக விளம்பரங்களுக்கான விதிக்கோவை திருத்தப்பட்டதன் விளைவாக,இந்தியத் தேர்தல் ஆணையம் தொலைக்காட்சி அலைவரிசைகளில்/கேபிள் கட்டமைப்புகளில் ஒளிபரப்பாகும் அரசியல் விளம்பரங்களை நுண்ணாய்வு செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட குழுக்கள், தனியார் பண்பலை அலைவரிசைகள் உட்பட வானொலியில் ஒலிபரப்பாகும் அரசியல் விளம்பரங்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்கும் என உத்தரவிட்டுள்ளது. (பக்கம் எண் 21–22) இந்த ஆணையம், தொலைக்காட்சி அலைவரிசைகள்/ கேபிள் கட்டமைப்புகள் மற்றும் பண்பலைஅலைவரிசை உட்பட வானொலியுடன் திரையரங்குகளையும் சேர்த்ததன் வாயிலாக சான்றளிப்புக் களங்களை விரிவுபடுத்தியுள்ளது. (பக்க எண்.56).

**(iii) தில்லியில் தலைமையிடம் கொண்டுள்ள யாதொரு தேசிய கட்சியின் / மாநிலக் கட்சியின் வட்டார தொழியிலும் பன்மொழிகளிலும் அரசியல் விளம்பரத்திற்குச் சான்றளிப்பு**

a) விளம்பரங்களுக்குச் சான்றளிப்பது தொடர்பாக ஆணையம், டில்லியில் தலைமையிடம் கொண்டுள்ள யாதொரு தேசிய கட்சிகளின் அல்லது மாநில கட்சிகளின் மத்திய அலுவலகமானது, அதே விளம்பரத்திற்கு பன்மொழிகளில் (இந்தி/ஆங்கிலம் மற்றும் வட்டார மொழிகளில்) சான்றளிப்பு கோருமாயின், சான்றளிக்கப்பட்ட கையெழுத்து பிரதிகளுடன் ஒவ்வொரு மொழிகளிலுமுள்ள விளம்பர சாராம்சத்தை, டில்லியிலுள்ள தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலுள்ள குழுவிடம் அளிக்கவேண்டும் என ஆணையம் மேலும் விளக்கமளித்தது. தில்லியில் தலைமையிடம் அமைந்துள்ள யாதொரு தேசிய கட்சிகளின் அல்லது மாநில கட்சிகளின் மத்திய அலுவலகமானது, யாதொரு வட்டார மொழி விளம்பரச் சான்றளிப்பு பெற விழையுமாயின்,(விளம்பரத்தின் யாதொரு இந்தி/ஆங்கில மொழிபெயர்ப்பு இல்லாத நிலையில்) சான்றளிப்பு கோருகின்ற விண்ணப்பத்தை, சம்பந்தப்பட்ட மாநிலத்தின் அதாவது வட்டார மொழி தொடர்புடைய மாநிலத்தின் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலுள்ள குழுவிடம் அளிக்கவேண்டும் (பக்க எண்.23–26)

(b) தில்லி NCT –இல் தலைமையிடம் கொண்டிராத பதிவுப்பெற்ற அரசியல் கட்சிகள்/ குழு / அமைப்பு / சங்கம், தில்லியில் அவர்களுடைய விளம்பரத்தை ஒலிபரப்புவதற்கு/ விழைகின்ற நேர்வில், கட்சி, தேர்தலில் போட்டியிடுகின்ற மாநிலத்தின் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவால் விளம்பர சான்றளிப்புக் கருதிப்பார்க்கப்படவேண்டும். (பக்கம் எண்.59)

**(iv) பொது இடத்தில் அரசியல் ஒலி–ஒளி விளம்பரம் காட்சிப்படுத்தல்**

பொது இடங்களில் அரசியல் விளம்பரத்தை/பிரச்சாரக் கருத்துக்களை ஒலி–ஒளி காட்சிப்படுத்தலுக்கு, ஆணையத்தின் நடைமுறையிலுள்ள ஆணைகளின்கீழ் குறிப்பிடப்பட்ட குழுவால் சான்றளிக்கப்பட வேண்டும். (பக்க எண்.59)

**2) <u>பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள்</u>**

பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் தொடர்பாக, இந்திய பத்திரிகையாளர் மன்றம் அளித்த பொருள் விளக்கத்தை, தேர்தல் ஆணையம் ஒப்புக்கொண்டுள்ளது. இந்திய பத்திரிகையாளர் மன்றம், பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் குறித்து அளித்த பொருள் விளக்கம் வருமாறு "யாதொரு ஊடகத்தில் (அச்சு மற்றும் மின்னணு)

ரொக்கத்திற்காக அல்லது பொருளுக்காக வெளியிடப்படுகின்ற யாதொரு செய்திகள் அல்லது பகுப்பாய்வு, (பக்க எண்.34)''

**(i) பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவதை தேர்தல் குற்றமாக்குவதற்கு, 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான குழுவின் கருத்துரு.**

யாதொரு வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்காக அல்லது யாதொரு வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பை பாதிக்கின்ற வகையில் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது மற்றும் அவ்வாறு வெளியிடுவதற்கு துணைப்போவதை, 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பகுதி–VIIஇன் அத்தியாயம் III–ன் கீழ், குறைந்தபட்சம் இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையுடன் கூடிய தேர்தல் குற்றமாகும் என வகைசெய்வதற்கு, 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு, ஆணையம், மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்திடம் கருத்து தெரிவித்துள்ளது. இந்த விவகாரம், மத்திய அரசிடம் நிலுவையிலுள்ளது (பக்க எண்.40–42).

**(ii) மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துவதற்கான ஆணையத்தின் உத்தரவு**

ஆணையம், ஊடகத்தில் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதை கண்காணிப்பதற்காக மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துவதற்கு, அனைத்து மாநிலங்களின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளிடம் உத்தரவிட்டுள்ளது. (பக்க எண் 30–31மற்றும் 44).

**(iii) ஊடக நிலையங்களின் நிலையான கட்டண வீத அட்டைகளின்படி வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்டதற்கான கருத்தியலான செலவினத்தை சேர்த்தல்.**

பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளையும் அரசியல் கட்சிகளுக்கு அல்லது அவர்களின் கட்சிக்காரர்களுக்கு / நிருவாகிகளுக்குச் சொந்தமான தொலைக்காட்சியில்/ கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பில் ஒளிபரப்பப்படும்விளம்பரங்களையும் ஒரே மாதிரியாகக் கையாளும் பொருட்டு நேர்விற்கேற்ப மக்களவை அல்லது மாநில/ மத்திய அரசின் நேரடிப் பகுதியின் சட்டமன்றப் பேரவையின்ஆட்சிக்காலம்முடிவடையும்நாளுக்கு ஆறுமாதங்களுக்கு முன்னர், மாநிலத்தில்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியில் ஒலிபரப்பப்படுகின்ற/ சுற்றனுப்பப்படுகின்ற தொலைக்காட்சி அலைவரிசைகள்/ வானொலி அலைவரிசைகள்/ நாளிதழ்களின் பட்டியல் ஒன்றும் அவர்களின் நிலையான கட்டண வீத அட்டையும், தலைமை தேர்தல் அதிகாரிகளால் பெறப்பட்டு ஆணையத்திற்கு அளிக்கப்படவேண்டும் என ஆணையம் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. மாவட்ட அளவிலான மற்றும் மாநில

அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவானது, வேட்பாளர்கள் தொடர்பான அனைத்து அரசியல் விளம்பரங்களை பகிரங்கமாக அல்லது இரகசியமாக கண்காணித்து வேட்பாளர், உண்மையான செலவுக்கான ஆவணங்களை அளிக்காத நேர்வில், அவர்களுடைய தேர்தல் செலவு கணக்கில், நிலையான கட்டண வீத அட்டைகளின் அடிப்படையில் கருத்தியலான செலவினத்தை சேர்ப்பதற்காக வேட்பாளர்களுக்கு அறிவிப்புகள் வழங்குவதற்கு தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தகவல் அளிக்கும் (பக்க எண்.45–46).

**(iv) பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்பட்ட குறிப்புரைகளை ஆராய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் அளவிலான குழு.**

ஆணையமானது, மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடமிருந்து பெறப்பட்ட குறிப்புரைகளைப் பரிசீலிப்பதற்கும், பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் தொடர்பாக யாதொரு மாநிலம்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியைச் சாராமல், ஆணையத்தால் நேரடியாக பெறப்பட்ட குறிப்புரைகளை ஆராய்ந்து பரிந்துரைப்பதற்கும் இந்திய தேர்தல் ஆணையம் அளவில் குழு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது (பக்க எண்.47–48)

**(v) ஆணையத்தின் 27.08.2012 ஆம் நாளிட்ட பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் குறித்த விரிவான வழிகாட்டிக்குறிப்புகள்**

பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படும் இனங்களை முனைப்பாக கண்காணிக்கும் பொருட்டு, ஆணையம், அனைத்து மாநிலங்களின்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு விரிவான வழிகாட்டிக்குறிப்புகளை வெளியிட்டுள்ளது. இதன்படி மாவட்ட அளவிலான குழுவானது, செய்தி என்ற போர்வையில் இடம்பெறும் அரசியல் விளம்பரத்தைக் கண்டறியும் பொருட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து நாளிதழ்களையும் மின்னணு ஊடகத்தையும் நுண்ணாய்வு செய்கிறது. சந்தேகத்திற்கிடமான வகையில், பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் பற்றி குழுவின் கவனத்திற்குவந்தவுடனேயே, வேட்பாளருக்கு உரியவாறு அறிவிப்பு வழங்கப்படுகிறது. அவர் தேர்தல் நடத்தும் அலுவலரால் வழங்கப்பட்ட அறிவிப்புக்கு 48 மணிநேரத்திற்குள் பதிலளிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு செய்யத் தவறினால், குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும். மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவை எதிர்த்து, மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் முடிவு பெறப்பட்ட 48 மணிநேரத்திற்குள் மேல் முறையீடு செய்யப்படலாம். மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவானது, மேல் முறையீடு பெறப்பட்ட 96 மணி நேரத்திற்குள் அது குறித்து தீர்மானிக்கும். வேட்பாளர், மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்

குழுவின் முடிவை எதிர்த்து, இந்தக் குழுவிடமிருந்து ஆணை பெறப்பட்ட 48 மணிநேரத்திற்குள் இந்திய தேர்தல் ஆணையத்திடம் மேல்முறையீடு செய்யலாம். குழுவின் முடிவே இறுதியானதாகும் (பக்க எண். 49–54).

**(vi) தலைமை தேர்தல் அதிகாரிகளிடம் அளிப்பதற்கான பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது பற்றி தெரிவிப்பதற்கான படிவங்கள்**

ஆணையம், பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படும் இனங்களை ஆணைத்திற்குத் தெரிவிப்பதற்காக, தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கான இரண்டு படிவங்களை உருவாக்கியுள்ளது. தலைமை தேர்தல் அதிகாரிகள், வேட்புமனுக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்ட நாளிலிருந்து, படிவத்தில் வாராந்திர அறிக்கையினையும், தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னர் பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்பட்டவை தொடர்பான அனைத்து உறுதிப்படுத்தப்பட்ட இனங்கள் பற்றி படிவம் 2–இல் விரிவான இறுதி அறிக்கையினையும் அளிக்க வேண்டும் (பக்க எண் 64–65).

**(vii) பணம் கொடுத்து செய்திகள் வெளியிடுவதில் சம்பந்தப்பட்ட அச்சு ஊடகத்திற்கு எதிராகவும் மின்னணு ஊடகத்திற்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கான இந்திய பத்திரிகையாளர் மன்றம் மற்றும் செய்தி ஒலிபரப்பாளர்கள் அமைப்பு**

மேற்சொன்ன அறிக்கைகளின் அடிப்படையில் சம்பத்தப்பட்ட அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகத்தின் பெயர்கள், தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக இந்திய பத்திரிகையாளர் மன்றத்திடமும் செய்தி ஒலிபரப்பாளர்கள் சங்கத்திடமும் அளிக்கப்படும் (பக்க எண் 54–57மற்றும் 58).

**3. சமூக ஊடகம்**

**(i) தேர்தல் பிரச்சாரத்தில் சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவது தொடர்பான ஆணையத்தின் கட்டளைகள்**

ஆணையம், 25.10.2013 அன்று சமூக ஊடகம் பற்றிய விரிவான வழிகாட்டிக்குறிப்புகளை வெளியிட்டுள்ளது. இது, வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் போது, வேட்பாளர்கள், சமூக ஊடகக் கணக்குகள் விவரங்களை அளிப்பது பற்றி தெரிவிக்கிறது. ஆணையம், சமூக ஊடக வலைத்தளங்களில் வெளியிடப்படவேண்டிய அரசியல் விளம்பரங்களையும், முன்சான்றளிப்பு வரையறையின் கீழ் கொண்டுவந்தது. சரியான கணக்கு செலவினத்தை குறித்து வைத்து, செலவின விவர அறிக்கையை அளிப்பதற்கும், சமூக ஊடகத்தில் விளம்பரங்களை வெளியிட்டதற்கான செலவினம் உட்பட தேர்தல் பிரச்சாரம் குறித்த அனைத்து செலவினத்தையும் வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் சேர்க்க வேண்டும் என ஆணையம் மேற்கொண்டும் உத்ரவிட்டது (பக்க எண்.60–62).

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுடில்லி–110 001

எண்.509/75 /2004,JS–1 நாள் 15.04.2004

பெறுநர்
அனைத்து மாநிலங்கள் மத்திய நேரடி ஆட்சிப்பகுதிகளின்
தலைமை தேர்தல் அதிகாரிகள்

பொருள்: தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் கேபிள் கட்டமைப்புகளில் வெளியிடப்படும் அரசியல் சார்ந்த விளம்பரங்கள் தொடர்பான 13.4.2004 ஆம் நாளிட்ட உச்ச நீதிமன்ற ஆணை.

--------

மாண்பமை உச்ச நீதிமன்றம், (தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்திற்கும், திருவாளர்கள் ஜெமினி தொலைக்காட்சி பிரைவேட் லிமிடேட் நிறுவனம் மற்றும் ஏனையோருக்குமிடையே நடைபெற்ற SLP 6679 /2004 ஆம் எண் வழக்கில்) 13–4–2003 ஆம் நாளிட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, ஆணையம் பிறப்பித்துள்ள 15.4.2004 ஆம் நாளிட்ட ஆணையின் நகலை இத்துடன் இணைக்க பணிக்கப்பட்டுள்ளேன்.

2. தேசிய தலைநகர பிரதேசத்தில் தலைமையிட அலுவலகத்தை கொண்டுள்ள யாதொரு அமைப்பு முறை சங்கங்கள் அல்லது குழுக்கள் அல்லது பதிவு பெற்றுள்ள யாதொரு அரசியல் கட்சி விளம்பரங்களை முன்கூட்டியே பார்வையிடுவதற்கும், நுண்ணாய்வு செய்வதற்கும் மற்றும் சான்றளிக்கவும், ஆணையம் கட்டளையிட்டுள்ளதை இங்கு அறியலாம். இந்த ஆணையின் 6(i) ஆம் பத்தியில் கட்டளை இட்டுள்ளவாறு, டெல்லி, தலைமைத் தேர்தல் அதிகாரி, குழு ஒன்றை அமைக்க வேண்டும். இது போலவே, 6(iii)பத்தியின்படி அரசியல் கட்சிகள், ஏனைய சங்கங்கள்/அவரவர் மாநிலங்களில், மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளில் தலைமையிட அலுவலகங்களைக் கொண்டுள்ள குழுக்கள் வாயிலாக, விண்ணப்பங்களை பசீலிப்பதற்கு, ஏனைய மாநிலங்களின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் குழுக்களை அமைக்க வேண்டும். ஆணையின் 6(v)ஆம் எண் பத்திபடி, சம்பந்தப்பட்ட தொகுதியிலிருந்து தேர்தலில் போட்டியிடுகின்ற தனிப்பட்ட வேட்பாளர்கள் வாயிலாக வெளியிடப்படும் விளம்பரங்களை முன்கூட்டியே பார்வையிடுவதற்கும், நுண்ணாய்வு செய்வதற்கும் சான்றளிக்கவும், நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த தேர்தல் நடத்தும் அதிகாரி, அப்பணிக்கென நியமிக்கப்பட்ட அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆந்திர

மாநிலம், கர்நாடகம், ஒரிசா, சிக்கிம், ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கு நடத்தப்படும் நடப்பு பொதுத் தேர்தலில் மற்றும் ஒரு சில மாநிலங்களின் இடைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள், விளம்பரங்களுக்கு சான்றிதழ் பெறுவதற்காக தாக்கல் செய்யும் விண்ணப்பங்களை, சம்பந்தப்பட்ட பேரவை தொகுதியை உள்ளடக்கிய நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரியே சரிபார்ப்பார்.

3. விளம்பரங்களுக்கு சான்றிதழ் பெறுவதற்காக தாக்கல் செய்யும் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குறித்து குழுக்கள்எடுத்துள்ள முடிவு தொடர்பான புகார்கள்/குறைகளை கவனிப்பதற்கென்று மேற்கொண்ட குழுக்களை அமைக்குமாறு, அனைத்து மாநிலங்களின் நேரடி/ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

4. இந்த ஆணையில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு A–ல் வரையறுக்கப்பட்டுள்ள படிவத்திலான விவர அறிக்கையில், சான்றிதழ் பெறுவதற்குரிய ஒவ்வொரு விண்ணப்பமும், சம்பந்தப்பட்ட குழுவின் முன்னர் அல்லது நியமிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரி முன்னர் அளிக்கப்பட வேண்டும். இந்த ஆணையில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு B–ல் அளிக்கப்பட்டுள்ளவாறான படிவத்தில், விளம்பரங்களை ஒளிபரப்புவதற்கான சான்றிதழ், குழுக்களால்/நியமிக்கப்பட்ட அதிகாரியால் அளிக்கப்பட வேண்டும். சான்றளிக்கப்பட்ட எழுத்துப்படியுடன் கூடிய மின்னணுப் படிவத்தில், வெளியிடக் கருதப்பட்டுள்ள விம்பரங்களை இரு நகல்களில் அளிக்குமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5.சான்றிதழ் கோரி வரப்பெறுகின்ற அனைத்து விண்ணப்பங்களும், பதிவேட்டில் முறையான ஆவணமாக வைத்து பராமரிக்கப்பட வேண்டும். இத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தொடர் எண் அளிக்கப்பட்டு, இத்தொடர் எண்கள், மின்னணு படிவத்தின் இரு நகல்களிலும் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் இதனைப் பெறுகின்ற அதிகாரி, இந்த மின்னணு நகலில் அவருடைய கையொப்பத்தை இடவேண்டும். சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், ஒளிபரப்புவதற்கு சான்றளிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் மின்னணு நகல் ஒன்றை குழுவால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி வைத்திருக்க வேண்டும்.

6. குழுக்கள் மற்றும் நியமன அதிகாரிகள் தங்களுடைய மாநிலங்களில், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் வெளியிடப்படவுள்ள விளம்பரங்களை முன்கூட்டியே பார்வையிடுவதற்கு,

நுண்ணாய்வு செய்வதற்கு தேவையான, அடிப்படை கட்டமைப்பு சாதனங்களை, அதாவது, தொலைக்காட்சிப் பெட்டி, வி.சி.ஆர்., வி.சி.டி. போன்ற சாதனங்களை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது அவற்றை வாங்குவதற்கு அனைத்து தலைமைத் தேர்தல் அதிகாரிகளும் உடனடி நடவடிக்கை எடுக்கலாம். இவ்வாறு வாங்கப்படும் எந்தவொரு சாதனமும், இதுபோன்ற சாதனங்களுக்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ள கட்டண வீதங்கள், நடைமுறைகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

7. தேர்தல் ஆணையத்தின் ஆணைக்கு பரவலான விளம்பரம் அளிக்கப்படலாம் மற்றும் இந்த ஆணை, குறிப்பாக அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள், தொலைக்காட்சி அலைவரிசைகள், கேபிள் கட்டமைப்புகள், மாநிலத்தின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலுள்ள அரசியல் கட்சிகள் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படலாம்.

8. இதனைப் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
ஒம் –
(K.F. வில்பிரெட்)
செயலாளர்.

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுடில்லி–110 001

எண்.509/75 /2004,JS–1 நாள் 15.04.2004

### ஆணை

1. கேபிள் தொலைக்காட்சியில் வெளியிடப்படும் விளம்பரம் வரையறுக்கப்பட்ட விளம்பரக் குறியீட்டை ஒத்திருந்தாலன்றி மற்றபடி, அதனை யாரும் ஒளிபரப்பக்கூடாது அல்லது மறு ஒளிப்பரப்பு செய்யக்கூடாது என்று 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் 6 ஆம் பிரிவு வகை செய்வதாலும்,

2. மேற்சென்ன 6 ஆம் பிரிவின் அடிப்படையில் விளம்பரக் குறியீட்டை நிர்ணயிக்கும் 1994 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்தல்) விதிகளைச் சேர்ந்த 7 ஆம் விதியின் (3) துணை விதி, முற்றிலும் அல்லது குறிப்பாக மதம் அல்லது அரசியல் தன்மை வாய்ந்த விளம்பரங்கள் மதம் அல்லது அரசியல் நோக்கத்தை குறித்து இருக்கக் கூடாது என்று வகை செய்வதாலும்,

3. ஆந்திரபிரதேச உயர்நீதிமன்றம் WPMP எண்.5214/2004–இல் பிறப்பித்த 23.03.2004 ஆம் நாளிட்ட ஆணை மற்றும் தீர்ப்பில் (ஜெமினி தொலைக்காட்சி தனியார் நிறுவனத்திற்கும் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் ஏனையோருக்குமிடையே நடைபெற்ற வழக்கிலும்) 1994 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்தல்) விதிகளைச் சேர்ந்த 7 ஆம் விதியின் (3) துணை விதியின் விதித்துறைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாலும்,

4. மாண்பமை உச்சநீதிமன்றம் 6679 /2004 ஆம் எண் சிறப்பு அனுமதி மனுவில் (சிவில்) செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்திற்கும், திருவாளர்கள் மினி தொலைக்காட்சி மற்றும் ஏனையோருக்குமிடையே நடைபெற்ற வழக்கில் 02.04.4004 ஆம் நாளிட்ட தன்னுடைய இடைக்கால ஆணையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட ஆணைக்கு பின்வருமாறு உத்தரவிட்டது:–

(i) இந்நாட்டின் சட்டத்திற்கு ஒத்திசைவாக இல்லாததும் ஒழுக்கம் மற்றும் கண்ணியத்தைப் பாதிப்பதும், உணர்ச்சியைத் தூண்டக்கூடியதும் அல்லது

அதிர்ச்சி தரக்கூடிய, வெறுப்பை மற்றும் புரட்சியை தூண்டுகிற விளம்பரங்களை எந்தவொரு கேபிள் ஆப்பரேட்டர்களும், அல்லது தொலைக்காட்சி அலைவரிசைகளும் ஒளிப்பரப்பக்கூடாது.

**(ii)** தொலைக்காட்சி ஒளிபரப்புகளை இந்திய தேர்தல் ஆணையம் கண்காணிக்கும்.

**(iii)** இத்தகைய விளம்பரங்களை வேட்பாளருக்கு ஏற்படும் செலவுகளாக சேர்க்கப்படலாமா அல்லது சேர்க்கப்படக்கூடாதா என்ற பிரச்சினை 05.04.2004 அன்று கருதிப் பார்க்கப்படும்.

**(iv)** இத்தகைய விளம்பரங்கள் சட்டப்படி உள்ளதா என்பதற்கான வழிமுறைகளை இந்திய தேர்தல் ஆணையம் வரையறுக்கும்.

5. ஆனால் மாண்பமை உச்சநீதிமன்றம் 6679/2004 ஆம் எண் சிறப்பு அனுமதி மனுவில் (சிவில்) அளித்த 13.04,2004 ஆம் நாளிட்ட தன்னுடைய ஆணையில் பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது.

– "ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர், 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் சில விதித்துறைகளையும், (சுருக்கமாக "சட்டம்" என்று குறிப்படப்படும்) இது, அவ்வப்போது திருத்தப்பட்டது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் அறிவது பயனுள்ளதாக இருக்கும். இச்சட்டத்தின் நோக்கம், இந்நாட்டில் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பின் இயக்கத்தை முறைப்படுத்துவது ஆகும். கேபிள் தொலைக்காட்சியில் வெளியிடப்படும் விளம்பரம் வரையறுக்கப்பட்ட விளம்பர குறியீட்டை ஒத்திருந்தாலேயன்றி கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் 6 ஆம் பிரிவு வகை செய்கிறது. இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு சட்டத்தின் விதித்துறைகள் யாதொரு கேபிள் இயக்குபவரால் மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்பட்டு வருகிறது என்று நம்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட யாதொரு அதிகாரிக்கு காரணம் இருப்பின், அவர் அத்தகைய கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பை இயக்குவதற்கு பயன்படுத்திய சாதனங்களை பறிமுதல் செய்யலாமென்று இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு வகை செய்கிறது. சட்டத்தின் விதித்துறைகளை மீறும் நேர்வில் சாதனங்களை பறிமுதல் செய்ய இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவு வகை செய்கிறது. சாதனத்தை பறிமுதல் செய்வதற்கும், அல்லது கைப்பற்றுவதற்கும் தண்டனை விதிப்பதற்கும் இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவும் வகை செய்கிறது.

மேலும், சட்டத்தின் விதித்துறைகளை மீறும் நேர்வில் தண்டனை அளிக்க இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு வகை செய்கிறது. வரையறுக்கப்பட்ட திட்ட குறியீடு மற்றும் விளம்பர குறியீட்டின்படி இல்லாத யாதொரு விளம்பரத்தையும், மதம், இனம், மொழி, சாதி அல்லது வகுப்பு அல்லது யாதொரு காரணங்களின் அடிப்படையில் பகைமையை தூண்டக்கூடியம் வெவ்வேறு மதம், இனம், மொழி அல்லது மத பிரிவுகள் அல்லது சாதி அல்லது சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமையின்மை அல்லது பகைமை உணர்வு அல்லது வெறுப்பு அல்லது குரோதத்தை ஏற்படத்தக்கூடியதும் பொது அமைதியை பாதிக்ககூடியதுமான யாதொரு விளம்பரத்தையும் ஒளிபரப்புவதிலிருந்து அல்லது மறு ஒளிப்பரப்பு செய்வதிலிருந்து தடை செய்வது அவசியம் அல்லது உகந்தது என்று அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி பொது நலனில் அக்கறை கொண்டு கருதினால், அவர் ஆணை பிறப்பிப்பதன் மூலம் அத்தகைய கேபிள் ஆப்பரேட்டரை தடை செய்ய 19 ஆம் பிரிவு வகை செய்கிறது. சட்டத்தின் விதித்துறைகளை செயல்படுத்துவதற்கு விதிகளை இயற்றுவதற்காக சட்டத்தின் 22 ஆம் பிரிவு மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. சட்டத்தின் 22 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசுக்கு 1994 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) விதிகள் (சுருக்கமாக "விதிகள்" என்று குறிப்படப்படும்) என்று அழைக்கப்படும் விதிகளை இயற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளைச் சேர்ந்த 7 ஆம் விதி யாதொரு விளம்பரம் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்படும் போது அவை இந்நாட்டின் சட்டத்துடன் ஒத்திருப்பதுடன், சந்தாதாரர்களின் ஒழுக்கம், கண்ணியம், மத உணர்வுகளை புண்படுத்தாத வகையில் அது வடிவமைக்கப்பட வேண்டுமென்று வகை செய்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் யாதொரு விதித்துறைக்கு முரணாக யாதொரு இனம், சாதி, நிறம், நாடு ஆகியவற்றை பழிப்பதும், யாதொரு வகையில் குற்றம், அமைதிக்குலைவு அல்லது வன்முறையை அல்லது சட்டத்தை மதிக்காத அல்லது வன்முறை தூண்டும் யாதொரு விளம்பரத்தையும் அனுமதிக்கக்கூடாது என்று 2 ஆம் துணை விதி வகை செய்கிறது. மேலும், முற்றிலும் அல்லது குறிப்பாக மதம் அல்லது அரசியல் தன்மை வாய்ந்த விளம்பரங்கள் மதம் அல்லது அரசியல் நோக்கத்தை குறிக்கும்படி இருக்கக்கூடாது என்று 3–ஆம் துணை விதி வகை செய்கிறது. இந்த பின்னணியில் பின்வரும் ஆணையை பிறப்பிக்க நாங்கள் கருதுகிறோம்.

தொலைக்காட்சி அலைவரிசையில் மற்றும் அல்லது கேபிள் கட்டமைப்பில் விளம்பரம் வெளியிட கருதியுள்ள பதிவுப்பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும், போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவரும், அத்தகைய விளம்பரம் ஒளிப்பரப்பு தொடங்குவதற்கு, உத்தேசிக்கப்பட்டுள்ள நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தேர்தல்

ஆணையத்திடம் நியமன அதிகாரியிடம் (தேர்தல் ஆணையம் நியமனம் செய்தவாறு) விண்ணப்பிக்க வேண்டும். வேறு நபர்கள் அல்லது பதிவு செய்யாத அரசியல் கட்சிகள் ஒளிபரப்பு நாளுக்கு 7 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். இத்தகைய விண்ணப்பங்களுடன் உத்தேச விளம்பரங்களின் இரு படிகள் மின்னணு வடிவிலும், உரியவாறு சான்றொப்பமிட்ட அதன் வாசகங்களும் இணைத்தனுப்பப்பட வேண்டும். முதல் கட்ட தேர்தல்களை பொறுத்தவரையில் விண்ணப்பம், வரப்பெற்ற இரு நாட்களுக்குள் முடிவு செய்யப்பட வேண்டும். அதன் மீது முடிவு எடுக்கப்படும் வரை 02.04.2004 ஆம் நாளிட்ட எங்களுடைய ஆணை பொருந்தும். அதற்கடுத்த கட்ட தேர்தல்களை பொறுத்தவரையில் விண்ணப்பம், வரப்பெற்ற மூன்று நாட்களுக்குள் முடிவு செய்யப்பட வேண்டும். அதன்மீது முடிவு எடுக்கப்படும் வரை 02.04.2004 ஆம் நாளிட்ட எங்களுடைய ஆணை பொருந்தும். அத்தகைய விண்ணப்பங்களை முடிவு செய்கையில் விளம்பரத்தின் யாதொரு பகுதிகளை நீக்குவதற்கும் மாற்றுவதற்கும் உத்தரவிட இந்திய தேர்தல் ஆணையத்திற்கு நியமன அதிகாரிக்கு உரிமை உண்டு.

சான்றளிப்புக்கான விண்ணப்பத்தில் பின்வரும் விவரங்கள் இருக்க வேண்டும்:—

(a) விளம்பரத்தின் தயாரிப்புச் செலவு

(b) தொலைக்காட்சி அலைவரிசையில் அல்லது கேபிள் கட்டமைப்பில் அத்தகைய விளம்பரத்தை ஒளிப்பரப்பு செய்வதற்கான தோராயமான செலவு மற்றும் அவை ஒளிப்பரப்பப்படும் தடவைகளின் எண்ணிக்கை. ஒவ்வொரு தடவைக்கும் விதிக்க கருதியுள்ள கட்டண வீதங்கள்.

(c) விளம்பரம், வேட்பாளர், வேட்பாளர்களின் கட்சிகளின் வெற்றிவாய்ப்பை மேம்படுத்துவதற்காக செய்யப்படுகிறதா என்பதற்கான விவர அறிக்கை அதில் இருக்க வேண்டும்.

(d) அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர, வேறு யாதொரு நபருக்காக விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தால், அவர் இந்த விளம்பரம் அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் பயனுக்காக அளிக்கப்படவில்லை யென்றும் இந்த விளம்பரத்திற்கு யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் பொறுப்பேற்கவில்லை அல்லது விளம்பரம் அளிக்கவில்லை அல்லது தொகை செலுத்தவில்லை என்றும் உறுதிமொழி அளிக்கவேண்டும் மற்றும்

(e) அனைத்து தொகைகளும், காசோலை அல்லது கேட்பு வரைவோலை மூலம் அளிக்கப்பட்டதற்கான விவர அறிக்கை.

சட்டத்தின் 2(a) ஆம் பிரிவின் படி "அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி" என்பது (a) மாவட்ட மாஜிஸ்டிரேட் (b) உட்கோட்ட மாஜிஸ்டிரேட் அல்லது (c) காவல்துறை ஆணையாளர் போன்று உள்ளூர் அதிகாரவரம்பிற்குட்பட்ட அதிகாரி என்று பொருள்படும் என்று நாங்கள் அறிகிறோம். இதுபோன்றே யாதொரு தேர்தல் நடத்துவதற்காக மாநில அரசால் நியமிக்கப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி, தேர்தல் நடத்தும் உதவி அதிகாரி, வாக்குச்சாவடி தலைமை அதிகாரி, வாக்குப்பதிவு அதிகாரி மற்றும் இப்பகுதியின் கீழ் நியமிக்கப்பட்ட ஏனைய அதிகாரிகள் அப்போதைக்கு நியமனம் செய்யப்பட்ட யாதொரு காவல்துறை அதிகாரி ஆகியோர் அத்தகைய தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட அந்நாளிலிருந்து தொடங்கி, தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் நாள் வரையிலான கால அளவிற்கு தேர்தல் ஆணையத்தால் முகமையில் நியமிக்கப்படுவர் என்றும், அக்கால அளவில் அத்தகைய அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை, ஒழுங்குமுறைக்கு உட்பட்டவர்கள் என்றும், 1952 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்28 (A) பிரிவு வகை செய்கிறது.

பல்வேறு கேபிள் கட்டமைப்புகளிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் வெளியிடப்படும் அனைத்து விளம்பரங்கள் குறித்து முன்னரே கண்காணிப்பது என்பது தேர்தல் ஆணையத்தால் இயலாது என்பதால் தேர்தல் ஆணையம் தன்னுடைய சார்பாக அனைத்து மாநலிங்கள் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சி பகுதிகளில், உட்கோட்ட மாஜிஸ்டிரேட் அல்லது மாநில ஆட்சிப் பணி அதிகாரியின் பதவித்தரத்திற்கு குறையாத அந்தந்த மாவட்ட மாஜிஸ்டிரேட்க்கு இது சார்பாக அதிகாரங்களை பிரித்தளிப்பதற்காக தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரமளிப்பது அவசியமாகும். தேர்தல் ஆணையம், பொதுவான ஆணை பிறப்பிப்பதன் மூலம் இவ்வாறு செய்யலாம். அத்தகைய அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையின் கீழ் செயல்படுவார்கள். தேர்தல் ஆணையம், நேர்விற்கேற்ப ஒவ்வொரு மாநிலம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அதிகாரங்களை பிரித்தளிக்கும்.

ஒவ்வொரு மாநிலம் அல்லது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் தலைமை தேர்தல் அதிகாரி விளம்பரத்திற்கு சான்றளிப்பு வழங்க அல்லது மறுக்க எடுத்த முடிவு தொடர்பாக யாதொரு அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளரின் அல்லது யாதொரு நபரின் புகார்கள் அல்லது குறைகளை கவனிக்க குழு ஒன்றை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட குழு, தான் எடுத்த முடிவை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்கும்.

அவ்வாறு அமைக்கப்பட்ட குழு, தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையின் கீழ் செயல்படும்.

குழு அளித்த முடிவு, மேலே கூறப்பட்டுள்ளவற்றிக்கு உட்பட்ட மின்னணு ஊடகத்தில் விளம்பரம் செய்வதற்காக விண்ணப்பிக்கும் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் அல்லது யாதொரு நபரை கட்டுப்படுத்துவதோடு அவர்கள் அதனை பின்பற்றவேண்டும்.

நேர்விற்கேற்ப, நீக்குவதற்கு அல்லது மாற்றி அமைப்பதற்கு அளிக்கப்பட்ட கருத்துரைகளும், குறிப்புரைகளும் அத்தகைய தகவல் வரப்பெற்றதிலிருந்து 24 மணி நேரத்திற்குள் சம்மந்தப்பட்ட அரசியல் கட்சியை அல்லது போட்டியிடும் வேட்பாளரை அல்லது வேறு ஒரு நபரை கட்டுப்படுத்துவதோடு அவர்கள் அதனை பின்பற்றி நடக்கவேண்டும். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட விளம்பரம் ஆய்விற்காகவும், சான்றளிப்பிற்காகவும் மீண்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும்,

1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 126 ஆம் பிரிவைச் சேர்ந்த விதித்துறைகள் இந்த ஆணையின் கீழ் வரும் விளம்பரங்களுக்கு பொருந்தும் என்று நாங்கள் தெளிவுப்படுத்துகிறோம்.

குழு, அல்லது நியமன அதிகாரி/தேர்தல் ஆணையம் எடுத்த முடிவால் பாதிக்கப்பட்ட அரசியல் கட்சி, வேட்பாளர் அல்லது யாதொரு நபர் விளக்கம் பெறுவதற்கு அல்லது பொருத்தமான ஆணை பெறுவதற்கு இந்நீதிமன்றத்தை மட்டுமே அணுகவேண்டும் என்பது வெளிப்படை. இத்தகைய விளம்பரத்தை எதிர்த்து செய்யப்பட்ட யாதொரு மனுவை வேறு நீதிமன்றம் அல்லது நடுவர் நீதிமன்றம் அல்லது அதிகாரமன்றம் ஏற்றுக்கொள்ளாது. இந்த ஆணை, 16.04.2004 விருந்து செயலுக்கு வரத் தொடங்கி 10.05.2004 வரை செயலுக்கு வரும். இந்த ஆணை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 142 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது. இது, கேபிள் கட்டமைப்பு மற்றும் அல்லது தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் கேபிள் இயக்குபவர்கள் உட்பட மின்னணு ஊடகத்தில் விளம்பரம் செய்வதற்காக கருதிய அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், நபர்கள், பல நபர்கள் அடங்கிய குழு அல்லது பொறுப்புக் கழகத்தை கட்டுப்படுத்தும்.

அத்தகைய விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதைக் கண்காணிக்க தேவைப்படக்கூடிய பணியாளர்களைக் கேட்டுப் பெற தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரமுண்டு. இந்த ஆணை (அ) இச்சட்டத்தின் யாதொரு விதித்துறைகள் மீறப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையம் ஐயமின்றித் தெரிந்தால், அத்தகைய மீறல்களை உடனடியாக நிறுத்தும்படி மீறுபவர்களுக்கு ஆணை பிறப்பிக்கும். அத்தகைய சாதனங்களைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிடும்

அதிகாரமும் ஆணையத்திற்கு உண்டு. ஆணைகள் சேர்ப்பிக்கப்பட்ட நபர்கள், அந்த ஆணைகள் ஒவ்வொன்றின்படியும் உடனடியாகச் செயலாற்ற வேண்டும்.

விளம்பரங்களைக் கண்காணிப்பதற்காகும் செலவை செய்வதற்கான நிதியை, மத்திய அரசு, தேர்தல் ஆணையத்திடம் அளிக்க வேண்டும். மத்திய அரசு, மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக, இந்த ஆணையை போதுமான அளவிற்கு விளம்பரப்படுத்த வேண்டும்.

இந்த ஆணை இந்த நீதிமன்றம், ஏப்ரல் 2–ஆம் தேதி பிறப்பித்த ஆணையின் தொடர்ச்சி ஆகும். இந்த ஆணை, 2004 மே 10 ஆம் தேதி வரையில், இடைக்கால நடவடிக்கையாகச் செயலில் இருக்கும்.

மேற்கூறிய ஆணைக்கு உட்பட்டு, ஆந்திர மாநில உயர்நீதிமன்றம் பிறப்பித்த 23–3–2004 ஆம் நாளிட்ட தீர்ப்பு நிறுத்தி வைக்கப்படுகிறது. இந்த ஆணை மதிப்பைக் குறைக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்டதல்ல. மேற்படிச் சட்டத்தின் விதித் துறைகள் மீறப்படுவது தொடர்பாக, மத்திய அரசிடமுள்ள அதிகாரங்களுடன் கூடுதலாக அதிகாரம் வழங்கும் வகையில் பிறப்பிக்கப்பட்டதாகும்.

**6.** ஆகவே, தற்போது, மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் மேற்கூறிய உத்தரவுகளைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையம் பின்வருமாறு கட்டளையிடுகிறது.

(i) கீழே, (ii) பத்திகளில் குறிப்பிடப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் விண்ணப்பங்கள் குறித்து ஆராய, பின்வரும் நபர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைக்கும்படி டில்லி, தலைமைத் தேர்தல் அதிகாரி இதனால் பணிக்கப்படுகிறார்.

(a) இணை தலைமைத் தேர்தல் அதிகாரி – தலைவர்.

(b) டில்லியிலுள்ள யாதொரு நாடாளுமன்றத் தொகுதிகளில் தேர்தல் நடத்தும் அதிகாரி.

(c) செய்தி – விளம்பரத் துறை அமைச்சகத்திடமிருந்து கேட்டுப் பெறப்படும் – வகை I அதிகாரி பதவித்தரத்திற்குக் குறையாத வல்லுநராக உள்ள அதிகாரி.

(ii) தொலைக்காட்சி அலைவரிசையில் அல்லது கேபிள் கட்டமைப்பில் சேர்ப்பதற்கான யாதொரு விளம்பரத்திற்கு சான்றளிப்பு அளிப்பதற்கான பின்வருபவர்கள் செய்யும் விண்ணப்பங்களை இக்குழு ஏற்றுக் கொள்ளும்.

(a) டில்லியின் NCT–இல் தலைமையிடங்கள் உள்ள பதிவு செய்யபப்டட அனைத்து அரசியல் கட்சிகள்

(b) டில்லியின் NCT–இல் தலைமையிடங்கள் உள்ள அனைத்து பிரிவுகள் அல்லது அமைப்புகள் அல்லது சங்கங்கள் அல்லது நபர்கள்.

(iii) மேலே (iv)பத்தியில் குறிப்படப்பட்ட அரசியல் கட்சிகளின் அமைப்புகளும் செய்த விண்ணப்பங்களைப் பரிசீலிக்க பின்வரும் குழுவை அமைக்குமாறு ஒவ்வொரு மாநிலத்தின்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் தலைமை தேர்தல் அதிகாரிக்கு இதனால் உத்தரவிடப்படுகிறது.

(a) கூடுதல்/ இணை தலைமை தேர்தல் அதிகாரி – தலைவர்.

(b) மாநிலத்தின் தலைநகரில் அமைந்துள்ள யாதொரு நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரி.

(c) செய்தி – விளம்பரத் துறை அமைச்சகத்திடமிருந்து கேட்டுப் பெறப்படும் வகை I அதிகாரி பதவித் தரத்திற்குக் குறையாத வல்லுநராக உள்ள அதிகாரி.

(iv) பத்தி (iii) இல் அமைக்கப்பட்ட குழு தொலைக்காட்சி அலைவரிசையிலும் கேபிள் கட்டமைப்பிலும், விளம்பரங்களுக்கு சான்றளிப்பதற்காக பின்வருவனவர்கள் செய்யும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

(a) மாநிலத்தின் /மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியில் தலைமையிடம் உள்ள பதிவு பெற்ற அனைத்து அரசியல் கட்சிகள்.

(b) மாநிலத்தின்/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியில் உள்ள அனைத்து அமைப்புகள் அல்லது தனிநபர் குழுக்கள் அல்லது சங்கங்கள், தங்களுடைய பதிவு செய்யப்பட்ட அலுவலகங்களைக் கொண்டிருப்பவை.

(v) நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்தலில் போட்டியிடுகின்ற தனிப்பட்ட வேட்பாளர் ஒருவர், கேபிள் கட்டமைப்பில் அல்லது தொலைக்காட்சி அலைவரிசையில் வெளியிடக் கருதியுள்ள விளம்பரங்களுக்கு சான்றிதழ் பெறுவதற்காக தாக்கல் செய்யும்

விண்ணப்பங்களை பரிசீலிக்கும் செயல்நோக்கத்திற்காக, அந்நாட்டின் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த தேர்தல் நடத்தும் அதிகாரி, நியமன அதிகாரியாக இதனால்அறிவிக்கப்படுகிறார். இத்தகைய நியமன அதிகாரி, தேர்தல் நடத்தும் அதிகாரியாக இருப்பார் மற்றும் நாடாளுமன்றத் தொகுதிக்குள் வரும் சட்டப் பேரவைத்தொகுதிகளில் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவர்.விண்ணப்பங்களுக்கு சான்றளிக்கும் பணியில், மேற்சொன்ன தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு, மாநிலத்திற்குரியசிவில் பணிகளைச் சேர்ந்த உட்கோட்ட மாஜிஸ்டிரேட் பதவித் தரத்திற்கு குறையாத பதவித் தரத்திலுள்ள யாதொரு, தேர்தல் நடத்தும் உதவி அதிகாரியும் ஒத்துழைக்கலாம்.

7. விளம்பரங்களுக்கு சான்றளிக்க அனுமதிப்பது அல்லது மறுப்பது தொடர்பான முடிவால் பாதிக்கப்படுகின்ற யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லது ஏனைய பிற நபரிடமிருந்து பெறப்படுகின்ற புகார்கள்/ குறைபாடுகளை பரிசீலிப்பதற்கான, ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியைச் சேர்ந்த தலைமைத் தேர்தல் அதிகாரி பின்வரும் குழுவை அமைப்பார்.

(i) தலைமைத் தேர்தல் அதிகாரி –தலைவர்

(ii) இந்திய தேர்தல்ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள யாதொரு பார்வையாளர்.

(iii) பத்தி 6 (i) மற்றும் 6 (iii) பத்திகளில் குறிப்பிடப்பட்டவர் நீங்கலாக, வல்லுநர் ஒருவரை, குழு சேர்க்க வேண்டும்.

8. பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகள், தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் வாயிலாக வெளியிடப்படும் யாதொரு விளம்பரத்திற்கும் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் நேர்விற்கேற்ப 6 (i) மற்றும் 6 (iii) ஆகிய பத்திகளில் குறிப்படப்பட்டுள்ள குழுக்களிடம் அல்லது மேலே 6 (iv) பத்தியில் குறிப்படப்பட்டுள்ளவாறான நியமன அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். மேலும், இத்தகைய விளம்பரங்கள் ஒளிபரப்பத் தொடங்குகின்ற நாளுக்கு முன்னதாக, மூன்று நாட்களுக்கு மிகாமல், இவை தாக்கல் செய்யப்பட வேண்டும். முதல் கட்ட தேர்தல் இனங்களில், இத்தகைய விண்ணப்பங்கள், வரப்பெற்ற இரண்டு நாட்களுக்குள் (2) சான்றளிக்கப்பட்டுவிடும், மற்றும் இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் வரையில், இதற்கு, 2–4–2004 ஆம் நாளிட்ட உச்ச நீதி மன்ற ஆணை பொருந்தும்.

9. விளம்பரங்களுக்குரிய சான்றிதழைப் பெறுவதற்கு, ஏனைய பிற நபர் அல்லது பதிவு செய்யப்படாத அரசியல் கட்சிகள் விண்ணப்பிக்கும்போது, விளம்பரம் ஒளிபரப்பப்படவுள்ள நாளுக்கு முன்பாக ஏழு நாட்களுக்கு (7) மேல் மிகாமல் இந்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

10. இத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும், பின்வரும் இணைப்புகளுடன், இணைப்பு–A–ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறான படிவத்தில் இருக்க வேண்டும்.

(i) உரியவாறு சான்றொப்பமிடப்பட்ட எழுத்துப்படியுடன் மின்னணுப் படிவத்தில் வெளியிடக்கருதுகிற விளம்பரத்தின் இரு நகல்கள்.

(ii) சான்றளிப்பதற்கான விண்ணப்பம்பின்வரும் விளம்பரங்களைக் கொண்டிருக்கும்.

a) விளம்பரத்தின் தயாரிப்புச் செலவு.
b) வெளியிடப்படும் விளம்பரங்களில் இடையில் சேர்க்கப்பட்டுள்ள பகுதி விவரங்களுடன், தொலைக்காட்சி அலைவரிசையில் அல்லது கேபிள் கட்ட வெளியிடக்கருதியுள்ள இத்தகைய விளம்பரங்களின் தோராயாமான செலவு இடையில் சேர்க்கப்படுகின்ற இத்தகைய ஒவ்வொரு பகுதிக்கும் விதிக்க கருதப்படும் வீதம்.
c) தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின், அரசியல் கட்சிகள் வாய்ப்பு வள மேம்படுத்துவதற்காக, விளம்பரங்களில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள், குறித்த அறிக்கை.
d) அரசியல் கட்சியை சாராத யாதொரு ஏனைய நபரால் அல்லது வேட்பாளரால் ஏதேனும் பிறப்பிக்கப்படுமாயின், அந்த நபர், அரசியல் கட்சியின் அல்லது வேட்பாளர் பயனுக்காக வெளியிடப்படவில்லை என்று அந்த நபர் உறுதிமொழி அளிக்க மன்றும் மேற்சொன்ன விளம்பரத்திற்கு யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் பொறுப்பேற்கவில்லை/ அளிக்கவில்லை அல்லது இதற்காக தொகை செலுத்தவில்லை என்றும் உறுதி அளிக்க வேண்டும்.
e) காசோலையாக அல்லது கேட்புக் காசோலையாக அனைத்து தொகைகளும் செலுத்தப்படும் என்பதற்கான விவர அறிக்கை.

11. விளம்பரத்திற்கு சான்றளிப்பதற்குரிய விண்ணப்பங்கள் குறித்து முடிவு எடுக்கும்போது மேலே பத்தி 6 (i) மற்றும் 6 (iii) ஆகிய பத்திகளின்படி அமைக்கப்பட்டுள்ள குழுக்களுக்கு அல்லது மேலே 6(v) பத்தி உள்ளவாறான நியமன அதிகாரிக்கு அல்லது மேலே 7 ஆம் பத்தியில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவின் முன் இது வைக்கப்பட்டு, இந்த விளம்பரத்தின்

யாதொரு பாகத்தையும் நீக்குவதற்கும் திருத்தியமைப்பதற்கும் கட்டளையிடப்படும். விளம்பரத்தில் ஏதேனுமொரு பாகத்தை நீக்குவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு தன்னுடைய கருத்துக்களை கருத்துரைகளை தெரிவிக்கும் இத்தகைய ஒவ்வொரு ஆணைக்கும், இந்த தகவல் வரப்பெற்றதிலிருந்து 24 மணி நேரத்திற்குள், சம்பந்தப்பட்ட யாதொரு அரசியல் கட்சி அல்லது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லது ஏனைய பிற நபரும் கட்டுப்பட வேண்டும் மற்றும் இதற்கிணங்க நடத்தல் வேண்டும். இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட விளம்பரம், ஆய்விற்காகவும், சான்றளிப்பதற்காகவும் மீண்டும் அளிக்கப்பட வேண்டும்.

12. அந்தந்த நேர்விற்கேற்ப, மேலே (i) (iii) ஆம் பத்திகளிலுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் அல்லது நியமன அதிகாரி அல்லது மேலே 7 ஆம் பத்தியிலுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழு, இந்த விளம்பரம் சட்டத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலும், மேலே 4, 5 ஆம் பத்திகள் சேர்க்கப்பட்டுள்ளவாறான உச்ச நீதி மன்ற கட்டளைகளுக்கிணங்க இருப்பதாகவும் மன நிறைவு அடைகிறபோது இவர்கள், சம்பபந்தப்பட்ட விளம்பரம் ஒளிபரப்பு செய்வதற்கு தகுதியுடையதாக இருக்கிறது என்று சான்றளிக்க வேண்டும். இவ்வாறு சான்றளிப்பதற்கான படிவம், இணைப்பு–B–ல் உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் 13.4.2004 ஆம் நாளிட்ட ஆணையில் கண்டுள்ள கட்டளைகளை சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

13. இந்த ஆணை 10.5.2004 அன்று வரை செயலில் இருக்கும் இந்த ஆணை, எல்லா அரசியல் கட்சிகளையும், வேட்பாளர்களையும், நபர்களையும் நபர் குழுக்களையும், கேபிள் நெட்ஒர்க் மற்றும் அல்லது தொலைபேசி அலைவரிசைகளில், அது போலவே கேபிள் இயக்குபவர்கள் உள்ளிட்ட மின்னணு ஊடகத்தில் விளம்பரத்தை இணைக்கக் கருதுகின்ற அறக்கட்டளை ஆகியோரையும் கட்டுப்படுத்தும்.

தங்கள் உண்மையுள்ள,
ஒம் –
(K.F. வில்பிரெட்)
செயலாளர்.

இணைப்பு – A

## விளம்பரச் சான்றிதழ் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்

(i) விண்ணப்பதாரரின் பெயரும் முழு முகவரியும்

(ii) விளம்பரம், அரசியல் கட்சியினுடையதா போட்டியிடும் வேட்பாளருடையதா, வேறு யாரொரு நபருடையதா குழுக்களுடையதா, சங்கத்தினுடையதா நிறுவனத்தினுடையதா அல்லது பொறுப்புறுதி நிறுவனத்தினுடையதா (பெயரை அளிக்கவும்)

(iii) (a) அரசியல் கட்சியெனில் கட்சியின் தகுதி நிலை (தேசிய மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்டதா அங்கீகாரம் பெறாத கட்சியா)

(b) வேட்பாளரெனில் போட்டியிடும் நாடாளுமன்றத் தொகுதியின் சட்டப்பேரவைத் தொகுதியின் பெயர்

(iv) அரசியல் கட்சியின் குழுவின் அல்லது நபர்களின் அமைப்பின் சங்கத்தின் நிறுவனத்தின் பொறுப்புறுதி நிறுவனத்தின் தலைமையகத்தின்முகவரி

(v) விளம்பரம் ஒளிபரப்பு செய்யக் கருதப்பட்ட அலைவரிசைகள் கம்பிவட கட்டமைப்புகள்.

(vi) (a) விளம்பரம் யாதொரு வேட்பாளரின் (வேட்பாளர்களின்) தேர்தல் வெற்றி வாய்ப்புக்கானதா–

(b) அவ்வாறாயின், அவ்வேட்பாளரின் வேட்பாளர்களின் பெயர், முழு முகவரிமற்றும் தொகுதி (தொகுதிகளின் பெயர் (பெயர்கள்).

(vii) விளம்பரம் அளிக்கப்பட்ட நாள்

(viii) விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்ட மொழி(கள்) விளம்பரம் முறையாக சான்றொப்பமளிக்கப்பட்ட கையெழுத்துப்படியுடன் கூடிய இரண்டு நகல் மின்னணு வடிவில் அளிக்கப்பட வேண்டும்).

(ix) விளம்பரத்தலைப்பு

(x) விளம்பரத் தயாரிப்பிற்கான செலவு

(xi) நிகழ்ச்சிகளுக்கிடையே ஒளிபரப்பு செய்யப்படுகிற எண்ணிக்கை பற்றிய விவரத்துடன் கருதப்பட்ட ஒளிபரப்பிற்கான தோராயமான கட்டணம் மற்றும் ஒவ்வொரு ஒளிபரப்பிற்கான கருதப்பட்ட கட்டணம்.

(xii) இதற்கான மொத்த செலவினம் (ரூபாயில்)

II.

நான், ------------------ என்பவரின் மகனாகிய–மகளாகிய–மனைவியாகிய திரு–திருமதி ------------------ என்கிற நான் --------------------- (முழு முகவரி) விளம்பரத்தின் தயாரிப்பு மற்றும் ஒளிபரப்பிற்கான அனைத்துத் தொகைகளையும் காசோலையாக / கேட்பு வரைவோலையாக மட்டுமே அளிப்பேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:

நாள்:

III.

(அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் தவிர யாதொரு நபர் நபர்களுக்குப் பொருந்தும்)

நான், -------------- என்பவரின் மகனாகிய-மகளாகிய-மனைவியாகிய திரு.திருமதி ----
---------- என்கிற நான் முழு முகவரி இத்துடன் அளிக்கப்பட்ட விளம்பரம், விளரம்பரங்கள், எந்தவொரு அரசியல் கட்சி அல்லது எந்தவொரு வேட்பாளரின் ஆதாயத்திற்காக ஆதரவளிக்கப்படவில்லை-தரகுத்தொகை அளிக்கப்படவில்லை அல்லது தொகை வழங்கப்படவில்லை மற்றும் எந்தவொரு அரசியல் கட்சியால் அல்லது வேட்பாளரால் ஆதரவளிக்கப்படவில்லை தரகுத்தொகை அளிக்கப்படவில்லை அல்லது தொகை வழங்கப்படவில்லை என்று இதன்மூலம் தெரிவித்து உறுதிகூறுகிறேன்.

இடம்: விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

## ஒளிபரப்பவுள்ள விளம்பரத்திற்கான சான்றிதழ்

I.

(i) விண்ணப்பிப்பவரின், அரசியல் கட்சியின் வேட்பாளரின் நபர் குழுவின் சங்கத்தின் நிறுவனத்தின் பொறுப்புறுதி நிறுவனத்தின் பெயரும் முகவரியும்

(ii) விளம்பரத்தின் தலைப்பு

(iii) விளம்பரம் ஒளிபரப்பாகவுள்ள கால அளவு

(iv) விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி(மொழிகள்)

(v) விளம்பரம் அளிக்கப்பட்ட நாள்

(vi) ஒளிபரப்பிற்கான சான்றளிப்பு நாள்

II. மாண்பமை இந்தியா உச்சநீதி மன்ற வழிகாட்டுதல்களின்படி மேற்கண்ட விளம்பரம், ஒளிபரப்புவதற்குத் தகுதி வாய்ந்தது என்று சான்றளிக்கப்படுகிறது.

தலைவர் /குழு உறுப்பினர்கள்/

நியமனஅலுவலரின் கையொப்பம்

______________________

______________________

______________________

இடம்:

நாள்:

ரீதியான விளம்பரம் செய்வதற்கான விதிக்கோவையின் II (4) பகுதி, கீழ்க்காணும் வரம்பு நிபந்தனை சேர்க்கப்பட்டதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்து என்று தெரிவித்துள்ளது.

"ஆனால், தேர்தல் நடத்தை விதித்தொகுப்பு நடைமுறையில் இருக்கிறபோது மக்களவைக்கான பொதுத்தேர்தல் மாநிலச்சட்டமன்றங்களுக்கான பொதுத்தேர்தல் உள்ளாட்சி மன்றங்களுக்கான பொதுத்தேர்தல் தொடர்பாக, வரையறுக்கப்பட்ட கட்டணம் செலுத்துவதன் மூலம், அரசியல் கட்சிகளிடமிருந்து வேட்பாளர்களிடமிருந்து ஏனைய பிற நபரிடமிருந்து ஸ்பாட்ஸ் மற்றும் ஜிங்கில்ஸ் வடிவில் வரப்பெறுகிற விளம்பரங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் தொடர்பான அத்தகைய விளம்பரங்களைப் பொறுத்த நேர்வில், இந்திய தேர்தல் ஆணையம் இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டிகீழ் உள்ள அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்த நேர்வில், மாநில தேர்தல் ஆணையங்கள், விளம்பரம் ஒளிபரப்பப்படுவதற்கு முன்னர், அவை கூர்ந்தாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்."

3. மேற்சொன்னவற்றைக் கருத்திற்கொண்டு மக்களவைக்கு அல்லது யாதொரு மாநிலச் சட்டமன்றத்திற்கு மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிக்கு, பொதுத்தேர்தல் தொடர்பான மாதிரி தேர்தல் நடத்தை விதித்தொகுப்பு நடைமுறையில் இருக்கிற கால அளவில், தொலைக்காட்சி அலைவரிசைகள் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புகள் ஆகியவற்றில் அரசியல் தன்மை வாய்ந்த விளம்பரங்கள் ஒளிப்பரப்பபடுவது தொடர்பான தேர்தல் ஆணையத்தின் 15.4.2004 ஆம் நாளிட்ட ஆணை, தனியார் பண்பலை வானொலி (FM) மூலம் ஒலிபரப்பு செய்யப்படுகிற விளம்பரங்களுக்கும் பொருந்தும் என்று கட்டளையிட்டுள்ளது. அதற்கிணங்க, அரசியல் தன்மை வாய்ந்த யாதொரு விளம்பரத்தை, வானொலி பண்பலை அலைவரிசை உட்பட, வானிலை மூலம் ஒலிபரப்புவதற்காக, விளம்பரத்தை ஒலிபரப்புவதற்கு முன்னர் கூர்ந்தாய்வு செய்வதற்கும், விளம்பரத்தை ஒலிபரப்புதற்கு அனுமதியளிப்பதற்காக சான்றளிப்பதற்கும் ஏதுவாக, ஒலிபரப்பு சான்றளிப்பு விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட மாநிலத்தின் தலைமை தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழுவிடம் அளிக்கவேண்டும். தொலைக்காட்சி அலைவரிசையில் கேபிள் கட்டமைப்பில் விளம்பரம் செய்வதற்காக வரையறுக்கப்பட்ட அதே படிவத்தில் (காண்க 15.4.2004 ஆம் நாளிட்ட ஆணை) ஒலிநாடா குறுந்தகடு ஆகியவற்றுடன, ஒலிபரப்பக் கருதப்பட்ட விளம்பரத்தின் சான்றொப்பமிடப்பட்ட எழுத்துப்படி ஆகியவையும் விண்ணப்பத்துடன் அளிக்கப்பட வேண்டும். விளம்பரச் சான்றளிப்பிற்கான படிவமும் 15.4.2004 ஆம் நாளிட்ட ஆணையில் வரையறுக்கப்பட்டதைப்

போன்ற அதே மாதிரியில் இருக்க வேண்டும். வானொலி மூலம் விளம்பரங்களை ஒலிபரப்புவதற்காக, இந்தப் படிவங்களில், ஒலிபரப்பி என்ற சொற்களைச் சேர்த்து படிக்கப்பட வேண்டும்.

4. 15.4.2004 ஆம் நாளிட்ட ஆணையில் உள்ள ஏனைய அனைத்து கட்டளைக் குறிப்புகள் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், இந்தப் பொருண்மை குறித்து அடுத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் ஆகியவை அரசியல் தன்மை வாய்ந்த விளம்பரங்களை, வானொலி மூலம் ஒலிபரப்புவதற்குப் பொருந்தும் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

**இந்திய தேர்தல் ஆணையம்**

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி **110001**

எண்.509/75/20040/JS-I/RCC/தொகுதி –II நாள் **18.03.2009.**

பெறுநர்

அனைத்து மாநிலங்களின் மத்திய அரசின்
நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகள்

**பொருள்:** **தொலைக்காட்சி அலைவரிசைகளிலும், கேபிள் கட்டமைப்பிலும் வானொலியிலும் அரசியல் தன்மை கொண்ட விளம்பரங்களை ஒளிபரப்புதல் – விளக்கமளித்தல்.**

ஐயா/அம்மையீர்,

தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் கேபிள் கட்டமைப்பிலும் ஒளிப்பரப்புவதற்கு, சான்றளிப்பிற்கான விண்ணப்பங்களை நுண்ணாய்வு செய்வது தொடர்பான, ஆணையத்தின் **15.04.2004** ஆம் நாளிட்ட 509/75/20040/JS-I ஆம் நாளிட்ட ஆணையததின் ஆணையினைக் காண்க. அதனைத் தொடர்ந்து **21.11.2008**ஆம் நாளிட்ட அதன் ஆணையின்படி, பொதுத்தேர்தலின் போது வானொலியில் விளம்பரப்படுத்துவதற்கு மேற்சொன்ன ஆணையிலுள்ள உத்தரவுகள், பொருந்தத்தக்கதாக செய்யப்பட்டுள்ளன.

**2.** மேலே குறிப்பிடப்பட்ட **15.4.2004** ஆம் நாளிட்ட ஆணையின்படி, டில்லியிலுள்ள தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்ட குழுவானது, டில்லியில் தலைமையிடங்கள் கொண்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருக்கிறது. தேசிய கட்சிகள் அனைத்தும் சில மாநில கட்சிகளும் டில்லியில் அலுவலகம் வைத்துள்ளன. இந்த கட்சிகளின் மாநில பிரிவுகள், தனிப்பட்ட மாநிலங்கள் மீது கவனம் செலுத்துவதற்காகவும் விண்ணப்பங்களை வழங்குவதற்கான சாத்தியமிருக்கிறது. இத்தகைய இனங்களில், தேசிய கட்சிகளின் மாநில பிரிவுகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் குழுவுக்கு அளிக்கப்படலாம் என விளக்கமளிக்கப்படுகிறது. எனினும், டில்லியில் தலைமையிடம் அமைந்துள்ள தேசிய மற்றும்

மாநில கட்சிகளின் மத்திய அலுலவலகத்திடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் டில்லியிலுள்ள குழுவால் தொடர்ந்து கூர்ந்தாய்வு செய்யப்படும். மாநில கட்சிகள் குறித்த நேர்வில் அவர்களின்தலைமையிடம் நீங்கலாக, மாநிலங்களில் கட்சிகளின் பிரிவுகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது மாநில பிரிவுகள் விண்ணப்பங்களை அளிக்கின்ற சம்பந்தப்பட்ட மாநிலங்களிலுள்ள குழுவால் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

3. தொலைக்காட்சியிலும் வானொலியிலும் விளம்பரப்படுத்துவதற்காக தனிநபர் வேட்பாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற விண்ணப்பங்கள் மீது, சம்பந்தப்பட்ட தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரின் தலைமையிலான குழுவால் நடவடிக்கை எடுக்கப்படும் எனமேலும் விளக்கமளிக்கப்படுகிறது.

4. ஒளிபரப்புவதற்கான சான்றிதழ் குழுவால் அளிக்கப்படுகின்ற போது, குழுவால் ஏற்பளிக்கப்பட்டவாறான கையெழுத்து பிரதியின் சான்றளிக்கப்பட்ட நகலொன்று விண்ணப்பதாரரிடம் அளிக்கப்படவேண்டும் என்றும் அதே நேரத்தில் குழு, ஏற்பளிக்கப்பட்ட கையெழுத்து பிரதியின் நகல் ஒன்றையும், ஒளிபரப்புவதற்காக– ஒலிபரப்புவதற்காக சான்றளிக்கப்பட்டவற்றின் மின்னணு நகல் ஒன்றையும் இருப்பில் வைக்கவேண்டும் என்றும் குழு உத்தரவிட்டுள்ளது.

5. இந்த உத்தரவுகள், அங்கீகரிக்கப்பட அரசியல் கட்சிகளின் மாநில பிரிவுகள் உட்பட உங்கள் மாநிலத்திலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சம்பந்தபட்டவர் அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வரப்படலாம்.

தங்கள் உண்மையுள்ள,

(ஆர்.கே.ஸ்ரீவாஸ்தவா)

செயலாளர்.

நகல்
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட
தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்/
செயலாளர்.

**இந்திய தேர்தல் ஆணையம்**

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை புதுதில்லி – 110 001

எண்.3/ER/2009/SDR நாள்: 19.03.2009

பெறுநர்
அனைத்து மாநிலங்களின்/மத்திய அரசின்
நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரி.

**பொருள்: தொலை அலைவரிசை கேபிள் கட்டமைப்பு, வானொலி ஆகியவற்றில் அரசியல் தன்மை கொண்ட விளம்பரங்கள்.**

**18.03.2009**-ஆம் நாளிட்ட அதே எண் கொண்ட கடிதத்தை தொடர்ந்து, தொலைக்காட்சி அலைவரிசை/கேபிள் கட்டமைப்பு/வானொலியில் அரசியல் விளம்பரங்களுக்கு சான்றளிப்பதற்கான விண்ணப்பங்கள் தொடர்பாக ஆணையம் மேற்கொண்டு பின்வரும் விளக்கங்களை அளிக்கிறது. அதன் விவரம்பின்வருமாறு:

(i) தில்லியில் தலைமையிடம் கொண்டுள்ள யாதொரு தேசிய கட்சிகளின் அல்லது மாநில கட்சிகளின் மத்திய அலுவலகமானது அதே விளம்பரத்திற்கு பன்மொழிகளில் (இந்தி/ஆங்கிலம் மற்றும் வட்டார மொழிகளில்) சான்றளிப்பு கோருமாயின், சான்றளிக்கப்பட்ட கையெழுத்து பிரதிகளுடன் ஒவ்வொர மொழிகளிலுமுள்ள விளம்பர சாராம்சத்தை தில்லியிலுள்ள தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலுள்ள குழுவிடம் அளிக்க வேண்டும். மேலும், இத்தகைய இனங்களில் நீதிமன்றங்களில் செய்யப்படுவதைப் போன்று விளம்பரத்தின் வட்டார மொழியாக்கமானது. இந்தியிலுள்ள, ஆங்கிலத்திலுள்ள விளம்பரத்தின் உண்மையான மொழிபெயர்ப்பு என்றும் அதில் உள்ள யாதொரு தவறுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பாவார் என்றும் தெரிவித்து உரிய உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் விண்ணப்பதாரர் அளிக்க வேண்டும்.

(ii) ஏதேனும் தேசியக் கட்சிகள் அல்லது தில்லியில் தலைமையிடம் அமைந்துள்ள மாநில கட்சிகளின் மத்திய அலுவலகமானது யாதொரு வட்டார மொழியில் விளம்பர சான்றளிப்பு பெற விழையுமாயின், (விளம்பரத்தின் யாதொரு இந்தி/ஆங்கில மொழிப்பெயர்ப்பு இல்லாத நிலையில்) சான்றளிப்பு கோருகின்ற விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் (அதாவது வட்டார மொழி தொடர்புடைய மாநிலத்தில்) தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலுள்ள குழுவிடம் அளிக்கப்பட வேண்டும்.

(iii) தில்லியில் தலைமையிடம் கொண்டுள்ள தேசிய கட்சிகள் மற்றும் மாநில கட்சிகளின் மத்திய அலுவலகத்திடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் தில்லியிலுள்ள தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் குழுவால் ஒளிபரப்புவதற்கு/ஒலிபரப்புவதற்கு சான்றளிக்கப்பட்ட யாதொரு விளம்பரமானது இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் ஒளிபரப்புவதற்கு/ஒலிப்பரப்புவதற்கு செல்திறனுடையதாக இருக்கும். ஏனைய மாநிலங்களில், இத்தகைய இனங்களில், குழுக்களிடமிருந்து தனி சான்றளிப்பு தேவைப்படாது எனினும், கட்சிகள் தில்லியிலுள்ள குழுவிடமிருந்து பெற்று சான்றிதழின் நகலை அத்தகைய விளம்பரங்களை ஒலிபரப்புவதற்கு /ஒளிபரப்புவதற்கு கருதப்படுகின்ற மாநிலத்திலுள்ள தலைமை தேர்தல் அதிகாரிகளிடம் அளிக்க வேண்டும். அந்நகல் தில்லியிலுள்ள குழு வழங்கப்பட்ட சான்றிதழின் உண்மை நகல் என்ற உறுதிமொழியுடன் அளிக்கப்படவேண்டும். இந்த விளம்பரத்தை ஒளிபரப்புவதற்கு/ஒலிபரப்புவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் தலைமை தேர்தல் அதிகாரிக்கு இதனை அளிக்க வேண்டும்.

(iv) மேற்சொன்ன விளக்கங்கள் மாநிலத்தின் அனைத்து அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படலாம். தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் இந்த செயல் நோக்கத்திற்காக செயல்படுகின்ற ஆய்வுக் குழுவிடம் இதன் நகல் ஒன்று அளிக்கப்பட வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

(K.F. வில்பிரெட்)
செயலாளர்

நகல் பெறுவோர்: அங்கீகாரம் பெற்ற அனைத்து தேசிய கட்சிகள் மற்றும் சமாஜ்வாடி கட்சி, ஜம்மு &காஷ்மீர் தேசிய சிறுத்தைகள் கட்சி, ஜனதா தளம் மற்றும் ஐக்கிய ஜனதாதளம், லோக் ஜன் சக்தி கட்சி மற்றும் அனைத்திந்திய பார்வர்டு பிளாக்.

வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்காக அல்லது பாதிக்கிற வகையில் விநியோகம் செய்யப்படும் அச்சிடப்பட்ட கையேடு, துண்டு பிரசுரங்கள் அல்லது ஏனைய ஆவணம்'' என்று பொருள்படும். இவ்வாறு ''பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது'' என்பதும் ''தேர்தல் கையேடு மற்றும் சுவரொட்டி'' என்ற வகையின் கீழ் சேர்க்கப்படவேண்டிய பிற ஆவணங்கள் என்ற வகையின் கீழ் வருகிறது அதற்கேற்றபடி தக்க நடவடிக்கை எடுக்கப்படலாம். எனவே, பிற வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு பாதகம் ஏற்படுத்தி அவர்களை புறக்கணித்து அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு அல்லது கட்சிக்கு அனுகூலம் ஏற்படுகிற வகையில் செய்தி வெளியிட்டதாக வெளிப்படையாக புகார் அளிக்கிற நேர்வில் அது குறித்து புலனாய்வு செய்யப்பட வேண்டும்.

4. செய்தி வெளியீடு என்ற பெயரில் தேர்தல் கால அளவிற்குள் அரசியல் விளம்பரங்கள் வெளியாவதைக் கண்டறியும் பொருட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், மாவட்டத்திலுள்ள (சுற்றோட்டத்திலுள்ள) அனைத்து செய்தித் தாள்களையும் தீவிரமாக கூர்ந்தாய்வு செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மாவட்ட அளவில் குழுக்களை அமைக்க வேண்டும் என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது. செய்திகள் என்ற பெயரில் பணம் அல்லது பொருள் கொடுத்து செய்யப்படும், அல்லது ஏதேனும் வகையில் ஊடகங்களில் வெளியிடப்பட்டும் விளம்பரங்களை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உன்னிப்பாகக் கண்காணித்து, சம்பந்தப்பட்ட வேட்பாளர்/அல்லது கட்சியினர் அதற்குண்டான செலவுகளை முறையாக தேர்தல் செலவுக் கணக்கில் காட்டியுள்ளனரா என்பதை அறிந்து கொள்ளும் வகையில் வேட்பாளர் கட்சிக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். அதனால், அது குறித்த செய்த செலவுகள் சம்பந்தப்பட்ட வேட்பாளரின்/கட்சியின் செலவுக் கணக்கில் உரியவாறு இடம்பெறும்.

5. அதுபோலவே, மாவட்டத்திலுள்ள மின்னனு ஊடகங்களில் வெளியாகும் தேர்தல் செய்திகள்/சிறப்புச் செய்திகள் முதலியவற்றையும் மாவட்டக் குழு தவறாது கண்காணிக்க வேண்டும். ஒரு வேட்பாளரின் உரை/செயல்பாடுகள் அளவுக்கும் அதிகமாக தொலைக்காட்சி/வானொலி அலைவரிசைகளில் வெளியாகி வாக்காளர்களின் செல்வாக்கை ஈர்த்து ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு தேர்தலில் ஆதாயம் ஏற்படுத்துவதாக அமைந்து, அது, பல அலைவரிசைகளிலும் வெளியாகிறபோது, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் அந்த வேட்பாளருக்கு அறிவிப்பு அளிப்பதுடன், செய்தி என்ற பெயரிலான வெளியீடுகள், விளம்பரம் என்று ஏன் கருதப்படக்கூடாது என்பதற்கான அவருடைய (ஆண்/பெண்) நிலைப்பாட்டை விளக்குமாறு கேட்க வேண்டும். அந்த விவகாரம் தொடர்பாக ஆணையத்திற்கு அறிக்கையும் அளிக்கப்பட வேண்டும்.

6. மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம்(சி) 6679/2004–ஆம் எண் சிறப்பு அனுமதி அளித்த தீர்ப்பின் அடிப்படையில் (தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திற்கும், திருவாளர்.ஜெமினி டி.வி. நிறுவனம், மற்றும் ஏனையோருக்கும் இடையே நடைபெற்ற வழக்கில்) ஆணையம் ஏற்கனவே பிறப்பித்த 15.04.2004–ஆம் நாளிட்ட 509/75/2004/J.S.I–ஆம் எண்ணுள்ள ஆணை போட்டியிடும் தனி வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகளின் அனைத்து விளம்பரங்களை மின்னணு ஊடகத்தில் வெளியிடுவதற்கு முன்னர் அவற்றை முன்கூட்டியே திரையிட்டுப் பார்த்து கூர்ந்தாய்வு செய்து, சரிபார்ப்பதற்கு குழு ஒன்றை அமைக்க வகை செய்கிறது. மேற்சொல்லப்பட்ட பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது என்ற குறிப்பிட்ட நிகழ்வு உள்ளார்ந்த அடிப்படையில் அரசியல் விளம்பரமாக இருந்தபோதிலும் குழுவின் கூர்ந்தாய்விலிருந்து தப்பி, வேட்பாளருக்கான செலவு புத்தகத்திலும் கணக்கீடு செய்ய முடியாத வகையில் ஏய்த்து விடுகிறது. அரசியல் விளம்பரம் என்று அறிவிக்கப்படாமல், அதற்குண்டான அத்தனை இயல்புகளையும் பெற்று மின்னணு ஊடகத்தில் உலாவரும் செய்தி அறிக்கைகளை பரிசீலனை செய்வதற்கென தலைமைத் தேர்தல் அதிகாரிகள் இத்தகைய குழுக்களை வலுப்படுத்தலாம். இந்தக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தலைமைத் தேர்தல் அதிகாரிகளால் வேட்பாளர்களுக்கு/கட்சிகளுக்கு அறிவிப்பு வழங்கப்படலாம்.

7. மேற்சொன்னவாறு அறிவிப்பு வழங்கப்பட்ட கட்சிகள்/வேட்பாளர்கள் பற்றி ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

8. இக்கடிதம் பெற்றதற்கான ஒப்புகையை அளித்து, எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் ஆணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்

தங்கள் உண்மையுள்ள

(தபஸ் குமார்)
அரசு முதன்மைச்செயலாளர்.

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோக சாலை, புதுதில்லி – 110 001

எண்.491/ஊடகக்கொள்கை/2010 நாள் 23.09.2010

பெறுநர்
அனைத்து மாநிலங்களின்/மத்திய அரசின்
நேரடி ஆட்சி பகுதிகளின் தலைமைத் தேர்தல் அலுவலர்கள்.

**பொருள்: ஊடகத்தில் செய்திகள் வெளியிடுவது என்ற போர்வையில் அதாவது தேர்தல்களின்போது "பணம்கொடுத்து செய்தி வெளியிடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்"**

ஐயா/அம்மையீர்,

மேற்சொன்ன பொருண்மை பற்றிய 08.06.2010–ஆம் நாளிட்ட ஆணையத்தின் 491/ஊடகம்/2009–ஆம் எண் கடிதத்தை தொடர்ந்து, 30.07.2010–ஆம் நாளிட்ட இந்திய பத்திரிகையாளர் மன்ற அறிக்கையின் PR/2/1011-ஆம் எண் நகலை நான் இத்துடன் அனுப்பியுள்ளேன்.

2. குறிப்பிட்ட கவனத்திற்காகவும், தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் அறிக்கையின் பின்வரும் பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

a. "பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்தி என்பது, "யாதொரு ஊடகத்தில் (அச்சு மற்றும் மின்னணு) ரொக்கத்திற்காக அல்லது பொருளுக்காக வெளியிடப்படுகின்ற யாதொரு செய்தி அல்லது பகுப்பாய்வு" என இந்திய பத்திரிகையாளர் சங்கம் விளக்கம் அளித்துள்ளது.

b. கடிதத்துடன் இணைக்கப்பட்ட அறிக்கையின் 8–10 பக்கங்களில், குழு அதனுடைய 1996–ஆம் வழிகாட்டிக் குறிப்புகளைத் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளது. "தேர்தல் காலங்களில்" பத்திரிகைகள் விரும்பத்தகாத தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபாடு காட்டவோ, வேட்பாளர்/கட்சி அல்லது ஏதேனும் நிகழ்வு பற்றிய அறிக்கைகளை மிகைப்படுத்திக் காட்டவோ கூடாது என்று வழிகாட்டி குறிப்புகளின் முதல் பத்தி சுட்டிக் காட்டுகிறது. உண்மையாக நடைபெற்ற பிரச்சாரத்தைப் பற்றி அறிக்கை அளிக்கும் போது, ஒரு வேட்பாளர் எழுப்பிய முக்கியமான கருத்தைப் புறக்கணிக்கவோ அவருக்கு எதிரான வேட்பாளர் மீது பழிப்புரைகளை

வெளிப்படுத்தவோ கூடாது. இது போல, பத்திரிகைகள் ஒரு குறிப்பிட்ட வேட்பாளர்/கட்சிக்காக பிரச்சார வேலையில் ஈடுபடக்கூடாது என்று பத்தி 5 வற்புறுத்திக் கூறுகிறது. அவ்வாறு செய்யுமேயானால், பிற கட்சி வேட்பாளருக்கு அதற்குண்டான பதிலைக் கூறுவதற்கான வாய்ப்பை அளிப்பதற்கு வழி வகுக்கும்" ஆகையால், மேற்சொன்ன வழிகாட்டிக் குறிப்புகளைப் பின்பற்றாமல் மாறுபட்டு செயல்படுவது, பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை பரிசீலனை செய்யும் முதல் நோக்கு வழக்கு தொடர்வதற்கு வழிவகுக்கும்.

3. அறிக்கையின் மற்ற பகுதிகள் தகவலுக்காக கொடுக்கப்பட்டுள்ளன. யாதொரு குறிப்பிட்ட நடவடிக்கை இருந்தால், அது ஆணையத்தால் எடுக்கப்படும்.

4. தேர்தல் காலங்களில், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதைக் கூர்ந்தாய்வு செய்வதற்காக, அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான குழுவில் பின்வரும் அதிகாரிகள் இடம் பெறுவர்.

i. மாவட்ட தேர்தல் அதிகாரி/துணை தேர்தல் அதிகாரி
ii. மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி
iii. மத்திய அரசு செய்தி ஒலிபரப்பு அமைச்சரகத்தின் அதிகாரி (மாவட்டத்தில் யாரேனும் இருப்பின்)
iv. இந்திய பத்திரிகையாளர் மன்றத்தினால் பரிந்துரைக்கப்படும் சாதாரண குடிமகன்/பத்திரிகையாளர்.

5. 08.06.2010–ஆம் நாளிட்ட கடிதத்தில் வெளியிடப்பட்ட கூடுதல் வழிகாட்டிக் குறிப்புகளின் தொடர்ச்சியாக மேலே கூறப்பட்டவை கருதப்படலாம் மற்றும் அதற்கேற்றபடி நடவடிக்கையும் எடுக்கப்படலாம்.

தங்கள் உண்மையுள்ள

(தபஸ் குமார்)
அரசு முதன்மைச் செயலாளர்

## இந்திய பத்திரிகையாளர் மன்றம்

### பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது தொடர்பான அறிக்கை:

(இந்திய பத்திரிகையாளர் மன்றத்திடமிருந்து வரப்பெற்ற 16.08.2010—ஆம் நாளிட்ட 17.07.2009—10—ஆம் எண் கடிதம்)

நாள்: 30.07.2010

பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது சிக்கலான பரிணாமங்களை கொண்டுள்ளது. இன்று, இது தனிநபர் பத்திரிகையாளர்களின் மற்றும் ஊடக நிறுவனங்களின் ஊழலுக்கு அப்பாற்பட்டு, எங்கும் ஊடுருவி, உருப்பெற்று நன்கு அமையப்பெற்றுள்ளது. இந்த செய்முறையில் இது, இந்திய சனநாயகத்தின் அடித்தளத்தை தகர்க்கிறது. இது அரசியல் தலைவர்கள், சிந்தனையாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக உரிமையாளர்கள் உட்பட சமுதாயத்தின் முன்னனி பிரிவினரை வேதனை கொள்ளச் செய்துள்ளது. இத்தகைய முறைகேடுகளின் தீங்கான விளைவு குறித்த மன வருத்தத்தையும், கவலையையும் அவர்கள் அனைவரும் தெரிவித்துள்ளனர்.

காலஞ்சென்ற திரு.பிரபாஷ் ஜோஷி, திரு.அஜித் பட்டாசார்ஜியா, திரு.பி.ஜி.வர்கீஸ் மற்றும் திரு.குல்தீப் நாயர் உள்ளிட்ட பல அனுபவமிக்க பத்திரிகையாளர்கள், இந்த விவகாரத்தில், இந்திய பத்திரிகையாளர் மன்றம் கவனம் செலுத்தி "பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதை" எவ்வாறு களையலாம் என்பது பற்றிய ஆலோசனைகளைத் தெரிவிக்க வேண்டும் என விரும்பினர். ஆந்திரப்பிரதேச பத்திரிகை தொழிலாளர் சங்கம் மற்றும் தில்லி பத்திரிகையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு பத்திரிகையாளர்கள் சங்கங்கள், இதனை ஆராய்ந்து, ஆய்வுகள் நடத்தி இதன் தலைப்பு குறித்த விவாதங்களுக்கும் ஏற்பாடு செய்தன. பதிப்பாசிரியர்களின், கில்டு ஆஃப் இந்தியாவும் இது குறித்து விவாதித்து, அதிகரித்து வரும் இந்தப் போக்கு குறித்து கவலை தெரிவித்தது. 08.06.2010 அன்று, இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல்களுக்கு முன்னர் "பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள், அதாவது செய்தி என்ற போர்வையில் விளம்பரப்படுத்துவது குறித்து அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு விரிவான வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிட்டது."

"பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது" என்பது குறிப்பாக 2009—ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களின் போதும் அதன் பின்னர், பல்வேறு மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்களின் போதும் குறிப்பாக கவனிக்கத்தக்கதாக ஆகியிருந்தது. தேர்தலில்

போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் குறித்த "அரசியல் செய்திகள்" அல்லது "தகவல்களை" மறுவரையறை செய்வதன் வாயிலாக புதிய மற்றும் மென்மேலும் அழிவுத்தரத்தக்க பரிணாமத்தை இந்த குறிப்பிட்ட நிகழ்வு அடைந்துள்ளது. அத்தகைய பல "செய்தி அறிக்கைகள்" எப்பொழுதும் இரகசியமான முறையில், பண பேரங்கள் நடந்து முடிந்த பின்னரே வெளியிடப்படும் அல்லது ஒலிபரப்பப்படும். பல ஊடக நிறுவனங்கள், அவர்களின் தொழில்களின் அளவு மற்றும் அவர்கள் பெறும் ஆதாயத்தினைக் கருதாமல், அரசியல்வாதிகளுடனும் 'புரிந்துணர்வு' ஏற்படுத்திக் கொண்ட பின்னர் செய்திகளை "விற்று வந்தனர்" என்று பெரிதும் நம்பப்படுகிறது. வெளியீடுகளிலுள்ள இடைவெளிகளில் "செய்திகள்" என்ற பெயரில் விளம்பரங்கள் இடம்பிடித்திருந்தன.

செய்திகள் என்பது உண்மையானது, நியாயமானது மற்றும் நடுநிலையானது என பொருள்படும். கூட்டாண்மை உரிமை பெற்றவர்கள், அரசுகள், அமைப்புகள் அல்லது தனிநபர்களால் பணம் கொடுத்து வெளியிடப்படுகின்ற விளம்பரங்களிலிருந்து அத்தகைய தகவலும் கருத்தும் மாறுபடுகின்றன. செய்திகளுக்கும் விளம்பரங்களுக்கும் இடையேயான தனித்தன்மை மறையத் தொடங்குகின்ற போது என்ன நடக்கின்றது? பணம் கொடுக்கப்பட்ட விளம்பரங்கள், செய்திகளைப் போன்று இருமடங்காகும் போது அல்லது தலையங்க இடங்களை விற்பதன் வாயிலாக குறிப்பிட்ட அரசியல் வாதிக்கு ஆதரவாக "செய்திகள்" வெளியிடப்படுகின்றபோது என்ன நிகழ்கிறது?

இத்தகைய சூழல்களில், செய்தியைப் படிப்பவரில் அல்லது பார்ப்பவரின் ஒரு பிரிவினர் செய்தி அறிக்கைகளையும், விளம்பரங்களையும் வேறுபடுத்திப் பார்ப்பதில் மிகுந்த இடர்பாட்டினை அடைவர். விற்பனை நிருவாகிகள் பத்திரிகையாளர்களின் சேவைகளை, விரும்பியோ வேறுவகையிலோ அரசியல் பிரமுகர்களை அணுகுவதற்குப் பயன்படுத்திக்கொள்வர். "கட்டண அட்டைகள்" அல்லது தொகுப்புக் கட்டணங்கள் என்றழைக்கப்படுகின்றவை வழங்கப்படுகின்றன. இதில், குறிப்பிட்ட வேட்பாளர்களை வெறுமனே புகழ்வதுடன் மட்டுமின்றி அவர்களுடைய அரசியல் எதிரிகளையும் விமர்சிக்கின்ற "செய்திகளை" வெளியிடுவதற்கான "கட்டணங்களும்" இடம் பெற்றிருக்கும். ஊடக அமைப்புகளின் தரப்பில் அத்தகைய நடவடிக்கைகளின் தரப்பில் அத்தகைய நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகாத வேட்பாளர்கள் பற்றிய செய்திகள் வெளியிடப்படாமல் தவிர்க்கப்படும். இந்தியாவிலுள்ள சில ஊடக பிரிவினர் நன்னெறி களத்தைக் கைக் கொண்டிருப்பதாக பொய்யாக நடித்துக் கொண்டே, விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அரசியல் பணபலம் அதிகரிப்பதற்கு வழி வகுக்கின்ற இத்தகைய நடைமுறைகளில் பங்கேற்று வருகின்றனர்.

இது, இந்தியாவின் சனநாயக நடைமுறைகளையும், அளவுகோல்களையும் சீரழிக்கிறது. மேலும், இது, இந்திய சனநாயகத்தை சீர்கேடு அடையச் செய்வதுடன் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. புகைப்படங்கள் மற்றும் தலைப்புச் செய்திகளுடன் கூடிய ஒரே மாதிரியான செய்திகள், ஒரே நேரத்தில் வெவ்வேறு ஆசிரியர்களின் பெயரில், போட்டிகள் நிறைந்த வெளியீடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நாளிதழ்களின் அதே பக்கத்தில், அதே தேர்தல்களில், போட்டியிடுகின்ற வேட்பாளர்களைப் பாராட்டி செய்திகள் அச்சிடப்பட்டுள்ளதுடன், இருவரும் வெற்றி பெறக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்தகைய "செய்திகள்" அறிக்கைகளை வெளியிடுவது, பண பரிவர்த்தனைகளை இன்றியமையாததாக்கியுள்ளது அல்லது குறிப்பிட்ட சில தனிநபர்கள் அல்லது அரசியல் கட்சிகளால் பணம் வழங்கப்பட்டுள்ளது என்பதற்கு எந்த இடத்திலும் யாதொரு அடையாளமும் இல்லை. பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது குறித்த குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்துகின்ற சந்தர்ப்ப சூழ்நிலை ஆதாரத்துடன் ஒப்பு நோக்கியபோது ஆதாரம், சூழ்நிலையைக் கொண்டு அனுமானிக்கத்தக்கதாக இருப்பதால், ஊழல் நடவடிக்கைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட தனி நபரின் செயல் விரும்பத்தகாத எவையும் நடைபெறவில்லை என பாவனை செய்வதாக இருக்கிறது.அரசியல் கட்சி மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த குற்றச்சாட்டுகளை மறுக்க வேண்டியிருக்கிறது. எனினும், மேற்சொன்ன இதே மக்கள், பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது புற்றுநோய் போல் நாட்டின் அரசியல் அமைப்பில் வேரூன்றியுள்ளது என்றும், அது அகற்றப்படவேண்டும் என்றும் ஒப்புக் கொண்டனர்.

பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதால் ஜனநாயகத்திற்கும், 09.09.2009 அன்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19--ஆம் பிரிவில் இடம் பெற்றுள்ள சுதந்திரம் குறித்த உரிமைக்கும் ஏற்படுகின்ற அபாயங்களை உணர்ந்து, உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரிடமிருந்து பெறப்பட்ட, தகவல்களின் அடிப்படையில், கடந்த மக்களவைத் தேர்தல்களின் போது "பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள்" குறித்து கண்டறிந்தவற்றை ஆராய்வதற்கு, திரு.பரன்ஜோய்குவரா தகுர்தா மற்றும் திரு.கலிமேகோலம் ஸ்ரீநிவாச ரெட்டி ஆகியோர் கொண்ட துணைக்குழு ஒன்றை, இந்திய பத்திரிகையாளர் மன்றம் நியமித்தது. இந்த இரண்டு உறுப்பினர்களும், புதுதில்லி, மும்பை மற்றும் ஹைதராபாத்திலுள்ள சங்கத்தின் உறுப்பினர்களை சந்தித்தனர். சங்கத்திற்கு அனுப்பப்பட்ட பல கடிதங்களையும் முறையீடுகளையும் ஆராய்ந்தனர். துணைக் குழுவின் அறிக்கை பற்றி, முறையே 31.03.2010 மற்றும் 26.04.2010 அன்று இந்தூரிலும், புதுதில்லியிலும் நடைபெற்ற பத்திரிகையாளர் மன்றத்தின் இரண்டு கூட்டங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்கள் எண்ணற்ற ஆலோசனைகளைத் தெரிவித்தனர். அதன் பின்னர், இந்திய பத்திரிகையாளர் மன்றத்

தலைவர், அம்மன்றம் பரிசீலிப்பதற்கான இறுதி அறிக்கை ஒன்றைத்தயாரிப்பதற்கு வரைவுக் குழு ஒன்றை நியமித்தார். தலைவர், திரு.எச்.என்.காமா, லலித் மங்கோத்ரா, யூ.சி.சர்மா, ஒய்.சி. ஹாலன், கே.ஸ்ரீநிவாசா ரெட்டி, கல்யாண் பருவா, எஸ்.என்.சின்ஹா, அனில் ஜுகல் கிஷோர் அகர்வால், குந்தன் ஆர்.எல்.வியாஸ், பரஞ்ஜோய் குஹா தகுர்தா, பி.ஜவதேகர் மற்றும் கேசவ்ராவ் ஆகியோர் கொண்ட 12 உறுப்பினர் குழு ஒன்றை நியமித்தது.

வரைவுக் குழுவானது, பத்திரிகையாளர் மன்றத்தின் பல்வேறு கூட்டங்களின்போது தெரிவிக்கப்பட்ட மன்றத்தின் கருத்துக்களை கருதிபார்த்து பரிசீலனைக்காக அறிக்கை ஒன்றை வரைவு செய்துள்ளது.

<u>முகவுரை</u>

**"பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல்" என்பது யாதொரு ஊடகத்தில் (அச்சு மற்றும் மின்னணு) ரொக்கத்திற்காக அல்லது பொருளுக்காக வெளியிடப்படுகின்ற யாதொரு செய்தி அல்லது பகுப்பாய்வு" எனப்படும்.**

பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவது என்ற சிக்கலான விவகாரம், கடந்த அறுபது ஆண்டுகளில் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது. நேரடியாக பணம் பெற்றுக்கொள்வதுடன், பல்வேறு நிகழ்வுகள் வெளிநாடு மற்றும் உள்ளூரிலிருந்து நிகழ்ச்சிகள், பரிசு பொருட்கள் பல்வேறு ஆதாயமிக்க மற்றும் ஆதாயமற்ற பயன்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வரையில் இதன் எல்லைகள் பரந்து விரிந்திருக்கின்றன.இந்திய பிணையம் மற்றும் பங்கு வர்த்தனை வாரியம் (SEBI) மற்றொரு வகையான "பணம் கொடுத்து செய்தி வெளியிடப்படுவதை" இந்திய பத்திரிகையாளர் மன்றத்தில் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. இது ஊடக நிறுவனங்களுக்கும் கூட்டாண்மை உரிமைப் பெற்றவர்களுக்கும் இடையேயான "தனியார் உடன்படிக்கைகளாகும்". தனியார் உடன்படிக்கை என்பது ஊடக நிறுவனத்திற்கும் மற்றொரு ஊடகம் சாரா நிறுவனத்திற்கும் இடையேயான முறைப்படியான ஒப்பந்தம் ஆகும். இதில் ஊடகம் சாரா நிறுவனமானது, விளம்பர இடம் மற்றும் சாதகமான செய்திக்கு மாறி நிறுவனத்தின் குறிப்பிட்ட சில பங்குகளை, ஊடக நிறுவனத்திற்கு மாற்றுகிறது.

"பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது" என்பது பழையதும், சிக்கலானதும், ஆழ வேரூன்றியும் இருப்பதாலும், 2009ஆம் ஆண்டு தேர்தல்களுக்குப் பின்னர், அதன் வேர்கள் புற்றுநோய் போன்று வேரூன்றி பரவி வருவதாகத் தெரிவதாலும், இந்திய பத்திரிகையாளர் மன்றம் கடந்த மக்களவை தேர்தல்களின்போது (2009) கண்டறியப்பட்ட "பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது" குறித்து மட்டுமே தொடக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும் என

வரைவுக் குழு கருதுகிறது. செயலாளர், மன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தவாறாக, பத்திரிகையாளர் மன்றத்தின் முடிவிலிருந்தே இந்த முடிவு எடுக்கப்படுகிறது.

**பணம் கொடுத்து வெளியிடப்படும் தேர்தல் நேரச் செய்திகள்**

பணம் கொடுத்து வெளியிடப்படும் தேர்தல் நேரச் செய்தியானது, முப்பரிணாமங்களை கொண்டுள்ளது. ஒன்று, செய்தியை வாசிப்பவர், அவர் ஆதரவாக அல்லது எதிர்த்து வாக்களிப்பதற்கு முடிவு செய்கின்ற நபரின் ஆளுமைத்திறன் அல்லது செயல்பாடு குறித்த தெளிவான செய்தியைப் பெற முடியாது. இது சனநாயகத்தின் மிகவும் இன்றியமையாத கூறினை வேரறுக்கிறது. இரண்டாவது, தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், இதனை தேர்தல் செலவுக் கணக்கில் காட்டாததால், 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் இந்திய தேர்தல் ஆணையத்தால் விடுக்கப்பட்ட 1961ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகள் இதனால் மீறப்படுகின்றன. மூன்றாவது, பணத்தை ரொக்கமாகப் பெற்று அதனை அவர்களின் அலுவல் கணக்கு விவர அறிக்கைகளில் தெரிவிக்காத அத்தகைய நாளிதழ்களும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் ஏனைய சட்டங்களுடன் 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தையும் 1961ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தையும் மீறியுள்ளனர்.

தேர்தல் நேரத்தில் செய்தி வெளியிடுவதற்கு பணம் கொடுப்பதும் பெறுவதும் கள்ளத்தனமான நடவடிக்கை ஆகும். இது எல்லா இடங்களிலும் பரவியுள்ளது. விளம்பர முகவரமைப்புகள், மக்கள் தொடர்பு நிறுவனங்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், மேலாளர்கள் மற்றும் சில ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. எனவே, தனிநபர்கள், கட்சிகள் மற்றும் அமைப்புகள் மீது பொறுப்பு சுமத்துகின்ற ஆதாரத்தைக் கண்டறிவது எளிதன்று. எனினும், மன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட துணைக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட எண்ணற்ற நபர்கள் சூழ்நிலைக்கேற்ற பொருத்தங் காட்டும் சான்றியை பெருமளவில் திரட்டியுள்ளனர். பத்திரிகையாளர் மன்றத்திடம் உள்ள அத்தகைய சான்றானது, சாதகமான செய்தியை வெளியிடுவதற்கு, தெரிவிப்பதற்கு மற்றும் ஒளிபரப்புவதற்கு பணம் கைமாறியது என்பதைக் குறிப்பிடுகிறது.

**தலையங்கத்திலிருந்து நிர்வாகத்தை பிரித்தல்**

துணைக்குழு பேச்சுவார்த்தை நடத்திய நபர்களின் கருத்துக்களையும், அவர்கள் வழங்கிய ஆதாரத்தையும், பத்திரிகையாளர் மன்றத்துடன் நடந்த விவாதங்களையும் கருதிப் பார்க்கையில், தேர்தல் நேரத்தில், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் வேட்பாளர்களுக்கு அல்லது அரசியல் கட்சிகளுக்கு அல்லது அவர்களின்

முகவர்களுக்கும் ஊடகத்திற்கும் இடையே நடைபெறுகிறதென கருதப்படுகிறது. ஊடக நிறுவனங்களில் நிருவாகத்திற்கும், தலையங்கப் பணியாளருக்கும் இடையே தெளிவான எல்லைக்கோடு வரையறுக்கப்பட வேண்டும் என்றும், பதிப்பாசிரியரின் சுதந்திரம் பேணப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கருதப்பட்டது.

**பத்திரிகையாளர் மன்றத்தின் பணி**

இந்தியாவில் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாக்கின்ற செயல் நோக்கத்திற்காகவும் நாளிதழ்கள் மற்றும் செய்தி முகவரமைப்புகளின் தரத்தினை மேம்படுத்திப் பேணிவருவதற்காகவும், சட்டப்படியான நீதிமுறைச் சார்புடைய அமைப்பாக, நாடாளுமன்றத்தால் இந்திய பத்திரிகையாளர் மன்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆயினும், அறிவுறுத்தவும், கண்டனம் தெரிவிக்கவும் அதற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன. இது தவறிழைத்தோரை அல்லது முறைகேடுகள் புரிந்துள்ளோரை தண்டிக்க இயலாது. மேலும், மன்றத்தின் உரிமைக் கட்டளையானது, அச்சு ஊடகத்திற்கு அப்பாற்பட்டு விரிவடையாது. சங்கத்தின் உத்தரவுகளைக் கட்டுப்படுத்துகிற வகையில் செய்வதற்கு 1978ஆம் ஆண்டு பத்திரிகையாளர் மன்றச் சட்டத்தின் 15(4)ஆம் பிரிவை திருத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று நீண்ட காலமாக நிலுவையிலுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் இதனை மேற்கொள்ள வேண்டும்.

**1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மனு**

மத்திய மற்றும் மாநில தேர்தல்கள், 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மனு வழங்கும் விதிமுறைகளின்படி முறைப்படுத்தப்படுகிறது. நாட்டில் நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல்களுக்கு வகைச் செய்வதே இச்சட்டத்தின் முக்கிய செயல்நோக்கமாகும். எனவே, தேர்தல் நேரத்தில் பணம் கொடுத்து வெளியிடப்படுகின்ற செய்திகள் நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தலை அடியோடு வேரறுப்பதால், செய்திகளை வெளியிடுவதற்கு யாதொரு தொகை செலுத்துவது ஊழல் நடவடிக்கை என்றும் “தேர்தல் முறைகேடு” என்றும் தண்டிக்கத்தக்க குற்றமாகச் செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிப்பதற்கு ஏதுவாக, 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மனு 123ஆம் பிரிவு தகுந்தவாறாக திருத்தப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது.

**இந்திய பத்திரிகையாளர் மன்றம்**

இந்திய பத்திரிகையாளர் மன்றம் “பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது” குறித்து பெறப்பட்ட புகார்களை விசாரணை செய்வதற்கு தேசிய/மாநில/மாவட்ட நிலைகளில் பெரியளவு

பிரதிநிதித்துவத்துடன் ஊடக வல்லுநர்களை கொண்ட அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய அமைப்பின் பரிந்துரைகள், இந்திய தேர்தல் ஆணையத்தையும், ஏனைய அரசு ஆணையங்களையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இந்தியப் பத்திரிகையாளர் மன்றத்தின் சங்க வழிகாட்டிக் குறிப்புகளில், மறுப்பாளர்கள் மூலம், விளம்பரங்களிலிருந்து செய்திகளை தெளிவாக வரையறுக்க வேண்டும் என்றும் அனைத்து வெளியீடுகள் மூலம் கண்டிப்பாக வலியுறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட செய்திகளைப் பொறுத்தவரையில், அது எப்பொழுதும் நம்பகத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட வடிவமைப்பில் விளம்பரங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். அனைத்து ஊடக அமைப்புகளும் இந்தியப் பத்திரிகையாளர் மன்றத்தின் வழிகாட்டு குறிப்புகள் **1996**ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டு, மீண்டும் இதன்கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவை பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**(i)** நமது ஜனநாயகத்தில்/மக்களாட்சி நடைமுறையில் பொதுத் தேர்தல் என்பது, தனிச்சிறப்பு வாய்ந்த முக்கியத்துவம் கொண்ட ஒன்றாகும். தேர்தல் பிரச்சாரங்களில், தேர்தலில் போட்டியிடும் கட்சிகளால், நியாயமான நோக்கங்கள் கொண்ட அறிக்கைகளை வாக்காளர்களுக்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. பத்திரிகைச் சுதந்திரமானது பொறுப்புடன் கூடிய அதன் நடவடிக்கைகளைச் சார்ந்த ஒரு பெரும் நடவடிக்கை ஆகும். எனவே, தேர்தல் பிரச்சாரம் குறித்து நேர்மையான தகவல் அளிக்கிற இந்தக் கொள்கையை ஊடகங்கள் கடைப்பிடிக்கின்றன என்பதை உறுதி செய்வது அவசியமாகும்.

எனவே, தேர்தல் நேரத்தில் கடைப்பிடிப்பதற்காக, ஊடகங்களுக்கு பின்வரும் வழிகாட்டிக் குறிப்புகளை பத்திரிகையாளர் மன்றம் உருவாக்கியுள்ளது.

1. தேர்தல்கள் மற்றும் வேட்பாளர்கள் குறித்து நடுநிலையான அறிக்கைகளை அளிப்பது பத்திரிகைகளின் கடமையாக இருக்கும். செய்தித்தாள்கள் தேர்தல் நேரத்தில், ஆரோக்கியமற்ற தேர்தல் பிரச்சாரங்கள், யாதொரு வேட்பாளர்/கட்சி அல்லது சம்பவம் குறித்து மிகைப்படுத்தி அறிக்கைகள் அளிப்பதற்கு உடந்தையாக இருக்கக் கூடாது. வழக்கமாக நெருக்கமான வாக்குகளைப் பெற வாய்ப்புள்ள இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்கள் மீது அனைத்து ஊடகங்களும் கவனம் செலுத்தும் உண்மையான பிரச்சாரம் குறித்து தெரிவிக்கும்போது, வேட்பாளரால் எழுப்பப்படும் யாதொரு முக்கியமான கருத்து குறித்தும், செய்தித் தாள்கள் எந்தவொரு செய்தியையும் விட்டுவிடக் கூடாது.

2. சாதி மற்றும் இனம் சார்ந்த பிரச்சாரங்கள் தேர்தல் விதிகளின்கீழ் தடை செய்யப்படுகின்றன. எனவே, பத்திரிகைகள், மதம், வகுப்பு, சாதி, இனம் மற்றும் மொழி அடிப்படையில் மக்களிடையே பகையுணர்வுக்கும், வெறுப்புணர்வுக்கும் ஊக்கமளிக்கக்கூடிய போக்கினையுடைய அறிக்கைகளை தவிர்க்க வேண்டும்.

3. யாதொரு வேட்பாளரின் தனிப்பட்ட நடத்தை அல்லது சொந்த விஷயங்கள் குறித்து அல்லது யாதொரு வேட்பாளர் பொறுப்பை திரும்பப் பெறுதல் அல்லது அவருடைய வேட்புமனுவைத் திரும்பப் பெறுதல் குறித்தும், தேர்தலில் அந்த வேட்பாளரின் எதிர்கால வாய்ப்பிற்கு கேடு விளைவிக்கத்தக்க வகையிலும் தவறான மற்றும் இக்கட்டான அறிக்கைகளை பத்திரிகைகள் வெளியிடுவதை தவிர்க்க வேண்டும். பத்திரிகைகள் யாதொரு வேட்பாளரின்/கட்சியின் மீது சரிபார்க்கப்படாத குற்றச்சாட்டுகளை வெளியிடக் கூடாது.

4. ஒரு வேட்பாளரை/கட்சியை முன்னிலைப்படுத்துவதற்காக நிதி அல்லது ஏனைய பிற வகையில், தூண்டுவதை பத்திரிகைகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. எந்த ஒரு வேட்பாளராலும்/கட்சியாலும் அல்லது யாதொரு வேட்பாளர்/கட்சி சார்பாக அளிக்கப்படும் விருந்தோம்பல்களை அல்லது ஏனைய வசதிகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

5. குறிப்பிட்ட வேட்பாளருக்கு/கட்சிக்கு ஆதரவு திரட்ட பத்திரிகைகள் சலுகை காட்டுமென எதிர்பார்க்கக் கூடாது. அவ்வாறு செய்யப்படுமாயின், பிற வேட்பாளர்/கட்சிக்கு சரியான பதில் அளிக்கிற உரிமையை அது அனுமதிக்க வேண்டும்.

6. பத்திரிகைகள், அதிகாரத்திலுள்ள அரசு/கட்சியின் சாதனைகள் தொடர்பாக அரசு செலவில் யாதொரு விளம்பரத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது/வெளியிடக் கூடாது.

7. தேர்தல் ஆணையம்/தேர்தல் நடத்தும் அதிகாரிகள் அல்லது தலைமைத் தேர்தல் அதிகாரி அவ்வப்போது வழங்குகின்ற உத்தரவுகளை/ஆணைகளை/அறிவுரைகளை பத்திரிகைகள் பின்பற்ற வேண்டும்.

**(ii)** வாக்குப் பதிவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக் கணிப்புகள் குறித்த வழிகாட்டிக் குறிப்புகள் – **1996**

வாக்குப் பதிவுக்கு முந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகளை வெளியிடுதல் உகந்ததா என்பதையும், வாக்குப் பதிவுக்கு முந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிடுதல் மற்றும்

அவற்றின் நோக்கம் குறித்தும் கருதிப் பார்த்த இந்திய பத்திரிகையாளர் மன்றம் தேர்தலை சூழ்ச்சித் திறத்துடன் கையாளுதல் மற்றும் கருத்துக்களை திரித்துக் கூறுதல் ஆகியவற்றுக்கு தங்களுடைய அமைப்பை பயன்படுத்தக் கூடாது. மேலும், விருப்பமுள்ள கட்சிகள் தங்களைத் தவறாகப் பயன்படுத்துவதையும் அனுமதிக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்துள்ளது.

1. தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய காலகட்டத்தில், ஜனநாயக நாட்டில் ஊடகங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்று பத்திரிகையாளர் மன்றம் அறிவுறுத்துகிறது. அப்பாவி வாக்காளர்களை திசை திருப்பு வகையில் வகுப்பு, மதம் மற்றும் பிரிவு அடிப்படையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரச்சாரம் செய்யவும், வாக்குப் பதிவுக்கு முந்தைய கருத்துக்கணிப்பு என்று கூறப்படும் நவீன முறை மூலமாக, தனிநபர் அல்லது குழுக்கள் அச்சு ஊடகத்தை தவறான முறையில் பயன்படுத்துவது இன்று அதிகரித்து வருகிறது. பல சமயங்களில் வாக்குவாதம் மற்றும் கலகங்களை விளைவிக்கும் பிரச்சாரங்களை கண்டுபிடிப்பது கடினமல்ல. ஆனால், வேண்டுமென்றே இத்தகைய எண்ணத்துடன் வாக்குப்பதிவுக்கு முந்தைய கருத்துக்கணிப்பை பயன்படுத்தப்படுவதை கண்டறிவது எளிதான ஒன்றல்ல. எனவே, வாக்குப் பதிவுக்கு முந்தைய கருத்துக்கணிப்பை வெளியிடும் செய்தித் தாள்கள் அதை வழிநடத்தும் தனிநபர் மற்றும் நிறுவனங்கள், அதை செயல்படுத்தும் நிறுவனங்கள், மாதிரியின் அளவு மற்றும் இயல்பு மாதிரி **(DAVP)** தேர்ந்தெடுக்கப்படும் முறை, அதில் முடிவுகளில் இருக்கக்கூடிய பிழைகள் போன்ற விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடும்படி பத்திரிகையாளர் மன்றம் அறிவுறுத்துகிறது.

2. பலகட்ட வாக்குப்பதிவுகள் உள்ள நிலையில், ஏற்கனவே நடந்து முடிந்த தேர்தல்களுக்கான கருத்துக் கணிப்புகளை ஊடகங்கள் நடத்துகின்றன. இது தேர்தல் இன்னும் தொடங்கப்படாத இடங்களிலுள்ள வாக்காளர்களை ஈர்க்கக் கூடும். தேர்தலை நேர்மையான முறையில் நடத்தவும் ஏனைய பிற காரணிகளால் வாக்காளர்களின் கவனம் ஈர்க்கப்படாமல் இருக்கவும் இறுதிகட்ட தேர்தல் முடியும் வரை, தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பை நடத்தாமல் இருக்கும்படி ஊடகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. எனவே, தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு குறித்து பின்வரும் வழிகாட்டிக் குறிப்புகளை பத்திரிகைகள் பின்பற்ற வேண்டுமென பத்திரிகையாளர் மன்றம் கேட்டுக் கொள்கிறது.

வழிகாட்டிக் குறிப்புகள்:

கடைசிகட்ட வாக்குப்பதிவு முடிவடையும் வரையில், அவர்களிடம் உண்மைத் தன்மை இருக்கலாம் என்ற போதிலும், வாக்குப் பதிவுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவை எந்தவொரு பத்திரிகையும் வெளியிடக் கூடாது.

இந்திய தேர்தல் ஆணையம்

இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னேற்பாடாக, "பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது" குறித்த புகார்களைப் பெறுவதற்காக தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் இத்தகைய புகார்களின் அடிப்படையில் விரைந்து நடவடிக்கை எடுக்க இயலும். இந்தியத் தேர்தல் ஆணையம், இந்திய பத்திரிகையாளர் மன்றத்துடன் கலந்தாலோசித்து, தனிப்பட்ட பத்திரிகையாளர்கள்/குடிமக்களை நியமனம் செய்ய வேண்டும். அவர்கள், இந்திய தேர்தல் ஆணையத்தால் பல்வேறு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் இணைந்து செயல்படுவார்கள். இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள்/குடிமக்கள் "பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது" குறித்து இந்திய பத்திரிகையாளர் மன்றத்திற்கும், இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் அறிக்கைகள் அளிக்க இயலும்.

சுயக்கட்டுப்பாடு

"பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது" குறித்த நிகழ்வை ஆய்வு செய்வதற்கு சுயக் கட்டுப்பாட்டு முறையே சிறந்த தேர்வாகும். இருப்பினும், இதில் அவர்கள் எப்பொழுதுமே சட்டத்தை மீறுபவர்களாக இருப்பதாலும், அவர்கள் நன்னெறி சார்ந்த வரையறைகளையும், தேர்தல் நடத்தை விதிமுறைகளையும் தானாக முன்வந்து பின்பற்ற மறுப்பவர்களாக இருப்பதாலும், அவை சட்டப்படி கட்டாயமானதல்ல என்பதாலும், சுயக் கட்டுப்பாடு என்பது, இப்பிரச்சனைக்கு பகுதியளவே தீர்வாக அமைகிறது.

வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் பிரச்சாரத்தை தேர்தல் நடைபெறும் இடங்களில் 48 மணி நேரத்திற்கு முன்னதாக தொலைக்காட்சி அலைவரிசைகள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற இந்திய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு பின்பற்றப்படுகின்றதா என்பதையும், மேலும், தற்போது ஊடகத்திற்கு இப்பிரிவு பொருந்தாது என்பதால், அத்தகைய வரையறைகளை அச்சு ஊடகங்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்பாளர்களும் விவாதிக்க வேண்டும்.

கல்வி

போலியான அறிக்கை அளிப்பது, நடுநிலையான மற்றும் நேர்மையான அறிக்கை அளிப்பது ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டை வாக்காளர்களுக்கு கற்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு கருத்து தெரிவிக்கிறது. இதனை, இந்திய பத்திரிகையாளர் மன்றம் பல்வேறு பத்திரிகையாளர் மன்றங்கள், செய்தித் தாள்கள் உரிமையாளர்கள் உதவியுடன், செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் மூலமாக மேற்கொள்ள இயலும். பார்வையாளர்களுக்கு கற்பிப்பதற்காக, வெவ்வேறு நகரங்களில் கருத்தரங்குகள், பயிலரங்குகள் முதலியவற்றை உள்ளூர் பத்திரிகைச் சங்கங்களுடன் இணைந்தும் நடத்தப்பட வேண்டும். இந்திய பத்திரிகையாளர் மன்றம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதி, செய்தித்தாள் உரிமையாளர்கள் சங்கங்கள், தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் சங்கங்கள் ஆகியவை அத்தகைய கருத்தரங்குகள், பட்டறைகளுக்குத் தேவையான ஆதாரங்களையும், நபர்களையும் வழங்கலாம். வாக்காளர்களுக்கும், குடிமக்களுக்கும் கற்பிக்கப்படும் இத்தகைய நடைமுறை தேர்தல் நடப்பதற்கு முன்பும், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம்

குறிப்பாக "பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை" தடை செய்வதற்கான தீர்வுகளை காண்பதற்கும், இது குறித்து வேண்டுமென்றே செய்தி வெளியிடுவதை தடை செய்வதற்கும், இந்திய பத்திரிகையாளர் மன்றம், இந்திய தேர்தல் ஆணையம், பத்திரிகை ஆசிரியர்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஊடக உரிமையாளர்கள் இணைந்து தேசிய மாநாடுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சாரங்கள் ஆகியவற்றை மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் மேற்கொள்ள வேண்டும்.

மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்தும், அதனை எவ்வாறு தடை செய்ய வேண்டும் என்பது குறித்தும் ஆலோசிப்பதற்காக பத்திரிகை உரிமையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இதழியலாளர்களின் தேசிய சங்கங்களுடன் தனிக் கூட்டங்களை நடத்த வேண்டும். பணம்கொடுத்து செய்தி வெளியிடுகின்ற நிகழ்வு தடுக்கப்படவில்லையெனில், எந்தவொரு அரசியல் கட்சியும் பயனடையாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் அனைத்துக் கட்சிக் கூட்டங்களையும் கூட்ட வேண்டும். இதேபோன்று பத்திரிகை நிறுவனங்களின் உரிமையாளர்கள் "பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதற்காக" சட்டத்திற்குப் புறம்பாக

பணம் பெறப்பட்டது என்பது குறுகிய கண்ணோட்டமுடையது என்பதுடன், இறுதியில் படிப்பவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையேயான நம்பகத்தன்மையை இழப்பதற்கு இது வழிவகுக்கும். எனவே, இது ஊடகங்களின் நலனுக்குப் பாதகமாக அமையும் என்பதையும் ஊடக நிறுவனங்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

நாடாளுமன்றம்

செய்தித்தாள்கள், தொலைக்காட்சி அலைவரிசைகளில் செய்திகளை திரட்டுவதற்காக, பணம் கொடுக்கும் வழக்கத்தை தடுப்பதற்கும், இதனை 'தேர்தல் ஒழுங்கீனச் செயல்' என்றோ ஊழல் நடவடிக்கை மற்றும் தண்டிக்கத்தக்க குற்றம் என்றோ அறிவிப்பதற்கும், 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் மாற்றம் செய்யக் கருதுவது தொடர்பாக கருத்து கேட்பதற்கு, நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களின் சிறு குழு ஒன்று இருக்க வேண்டும்.

இந்த அனைத்து முயற்சிகளும் நேர்மையான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமாயின், இந்திய ஊடகங்களில் காணப்படும் இத்தகைய ஒழுங்கீனங்கள் முற்றிலுமாக நிறுத்தப்படாவிட்டாலும், கணிசமான அளவுக்கு அவற்றை குறைக்க இயலும்.

பரிந்துரைகள்

கீழ்க்கண்ட பரிந்துரைகளை அரசு செயல்படுத்த வேண்டும் என்று இது பரிந்துரை செய்கிறது.

1. பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை தண்டிக்கத்தக்க ஒழுங்கீனச் செயலாகச் செய்யும் வகையில் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

2. பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்த புகார்களுக்கு தீர்ப்பளிப்பதற்கும், இவ்விஷயத்தில் இறுதித் தீர்ப்பளிப்பதற்கும் இந்திய பத்திரிகையாளர் மன்றத்திற்கு முழு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

3. பத்திரிகையாளர் மன்றச் சட்டத்தை அதன் பரிந்துரைகள் கட்டுப்படுத்துகிற வகையில் செய்வதற்கும், மின்னணு ஊடகத்தை செயல் வரம்பின் கீழ் கொண்டு வருவதற்கும் ஏற்றவாறு செய்யப்பட வேண்டும்.

4. இந்திய பத்திரிகையாளர் மன்றத்தில் மின்னனு மற்றும் ஏனைய ஊடகங்களிலிருந்து பிரதிநிதிகளைச் சேர்ப்பதற்காக அது சீரமைக்கப்பட வேண்டும்.

அடிக்குறிப்பு:-

துணைக்குழுவின் அறிக்கை மன்றத்தின் பதிவுருவில் குறிப்பு ஆவணமாக தொடர்ந்து நீடிக்கலாம் என பத்திரிகையாளர் மன்றம் முடிவு செய்துள்ளது.

செயல்படும் பத்திரிகையாளர் சட்டத்தை வலுப்படுத்துவது குறித்த பிரச்சனை தனியாக கருதிப் பார்க்கப்படலாம் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புத் தூதர் மூலமாக

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி – 110 001

எண். 3/1/2011/SDR நாள்: 03.02.2011

பெறுநர்
செயலாளர்,
சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்,
சட்டப் பேரவைத் துறை,
சாஸ்திரி பவன்,
புதுதில்லி

**பொருள்: 1961ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் தேர்தல் நடத்தை விதிகளின் திருத்தத்துக்கான செயற்குறிப்புகள்.**

ஐயா,

இது, அவ்வப்போது ஆணையத்தால் அனுப்பப்பட்ட சட்டத் திருத்தத்துக்கான செயற்குறிப்புகளின் தொடர்ச்சி ஆகும். பின்வரும் நேர்வுகளிலும் திருத்தங்கள் அவசியமென்று ஆணையம் விரும்புகிறது.

(i) வேட்பாளர்கள் உறுதிமொழிப் பத்திரத்தை தவறாக தாக்கல் செய்தல் குறித்த புகார்கள் தொடர்பாக 1951ஆம் ஆண்டுச் சட்டத்தின் 125ஏ பிரிவை திருத்தம் செய்தல்.

(ii) ''பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை'' லஞ்சம் கொடுப்பது அல்லது தேர்தல் குற்றங்களில் சேர்க்கப்பட்டிருப்பது.

(iii) தேர்தல் செலவு உச்சவரம்பை உயர்த்துதல்.

<u>125ஏ பிரிவுக்கான திருத்தம்:</u>

பிரிவு 125ஏ, வேட்பு மனு தாக்கல் செய்வது தொடர்பாக, தேர்தல் நடத்தும் அதிகாரியின் முன் வேட்பாளரால் தவறான உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான அபராதம் விதிப்பதற்கு வகை செய்கிறது. இப்பிரிவு இக்குற்றத்திற்காக ஆறு திங்கள் சிறைத் தண்டனை

அல்லது அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து விதிப்பதற்கு வகை செய்கிறது. அரசு ஊழியர் முன்னிலையில் தவறான தகவலை தாக்கல் செய்வது இந்திய தண்டனை விதிக்கோவை 177ஆம் பிரிவின்கீழ் ஆறு மாத சிறை தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் அபராதத்துடன் கூடிய சிறைத் தண்டனை விதிக்கத்தக்க குற்றமாகும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், தவறான உறுதி மொழிப் பத்திரம் தாக்கல் செய்தது குறித்த புகாரை எந்த அதிகாரியால் மற்றும் அந்த அதிகாரி முன்னால் தாக்கல் செய்ய வேண்டும் என திட்டவட்டமாக குறிப்பிடப்படவில்லை. குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பின் 1965ஆம் பிரிவின்கீழ், சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் அல்லது அவருக்கு சார்நிலை அலுவலராகவுள்ள சில அரசு அலுவலர்கள் எழுத்துப்பூர்வமாக புகார் அளித்தால் மட்டுமே (தவறான தகவலை தாக்கல் செய்தல்) 177ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றம் அதனை குற்றமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளும். இவ்விதித் துறைகளைக் கருதிப் பார்க்கையில், ஆணையம் வெளியிட்ட 2.6.2004ஆம் ஆண்டு நாளிட்ட சுற்றோட்டக் கடிதத்தில் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) யாதொரு வேட்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட தவறான உறுதிமொழிப் பத்திரங்கள் தொடர்பாக தேர்தல் நடத்தும் அதிகாரியின் முன்னிலையில் ஏதேனும் புகார் அளிக்கப்படுமாயின், புகாரின் தகுதி குறித்து தேர்தல் நடத்தும் அதிகாரி, முதல் தோற்றத்திலேயே ஐயமறத் தெளிந்தால் சம்பந்தப்பட்ட வேட்பாளரின் மீது குற்ற வழக்கு நடவடிக்கை தொடர்வதற்காக மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் முன் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

2.2 அலகாபாத் நீதிமன்றம், லக்னோ ஆயத்தைச் சேர்ந்த மனுவில் (டாக்டர் சுப்ரமணிய சுவாமி எதிர் இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் ஏனையோர் ரிட் மனு எண்.3969/2005)–ல் உயர்நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்தபோது, இந்தத் தேர்தலின் செயல் நோக்கத்திற்காக, தேர்தலுக்குப் பின்னர், தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவல் முடிவடைகிறது என்று கருத்து தெரிவித்தது. தவறான உறுதிமொழிப் பத்திரங்கள் குறித்த சில புகார்களைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட வேட்பாளர், உயர்நீதிமன்றம் தெரிவித்த கருத்துரையைச் சார்ந்துள்ளனர். தேர்தல் நடத்தும் அதிகாரியும் வேட்பாளரின் கூற்றுக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதன் விளைவாக புகார்களை இறுதி செய்யலாம்.

2.3 வேட்பு மனு தொடர்பாக வேட்பாளர்களால் தாக்கல் செய்யப்படும் உறுதிமொழிப் பத்திரத்தில் அளிக்கப்பட்டுள்ள தவறான அறிக்கை குறித்த யாதொரு புகாரை தேர்தல் நடத்தும் அதிகாரி முன்னிலையில், உரிய சான்றுகளுடன், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் புகார் அளிப்பவர் தாக்கல் செய்ய வேண்டும் என்பதையும் இதன் மீது உரிய

தொடர் நடவடிக்கை மேற்கொள்வது தேர்தல் நடத்தும் அதிகாரியின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதையும், 125ஏ ஆம் பிரிவின் கீழ் உட்பிரிவாக சேர்க்கப்படலாம் என ஆணையம் பரிந்துரை செய்கிறது. 2004ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட செயற்குறிப்புகளின் தொகுப்பில் தவறான உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு, குறைந்தளவு சிறைத் தண்டனையை இரண்டு ஆண்டுகளாக அதிகரிப்பதற்கான செயற்குறிப்பை ஆணையம் தயாரித்திருந்தது என்பதை இங்கு நினைவுபடுத்தலாம்.

<u>பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல்</u>

3.1 இந்திய பத்திரிகையாளர் மன்றம் (Press Council of India) கடந்த ஆண்டு தேர்தல் தொடர்பான பணம் கொடுத்து செய்தி வெளியிடும் வழக்குகள் தொடர்பான அதன் அறிக்கையில், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது லஞ்சம் கொடுப்பதாகக் கருதப்படலாம் என பரிந்துரை செய்துள்ளது. அறிக்கையின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3.2 "பணம் கொடுத்து செய்தி வெளியிடும் செயல்" நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல்களில் கேடு விளைவிக்கக்கூடிய வகையில் பங்காற்றுகிறது. வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் செய்யப்படும் விளம்பரங்களிலிருந்து, வேறுபடுத்திக் காணக்கூடியவாறு செய்தி அறிக்கைகளினால் பொதுமக்கள் பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர் அல்லது அவற்றில் ஒன்றிவிடுகின்றனர். கவர்ச்சிகரமான செய்திகளை வெளியிடுவதில், அதில் உள்ள பொய் தோற்றங்கள் வாக்காளர்களை முற்றிலும் தவறாக வழிநடத்துகிறது. இதனை மேலும் மோசமாக்குகின்ற வகையில் கணக்கில் வராத பணத்தை பயன்படுத்துதல், வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் இச்செலவினத்தை குறைவாகத் தெரிவித்தல் போன்ற ஒழுங்கீனச் செயல்களில் வேட்பாளர்கள் ஈடுபடுவதும் இந்த நடவடிக்கையில் அடங்குகிறது. தேர்தல் ஆணையம், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது என்பது போட்டியிடும் வேட்பாளர்களையும் வாக்காளர்களையும் பாதிக்கிற தவறான வழிகாட்டுதலாக அமைகிறது என்று ஆணையம் கருதுகிறது. இதுகுறித்து உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

3.3 எனவே, ஆணையம் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் அத்தியாயம் III–ன் பகுதி VII–ன்கீழ் யாதொரு வேட்பாளர், தேர்தலில் வெற்றி வாய்ப்பை பாதிக்கும் தப்பெண்ணத்துடன் யாதொரு வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பைபாதிக்கக்கூடிய வகையில், மிகைப்படுத்தி, பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது, அல்லது அதற்கு உடந்தையாக இருப்பது ஒரு தேர்தல் தொடர்பான குற்றமாக இருப்பதால், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் மூன்றாம் அத்தியாயத்தின் VII ஆம் பகுதியின் கீழ் குறைந்தது இரண்டாண்டு சிறை தண்டனையை விதிக்க வகை செய்யும் பொருட்டு 1951ம்

ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் விதிமுறைகளை உருவாக்க வேண்டுமென ஆணையம் பரிந்துரை செய்கிறது.

<u>தேர்தல் செலவு உச்சவரம்பு</u>

4.1 தற்போதைய தேர்தல் செலவு உச்சவரம்பானது மக்களவை தொகுதிக்கு ரூ.25 இலட்சமாகவும், சட்டமன்ற பேரவைத் தொகுதிக்கு ரூ.10 இலட்சமாகவும் உள்ளது. இந்த உச்சவரம்பானது, சில சிறிய மாநிலங்களைப் பொறுத்த நேர்வில் சற்று மாறுபடுகிறது. இந்த உச்சவரம்பானது 2003 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் ஆணையம் 4.10.2010 அன்று நடத்திய கூட்டத்தில், பெரும்பாலான கட்சிகள் உச்சவரம்பை உயர்த்த வேண்டுமென கருத்து தெரிவித்தன.

4.2 தற்போது உச்சவரம்பு திருத்தியமைக்கப்பட்டு 7 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், உச்சவரம்புத் தொகையை மேற்கொண்டும் திருத்தியமைப்பதற்கு இது சரியான தருணம் என்று ஆணையம் கருதுகிறது. 2003ம் ஆண்டில் தேர்தல் செலவு உச்சவரம்பை கடைசியாக திருத்தியமைத்த நேரத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 646.5 மில்லியன் ஆகும். 2010 ஆம் ஆண்டு இறுதி வாக்காளர் பட்டியலின் படி வாக்காளர் 730 மில்லியனுக்கும், அதிகமானவர்களாக உயர்ந்துள்ளனர். தகுதியான நாளான 1.1.2011ன் படி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டுக்குப் பின்னர், வாக்காளர்களின் எண்ணிக்கை 740 மில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு வாக்காளர்களின் எண்ணிக்கை 2003ம் ஆண்டுக்குப் பிறகு கிட்டத்தட்ட 100 மில்லியன் அதிகரித்துள்ளது. மேலும் இக்கால அளவில் வினாப்புள்ளி குறியீடும் 1.6 மடங்கு அதிகரித்துள்ளது.

4.3. எனவே ஆணையம், 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் கீழ் விலைவாசி குறியீடு ஏற்றத்திற்கேற்ப தேர்தல் செலவு உச்சவரம்பை அதிகரிக்கலாம் என உத்தேசித்துள்ளது. பல்வேறு மாநிலங்களுக்கான உத்தேசிக்கப்பட்ட உச்சவரம்புத் தொகை, இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

*தங்கள் உண்மையுள்ள,*

(K.F. வில்பிரெட்)
செயலாளர்.

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி 110011.

எண்.3 / ER/2004 / JS /II  நாள்:02.06.2004

பெறுநர்
அனைத்து மாநிலங்களின், மத்திய அரசின்
நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத்
தேர்தல் அதிகாரிகள்.

பொருள்: வேட்பாளர்கள் பின்னனி குறித்து வாக்காளர்கள் தகவல் பெறும் உரிமை தொடர்பாக 27.03.2003 ஆம் நாளிட்ட தேர்தல் ஆணையத்தின் ஆணை.

ஐயா,

1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளைச் சேர்ந்த விதி 4A–ன் விதித்துறைகளைச் சேர்ந்த விதி 4A –ன் விதித்துறைகள் மற்றும் ஆணையத்தின் மேற்சொன்ன ஆணையின் மீதும் தங்களது கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். மேற்சொன்ன விதி 4A–விற்கிணங்க, ஒவ்வொரு வேட்பாளரும், 1961ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் இணைப்பில் உள்ள படிவம் 26–ல் ஒரு உறுதிமொழிப் பத்திரத்தையும், 27.03.2003 ஆம் நாளிட்ட ஆணையத்தின் ஆணையின்படி வேட்பாளர்கள், தங்களுடைய சொத்து குறித்த நிலுவை வழக்குகள் (தன்னைச் சார்ந்தோர் உட்பட), அரசுத் துறைகள் முதலியனவற்றிற்குச் செலுத்த வேண்டிய அவர்களுடைய கடன் பொறுப்புக்கள், அவர்களுடைய கல்வித்தகுதி உட்பட அனைத்தையும், ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

வேட்பாளர்கள், உறுதிமொழிப்பத்திரங்களில் குறிப்பாக சொத்துக்கள் தொடர்பான பகுதியில், சரியான தவல்களை அளிக்கவில்லை என பல்வேறு நேர்வுகளில், ஆணையத்திற்கு புகார்கள் வரப்பெற்றுள்ளன. இச்சூழ்நிலையில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப்பத்திரத்தில் தவறான தகவல்களை அளித்ததகற்ான தண்டனைகளை பற்றி 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநித்துவச் சட்டத்தின் 125A ஆம் பிரிவு தெரிவிப்பதையும், இந்திய தண்டனை விதிக்கோவையின் 177ஆம் பிரிவு பொதுவாக அரசு ஊழியரிடம் தவறான தகவல் அளிப்பதற்கான தண்டனை விதிமுறைகளைக் கொண்டிருப்தையும் குறிப்பிடலாம். 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின் 195 ஆம் பிரிவின் கீழ் சம்மந்தப்பட்ட அரச ஊழியர் எழுத்து மூலமான புகார் அளித்தால் தவிர அல்லது

தவறான தகவல் தாக்கல் செய்த வழக்குகளில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, யாதொரு வேட்பாளரால் தவறான தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அதற்கு அதரவாக சில சான்று ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ள யாதொரு நபரால் யாதொரு புகார் அளிக்கப்பட்டுள்ள போது, சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரிகள், உரிய அதிகாரியின் முன் முறையான புகார்களை தாக்கல் செய்வதன் மூலம், சம்மந்தப்பட்ட வேட்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதனை ஒப்புக்கொண்டமைக்கு ஒப்புகை அளிக்கவும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒம்)/--

(S.R. கார்)
அரசு சார்புச் செயலாளர்.

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன்சதன் அசோகா சாலை, புது தில்லி –110 001.

எண். 491/ஊடகம்/2009 நாள் 18.03.2011

பெறுநர்

அனைத்து மாநிலங்கள், மத்திய அரசின்
நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகள்.

(கனிவான கவனத்திற்கு : அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்குவங்கம்)

பொருள்: ஊடகத்தில் செய்திகள் வெளியிடுவது என்ற போர்வையில் அதாவது தேர்தல்களின் போது பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை

ஐயா,

பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது தொடர்பாக முறையே ஆணையத்தின் 8–6–2010 மற்றும் 23–9–2010 ஆம் நாளிட்ட 491/ஊடகம்/2009 ஆம் எண் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருள் குறித்தும் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது தொடர்பாக மாவட்ட அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவின் (MCMC) ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு தொடர்பான வழக்குகளைத் தீர்வு செய்வதற்கு, கீழே (C)–இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினருடன் மத்திய அரசின் ஊடகத்துறை தனி பிரதிநிதியாக மாநிலத்தின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியில் இந்திய தகவல் பணி அதிகாரி ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்கவும் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

அவ்வாறிருக்கையில், மாநில அளவிலான குழு (தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் கம்பிவட கட்டமைப்பில் விளம்பரத்திற்காக அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் அளிக்கிற விண்ணப்பங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக பின்வருவோர் கொண்ட மாநில அளவிலான ஊடகச் சான்றிதழ்&கண்காணிப்புக்குழு என அழைக்கப்படும்:–

a) கூடுதல்/ இணை தலைமைத் தேர்தல் அதிகாரி – தலைவர்
b) மாநிலத்தின் தலைமையிடத்தில் அமைந்துள்ள யாதொரு நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரி
c) செய்தி மற்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்திலிருந்து கேட்டுக்கொ[illegible]கிற அதிகாரியாக இருக்கிற ஒரு வல்லுநர்

d) மத்திய அரசின் ஊடகத்துறையைச் சேர்ந்த மாநிலத்தின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியில் நியமிக்கப்பட்ட இந்திய தகவல் துறையைச் சேர்ந்த (சார்புச் செயலாளர்/துணைச் செயலாளர் நிலையில்) அதிகாரி மேலே (சி)–இல் குறிப்பிடப்பட்ட வல்லுநர்களிலிருந்து தனியாக

தங்கள் உண்மையுள்ள,
(ஒ.ம்.)/–
(யஷ்வீர் சிங்)
இயக்குநர்

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி–110 001.

எண். 491/ஊடகம்/2011 (விளம்பரம்) நாள் 16.08.2011

பெறுநர்
அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின்
நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகள்.

பொருள்: **தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகளுக்கு அல்லது அதன் நிர்வாகிகளுக்கு/ அலுவலக நிர்வாகிகளுக்குச் சொந்தமான தொலைக்காட்சி/ கேபிள் அலைவரிசைகளில் வேட்பாளர்களின் விளம்பரங்களை கையாளுவதற்கான வழிகாட்டி குறிப்புகள்.**

ஐயா/அம்மையீர்,

அரசியல் கட்சிகள் அல்லது அதன் நிருவாகிகள்/ அலுவலக நிருவாகிகளுக்குச் சொந்தமான தொலைக்காட்சி/ கேபிள் அலைவரிசைகள் ஆகியவற்றில் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது அல்லது விளம்பரம் செய்வது குறித்து பல்வேறு கடிதங்களை ஆணையம் பெற்றுள்ளது என்பதை தெரிவிக்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். வெவ்வேறு அரசியல் கட்சிகள், பத்திரிகைகள் மற்றும் ஏனைய தனிநபர்களால் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இத்தகைய நேர்வுகளை கையாளுவதில் ஒரு சீரான தன்மையை கொண்டுவரும் பொருட்டு பின்வரும் வழிகாட்டி குறிப்புகளை வழங்குவதற்கு ஆணையம் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் அல்லது மாநில/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் சட்டமன்றப் பேரவைகள் கால அளவு முடிவடையக் கூடிய நாளுக்கு ஆறு திங்களுக்கு முன்னர், நேர்விற்கேற்ப மாநிலத்தில்/ மத்திய நேரடி ஆட்சிப் பகுதியில் உள்ள தொலைக்காட்சி அலைவரிசைகள்/ வானொலி அலை வரிசைகளில்/ செய்தித் தாள்களில் ஒலிபரப்புவதற்கு /வெளியிடுவதற்கான அவர்களுடைய நிலையான கட்டண வீத அட்டைகளை தலைமை தேர்தல் அதிகாரிகள் பெற்று ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

வேட்பாளர்கள் தொடர்பாக வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படும் விளம்பரங்களை மாவட்ட அளவிலான மற்றும் மாநில அளவிலான ஊடகச்

சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கண்காணித்து வேட்பாளர்கள் அலைவரிசைக்கு / செய்தித் தாள்களுக்கு யாதொரு கட்டணமும் வழங்காதிருந்தாலும் அது அவர்களுடைய தேர்தல் செலவுக் கணக்கில் நிலையான கட்டண வீத அட்டைகளின் அடிப்படையில் கருத்தியலான செலவினமாக சேர்ப்பதற்கு வேட்பாளர்களுக்கு அறிவிப்புகள் வழங்குவதற்காக, தேர்தல் நடத்தும் அதிகாரிக்குத் தெரிவிக்கப்படும். இல்லையெனில், அது பணம் கொடுத்து செய்தி வெளியிட்டதாகக் கருதப்படும். வேட்பாளர் சார்பாக வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்காக, தேர்தல் நடத்தும் அதிகரிப்பதற்காக நட்சத்திரப் பேச்சாளர்கள் அல்லது ஏனையோரால் செய்யப்படும் பிரச்சாரத்தில் இதுவும் சேர்க்கப்படும் அறிவிப்பின் நகல் ஒன்றும் தேர்தல் செலவு கண்காணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

நாடாளுமன்ற அல்லது சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலைப் பொறுத்த நேர்வில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரியால் நிலையான கட்டண வீத அட்டைகள் பெறப்படும். அதன் பின்னர் ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது போன்றவற்றைப் பொறுத்த வரையில் தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பிரச்சாரம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்சொன்ன வழிகாட்டி குறிப்புகள் குறித்து அரசியல் கட்சிகளுக்கும் ஊடகங்களுக்கும் விளக்குவார்கள்.

நிலையான கட்டண வீத அட்டையின் யாதொரு நடைமுறை பயன்பாடு தொடர்பான நுட்ப ஐயங்களைப் பொறுத்த வரையில், அதற்கான அறிவுரை வேண்டி இவ்விஷயம் DAVP மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

8–6–2010, 23–9–2010, 18–3–2011 ஆம் நாளிட்ட பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்த முந்தைய சுற்றோட்டக் குறிப்புகளையும் சேர்த்து இந்த அறிவுரைகளையும் படிக்க வேண்டும்.

இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவிக்கப்படலாம்.

தங்கள் உண்மையுள்ள.

(யஷ்வீர் சிங்)
இயக்குநர்

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி—110 001

எண்.491/பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல்/2012/ஊடகம்நாள் 15.03.2012

ஆணை

சட்டமன்றப் பேரவைத் தேர்தல்கள் அல்லது பாராளுமன்ற — சட்டமன்ற இடைத்தேர்தல்கள் நடைபெற்ற இடங்களில் மாநிலங்கள்—மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் ஏனையோரிடமிருந்து பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் தொடர்பான புகார்கள் மற்றும் குறிப்புரைகள் ஆணையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இது குறித்து அரசியல் கட்சிகள், பத்திரிகையாளர்கள், பொது மக்களிடமிருந்தும் புகார்கள் வரப் பெற்றுள்ளன.

ஆணையம், அனைத்து மாநிலங்கள் — மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் உள்ள மாவட்ட அளவிலான ஊடகச் சானறிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுக்களை அமைப்பதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது (காண்க ஆணையத்தின் 8.6.2010 ஆம் நாளிட்ட 491—ஊடகம்—2009 ஆம் எண் கடிதம் மற்றும் 23.9.2010 ஆம் நாளிட்ட 491 ஊடகக்கொள்கை— 2010 ஆம் எண் கடிதம்) மேலும், 18.3.2011 ஆம் நாளிட்ட கடிதத்தின்படி, மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களை அமைப்பதற்கும், அனைத்து மாநிலங்கள்) மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, ஆணையத்தின் 16.6.2011 ஆம் நாளிட்ட அதன் ஆணையின்படி, இந்திய தேர்தல் ஆணையம் குழு ஒன்றை ஏற்படுத்தியது. பின்வரும் உறுப்பினர்களுடன் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்—ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள்—குறிப்புரைகளை ஆய்வு செய்யும் பொருட்டு இக்குழு வலுப்படுத்தப்பட்டது:—

1. கூடுதல் தலைமை இயக்குநர் (செய்திகள்) செய்தி சேவைப் பிரிவு, அகில இந்திய வானொலி நிலையம், புதுதில்லி.
2. கூடுதல் தலைமை இயக்குநர், DAVP, புதுதில்லி.
3. அரசு முதன்மைச் செயலாளர்— செயலாளர் (தேர்தல் செலவுப் பொறுப்பு)
4. அரசு முதன்மைச் செயலாளர் (சட்டம்)

5. அரசு முதன்மைச் செயலாளர் (குறிப்புரை பெறப்பட்ட இடத்திலுள்ள மாநில –மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் பொறுப்பாளர்)
6. முதன்மைச் செயலாளர் (CC&BE பிரிவு பொறுப்பு)
7. இயக்குநர்–முதன்மைச் செயலாளர்–துணைச் செயலாளர் (ஊடகப் பிரிவு) குழுத்தலைவர்.

தொடர் எண்.1 மற்றும் தொடர் எண்2–இல் காணும் உறுப்பினர்கள் சம்மந்தப்பட்ட அமைச்சர்கள்–துறைகளின் மூலம் நியமனம் செய்தல்.

மேற்சொன்ன குழுவின் பங்கு பின்வருமாறு அமைந்திருக்கும்:–

1. மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடமிருந்து பெறப்பட்ட குறிப்புரைகளை ஆய்வு செய்தல்,
2. பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்த யாதொரு மாநிலம் –மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி என்று குறிப்பிடப்படாத, ஆணையத்தால் நேரடியாகப் பெறப்பட்ட குறிப்புரைகள் மீதான ஆய்வு மற்றும் பரிந்துரை.
3. பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களால் உத்தேசிக்கப்பட்ட பிரச்சாரத்திற்காக மின்னணு மற்றும் அச்சு ஊடகம் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகள் (c) அச்சு மற்றும் மின்னணு ஊடகம்இரண்டின் மூலமாக பின்பற்றப்பட வேண்டிய, செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை போன்ற பிரச்சினைகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்தில் ஆதரவு கொள்கை உருவாக்கம்.
4. ம,த்திய, மாநில அரசுகளின் தலைமை தேர்தல் அதிகாரிகளால் ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட ஏனைய யாதொரு விஷயம் குறித்து ஊடகம் கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணைப்படி
(ஓம்)................

(யஷ்வீர்சிங்)
இயக்குநர்.

# இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி–110 001.

எண். 491/பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல்/2012/ஊடகம் நாள் 27.08.2012

பெறுநர்
அனைத்து மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின்
நேரடி ஆட்சிப் பகுதிகளின் தலைமை தேர்தல் அதிகாரிகள்.

பொருள்: பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியை நடவடிக்கை எடுத்து சோதிக்க அதாவது ஊடகம் மற்றும் தொடர்புடைய பொருண்மைகளில் பிரத்தியேகமான செய்தி விளம்பரங்கள் மறு ஆய்வு வழிகாட்டுக் குறிப்புகள்.

ஐயா–அம்மையீர்,

மேற்கண்ட பொருண்மையின் மீது தங்களுடைய கவனத்தை ஈர்க்க விழைகிறேன் மற்றும் இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதி மனு எண்6679–2004 இன் காரணமாக (தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் தி/எ் ஜெமினி டி.வி.தனியார் நிறுவனம் மற்றும் ஏனையோருக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் மின்னணு ஊடகத்தில் சேர்க்கப்படுவதற்குமுன் அனைத்து விளம்பரங்களிலும் முன்னாய்வு, ஆய்வு மற்றும் சரிபார்த்தல் செய்வதற்கான ஒரு குழுவை வேட்பாளர்களாக போட்டியிடும் தனியார் அல்லது அரசியல் கட்சிகள் அமைக்க அவசியமாகிறது என்பதை ஆணையம் 15.4.2004 ஆம் நாளிட்ட ஆணை எண்.509–75–2004–ஜேஎஸ்–ஐ வெளியிட்டிருக்கிறது எனபதைத் தெரிவிக்க விரும்புகிறேன். கூடுதல் பொறுப்பாக தொகைக் கொடுத்து விளம்பரம் கொடுக்கப்பட்ட செய்திகளின் மீது ஒரு சோதனை செய்வதற்கு ஆணையம் இதே எண் கொண்ட 8.6.2010, 23.9.2010, 18.3.2011 மற்றும் 16.8.2011 ஆம் நாளிட்ட கடிதங்களின் வாயிலாக ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு (எம்சி.எம்சி) ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் நேரங்களில் அமைக்க ஆணையம் மேலும் வழிகாட்டிகள் வெளியிட்டிருக்கிறது.

18.6.2010 ஆம் நாளிட்ட மற்ற ஆணைகள் தொகை கொடுத்து விளம்பரம் செய்வதன் மீது வெளியிடப்பட்டுள்ளன. மேலும், அதற்குபிறகு எனக்கு உத்தரவிடப்பட்டு கீழ்க்கண்டவைகளைத் தெரிவிக்க விழைகிறேன்.

## 1. மாவட்ட அளவு ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு (எம்.சி.எம்.சி)

1.1. கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவு ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்படும்.

a) மாவட்ட தேர்தல் அதிகாரி–தேர்தல் நடத்தும் அதிகாரி (பராளுமன்ற தொகுதியுடைய)

b) உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி (எஸ்டிஎம்–க்கு குறையாத அளவு)

c) மத்திய அரசு, தகவல் மற்றும் ஒலிப்பரப்பு அமைச்சக அலுவலர் (மாவட்டத்தில் ஏதேனுமிருப்பின்)

d) இந்தியப் பத்திரிகையாளர் சங்கத்தால் (PCI) பரிந்துரைக்கப்பட்ட தனிநபர் குடிமகன் / செய்தியாளர்.

e) மாவட்ட பொதுமக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட தகவல் அலுவலர்–இணையான–உறுப்பினர் செயலர்.

1.1.1. மேலே சொல்லப்பட்ட உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி விளம்பரங்களுக்கு சான்றிதழ் வழங்கும் நோக்கில், பாராளுமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி–மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் ஒரு உதவி தேர்தல் நடத்தல் அதிகாரி (எஸ்டிஎம் அளவுக்கு குறையாத) ஆகியோர் ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களாக இருப்பார்கள். இருப்பினும், பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி மேலும் பல வழக்குகளை ஆய்வு செய்வதற்காக மாவட்ட ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழுவில் ‘c’ ‘d’ மற்றும் ‘e’ நிலையில் கொடுக்கப்படுள்ளதை போல மூன்று கூடுதல் உறுப்பினர்கள் இருப்பார்கள்.

1.1.2. மத்திய அரசு, தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சக அலுவலர் மாவட்டத்தில் நியமிக்கப்படவில்லையானால், மாவட்ட தேர்தல் அதிகாரி மத்திய அரசு அதிகாரிக்கு முன்னுரிமை தந்து நியமிக்கலாம் அல்லது மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட ஒரு மாநில அரசு மூத்த அதிகாரி நியமிக்கப்படலாம்.

1.1.2. ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழுவில் சேர்க்கப்பட வேண்டிய பெயர்களை இந்திய பத்திரிகையாளர் சங்கம் வழங்கவில்லையென்றால், மாவட்டத் தேர்தல் அதிகாரி அவர்களே, தனிநபர் மூத்த குடிமகன் அல்லது இதழாளர் ஆகியோர், விருப்பம் தெரிவிக்கிறவர்கள் மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரியின் கருத்துப்படி அவருக்கு தகுதிப் பின்னணியும் மற்றும் நடுநிலையாளர் என்ற பதிவும் இருக்கின்றவரை நியமிக்கலாம்.

1.1.3. உறுப்பினர் – செயலர் (மாவட்ட பொது தகவல் அதிகாரி (DPRO) மாவட்டத் தகவல் அதிகாரி (DIO) அல்லது அதற்கு சமமான) மாநிலத்திற்குரிய மாநில குடிமை சேவைகளைச் சேர்ந்தவர்களிலிருந்து இருக்க வேண்டும்.

1.2. குழு இரண்டுத் தனித்தன்மைகள் வாய்ந்த செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

i. விளம்பரங்களை சான்றிதளிப்பதற்கு, இரண்டு குறிப்பிட்ட ஊடகத் சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் அதாவது தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி அதுபோன்ற விளம்பரங்களின் சான்றிதளுக்கான விளம்பரங்களை கவனித்து முடிவு செய்ய வேண்டும்.

ii. ஒரு கண்காணிப்பு ஏற்பாடு மூலம் அனைத்து உறுப்பினர்களால் பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் மற்றும் பலவற்றைப் பற்றி புகார்கள்–விவகாரங்களை ஆய்வு செய்யலாம்.

1.3 ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு விளம்பரத்திற்கு சான்றிதழ் அளித்தல் மற்றும் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளை ஆய்வு செய்தல் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுதலுடன் மக்கள் பிரதிநிதித்துவம் சட்டத்தின்கீழ் ஊடகத் தொடர்பான ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்துவதற்கும் உதவி செய்யலாம். அதனால் அக்குழுவினுடைய செயல்பாடுகள் பின்வருமாறு அடங்கியிருக்கும்:–

1.3.1. ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு அனைத்து ஊடகங்களையும் நுண்ணாய்வு (ஸ்கேன்) செய்யலாம். (எ.கா. செய்தித்தாள்கள், அச்சு ஊடகம், மின்னனு ஊடகம் கேபிள் கட்பிவடம் (கேபிள்நெட்ஒர்க்) இணையம், செல்லிடைப்பேசி, பிணையம் (மொபையில் நெட்ஒர்க்), மேலும் பல).

a. <u>பணம் கொடுத்து வெளியிடப்பட்ட ஐயுறுச் செய்திகள்</u> என்பது (செலவினப் பார்வையாளரால் அது குறிப்பிடப்பட்டு பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் மீது உள்ளபடியான செலவினத்தைச் சேர்ப்பதற்காக வேட்பாளர்களுக்கு அறிவிக்கைகள் அனுப்புவதற்காக அல்லது அவர்களுடைய தேர்தல் செலவினங்கள் கணக்கு தகவல் மற்றும் பொது மக்கள் தொடர்பு இயக்குநரின் விலை வீதங்களை அடிப்படையாகக் கொண்ட கருத்தியலான செலவினம் (தகவல் மற்றும் பொது மக்கள் தொடர்பு இயக்குநரின் விலையினை அடிப்படையாகக் கொண்ட கருத்தியலான செலவினம் (தகவல் மற்றும் பொது மக்கள் தொடர்பு இயக்குநரின் விலைகள் இல்லாதபோது DVAP–யின் விலைகளைப் பயன்படுத்தலாம்) ஏதேனும் தொகை

சேனல்களுக்கு –செய்தித்தாள்களுக்கு வேட்பாளரால் உள்ளபடியாக வழங்கப்பட்டிருக்கிறதா அல்லது வழங்கப்படாததா என இரண்டில் உள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு அல்லது எதையும் பொருட்படுத்தாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். அறிவிக்கையின் நகல் ஒன்று செலவினப் பார்வையாளருக்கு குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

b. மின்னனு ஊடகத்தில், அரசியல் விளம்பரங்களைக் கண்காணித்தல்குழுவினால் சான்றளிக்கப்பட்ட பின்னரே தொலைக்காட்சி வானொலி ஆகியவற்றில் ஒலிபரப்பு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை சோதிப்பதற்காக.

c. செலவினக் கண்காணிப்புக் கோணத்திலிருந்து வேட்பாளர்கள் தொடர்பாக வெளிப்படையாகவோ, அல்லது மறைமுகமாகவோ மற்ற ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களைக் கண்காணித்தல் (பொது விளம்பரம் அல்லது விளம்பரம் அல்லது வேண்டுகோள் மூலம் அல்லது வேட்பாளருக்காக அல்லது நட்சத்திர பிரச்சாரம் செய்பவரால் (களால்) அல்லது மற்றவர்கள் வேட்பாளரின் வாக்காளர் வெற்றி வாயப்பு நிலையைத் அழுத்தமாகப் பதியவைத்தல் ஆகியவைகள் இதனுடன் அடங்கியிருக்கும்.)

d. அச்சு ஊடகத்தில் விளம்பரங்கள் (ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு விளம்பரங்கள் வேட்பாளர்களின் சம்மதத்துடன் அல்லது தெரிந்துகொண்டளவில் அச்செலவுகள் வேட்பாளர்கள் கணக்கில் கொள்ளப்படும், என்பதைச் சரிபார்க்க வேண்டும் இருப்பினும் விளம்பரம் வேட்பாளரின் அதிகாரத்திற்கு உட்படாமலிருந்தால், அப்போது இந்திய தண்டனைச் சட்டம் 171 இன்படி சட்ட மீறல்களுக்காக வெளியீட்டாளர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கலாம்).

e. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 127யின் படி தேவைப்படும் தேர்தல் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் மற்றும் மற்ற ஆவணம் ஆகியவைகள் செய்யப்படும் அச்சகத்தார் மற்றும் வெளியீட்டாளர் பெயர் மற்றும் முகவரி ஏதேனுமிருப்பின் அதனைச் சரிப்பார்த்தல் (ஏதேனும் அச்சடிக்கப்பட்ட பொருள்கள் மீது அதனுடைய முகப்பில் அச்சகத்தார் மற்றும் வெளியீட்டாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் பதித்திருக்கவில்லையானால், அதனை தேர்தல் நடத்தும் ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக்குழு கவனத்திற்கு கொண்டு வந்து தேவையான மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும், மற்ற ஆவணம் என்ற வகையின் கீழ் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 பிரிவு 127–இன் நோக்கம் பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள், வரும்)

1.3.2 ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாக குறிப்பிட்ட படிவத்தில் (இணைப்பு 12 இல் குறிப்பிட்ட செலவின வழிகாட்டிகளின்படி) நாள்தோறும் அறிக்கை கணக்கு குழுவிறகு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் அதனுடைய நகல் தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் செலவின கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும். அது வேட்பாளரால் தேர்தல் விளம்பரம் மீது செலவிடப்படும் செலவினம் அல்லது உள்ளபடி செய்யப்படும் செலவினம் செய்திகள் வெளியிடுவதற்காகத்தானா என்பதை உறுதி செய்ய தேவையான ஆவணங்கள் வேட்பாளரால் அளிக்கப்பட வேண்டும் அல்லது பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் மதிப்பீடு செய்யப்பட்ட வழக்குகளில் குழுவால் கணக்கிடப்பட்டது போல கருத்தியலான செலவினம் உறுதிச் செய்யப்பட வேண்டும்.

1.3.3 ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு (MCMC) ஊடக கண்காணிப்புக்காக ஒரு பொருத்தமான நுண்ணொழுங்கமைப்பை உண்டாக்க வேண்டும் மற்றும் அதற்குண்டான போதிய மனித சக்தி மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும்.

2. மாநில அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழு

2.1 மாநில அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் அடங்கியிருப்பார்கள்.

a. தலைமைத் தேர்தல் அதிகாரி, தலைவர்
b. இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர்
c. குழுவால் இணைந்து செயல்படுகிற ஒரு வல்லுநர்
d. இந்திய தகவல் சேவை (IIS) அலுவலர், சார்புச் செயலர்–துணைச் செயலர் அளவில்) மாநிலத்தில் மத்திய நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியில் நியமிக்கப்பட்டு மேலே பத்தி (c) யில் உள்ள வல்லுநரை போல தனியாக இந்திய அரசு ஊடகத் துறை சார்பாக செயல்படுகிறவர்.
e. இந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்தால் நியமிக்கப்பட்ட தனிக் குடிமகன் அல்லது செய்தியாளர்

f. ஊடகத்தின் கூடுதல் – இணை தலைமை தேர்தல் அதிகாரி பொறுப்பு (உறுப்பினர் செயலர்)

2.1.1. குழுவில் சேர்க்கப்பட வேண்டிய பெயர்களை, இந்தியப் பத்திரிகைகள் சங்கம் தரவில்லையாயின் பின்னணி மற்றும் நடுநிலைத் தன்மை அடிப்படையில் தகுதியானவர் என தலைமை தேர்தல் அதிகாரி கருதுகின்ற மற்றும் விருப்பமிக்க யாரையும் சார்ந்திராத ஒரு மூத்த குடிமகன் அல்லது பத்திரிகையாளரை தலைமை தேர்தல் அதிகாரி தானே நியமனம் செய்யலாம்.

2.2. மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு ( MCMC ) இரண்டு தொகுதிகளாலான செயல்களை செய்ய வேண்டும்.

i. மேற்கூறிய 15.04.2004–ஆம் நாளிட்ட ஆணையத்தின் ஆணைப்படி விளம்பரத்திற்கு சான்றளித்தல் குறித்து மாவட்டம் மற்றும் கூடுதல்/இணை தலைமை தேர்தல் அதிகாரி குழுக்கள் இரண்டிலும் இருந்தும் வரப்பெற்ற மேல் முறையீடு குறித்து முடிவெடுத்து;

ii. மாவட்ட ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் முடிவிற்கு எதிரான அல்லது தானாகவே எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளுக்கு எதிரான மேல்முறையீடு குறித்த பணம் கொடுத்து செய்தி வெளியிட்ட அனைத்து வழக்குகளையும் ஆய்வு செய்தல். இத்தகைய நேர்வில் வேட்பாளர்களுக்கு அறிவிப்புகள் வழங்குமாறு சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு உத்தரவிட வேண்டும்.

2.2.1 விளம்பரங்களுக்கு சான்றளிக்கப்பட்டது மீதான மேல் முறையீடு, 15.04.2004 ஆம் நாளிட்ட மேற்சொன்ன ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு (a). (b) மற்றும் (c)–ல் உள்ள உறுப்பினர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (d) (e) மற்றும் (f)–ல் உள்ள உறுப்பினர்கள், பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவது தொடர்பான வழக்குகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2.1.2 சான்றளிப்பு தொடர்பான மாவட்ட மற்றும் கூடுதல் / இணை தலைமை தேர்தல் அதிகாரி குழுவிடமிருந்து வரப்பெற்ற மேல் முறையீடு 15.04.20014–ஆம் நாளிட்ட ஆணையத்தின் ஆணைப்படி, தலைமை தேர்தல் அதிகாரியால் தலைமை ஏற்கப்பட்ட மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம் மட்டுமே

இருக்கப்பெற்ற தீர்வு காணப்படும் என்றும்., இது தொடர்பாக ஆணையத்திடம் எந்த பரிந்துரையும் செய்யக் கூடாது.

3. **சான்றளிப்பு குறித்த கூடுதல்/இணை தலைமை தேர்தல் அதிகாரிகளின் குழு** 15.04.2004–ஆம் நாளிட்ட ஆணையத்தின் ஆணைப்படி கூடுதல்/ இணை தலைமை தேர்தல் அதிகாரியின் விளம்பரங்களுக்கு சான்றளிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு மேற்சொன்ன ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொடர்ந்து செயலாற்றுவதுடன் பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படும் வழக்குகள் மீதான அதிகாரத்தினையும் கொண்டிருக்காது.

4. **பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் மீதான மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் முடிவினை எதிர்த்து மேல்முறையீடு**

4.1 பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் மீதான மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் முடிவினை எதிர்த்து இந்திய தேர்தல் ஆணையத்திடம் யாதொரு மேல்முறையீடும் செய்யப்படும். மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு, தேவை என்று கருதினால் ஆலோசனை வேண்டி ஆணையத்திற்கு கேட்பு கடிதம் அனுப்பலாம். பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படும் வழக்குகள் மீதான புகார்கள் ஆணையத்திடம் நேரடியாக அளிக்கப்படும் நேர்வுகளில், ஆணையம் அவ்வழக்குகளை தொடக்க பரிசீலனைக்காக மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிற்கு அனுப்பப்படும்.

5. **பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள்**

பணம் கொடுத்து செய்திகள் வெளியிடப்படுவது குறித்து பின்வரும் வழிகாட்டி நெறிமுறைகள் பின்பற்றப்படலாம்:–

5.1.2 நேர்விற்கேற்ப மக்களவை அல்லது மாநில/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் சட்டப் பேரவை முடிவடையும் உரிய நாளுக்கு 6 மாதங்களுக்கு முன்னர் மாநில/ மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளில் சான்றனுப்பப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் /வானொலி அலைவரிசைகள் / செய்தித்தாள்களின் பட்டியல் மற்றும் அவற்றின் நிலையான விலைப்பட்டியல்கள் தலைமை தேர்தல் அதிகாரிகளால் பெறப்பட்டு விளம்பரங்களுக்கான விலைகளை நிர்ணயிப்பதற்காக அனைத்து மாநில அளவிலான ஊடக;ச சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களிடம் அளிக்கப்பட வேண்டும்.

5.2 பாராளுமன்றம் அல்லது மாநில சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தல் குறித்த நேர்வில், இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், சம்மந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலரால் நிலையான விலை அட்டை பெறப்பட வேண்டும்.

5.3 நிலையான விலை அட்டையை பயன்படுத்துவது குறித்து ஏதேனும் ஐயம் இருந்தால் அதனை தகவல் மற்றும் மக்கள் தொடர்பு இயக்கங்கள் ( ) அல்லது மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் அறிவுரைக்காக/ ஆலோசனைக்காக அனுப்பப்பட வேண்டும்.

5.4 தேர்தல் பிரச்சாரம் தொடங்குவதற்கு முன்பு தலைமை தேர்தல் அதிகாரியும் மாவட்ட தேர்தல் அலுவலர்களும் அரசியல் கட்சிகள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு இந்த வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து விளக்கம் அளிப்பர். இது தொடர்பாக சுய ஒழுங்குமுறை நெறிகளை பின்பற்றுமாறு ஊடகங்கள் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். இந்த வழிகாட்டி நெறிமுறைகள் பற்றி பொது மக்களும் அறியும் வகையில் இந்த ஆணை பெரிய அளவில் விளம்பரபடுத்தப்படலாம். சுய ஒழுங்கு நெறிமுறைகளுக்கான தேவைகளைப் பொறுத்தே விளக்கம் அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

5.5 பணம் கொடுத்து செய்திகள் அல்லது விளம்பரம் வெளியிடப்படுகிறது என சந்தேகிக்கப்படும் வழக்குகள் அல்லது மேல்முறையீடு குறித்து குறிப்பிட்ட கால அளவிற்குள் பின்வருமாறு கவனத்தில் கொள்ள வேண்டும்.

5.5.1. மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடமிருந்து குறிப்புரை பெறப்பட்டதன் பேரில் ஒருவேளை இவ்விளம்பரமானது அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லாத ஏதேனும் ஒரு நபரால் வெளியிடப்பட்டிருப்பின், அந்நபர் இவ்விளம்பரம் அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் ஆதாயத்திற்கானது அல்லது வேட்பாளரின் ஆதாயத்திற்கானது அல்ல என்றும், மேற்சொன்ன விளம்பரம் எந்தவொரு அரசியல் கட்சிக்கு அல்லது வேட்பாளருக்காக ஆதரவளிக்கப்படவில்லை அல்லது தரகுத்தொகை அளிக்கப்படவில்லை அல்லது செய்திகளை வெளியிடுவதற்காக அல்லது அதுபோன்ற விவகாரங்கள் வெளியிடுவதற்காக ஏற்பட்ட செலவினம் அல்லது குறித்து விவரிக்க / தெரிவிக்க அல்லது நிலையான விலையின் படி ஏன் செலவினம் கணக்கிடப்பட்டு வேட்பாளரின் செலவினத்தில் ஏன் சேர்க்கப்படக்கூடாது என்றும் தெரிவிக்க, புகார் வெளியிடப்பட்ட / ஒலிபரப்பப்பட்ட / ஒளிபரப்பப்பட்ட / பெறப்பட்ட 96 மணி நேரத்திற்குள் தேர்தல் நடத்தும் அலுவலர், வேட்பாளர்களிடம் அறிக்கையை அளிக்க வேண்டும். மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு தாமாகவே முன்வந்து, அல்லது புகார்களின்

அடிப்படையில் வழக்கை எடுத்துக் கொள்ளும் நேர்விலும், இதே கால அளவு பொருந்தும்.

5.5.2 மாவட்ட / மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு இப்பதிவின் மீது விரைவாக முடிவு செய்து அதனின் இறுதி முடிவை வேட்பாளரின் கட்சியிடம் தெரிவிக்க வேண்டும். அறிவிப்பு வழங்கப்பட்ட 48 மணி நேரத்திற்குள் வேட்பாளரிடமிருந்து எந்த பதிவும், மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினரால் பெறப்படவில்லையென்றால், ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

5.5.3 மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவு வேட்பாளரால் ஏற்கப்படவில்லையானால், மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிற்குத் தகவல் தெரிவிப்பதன்பேரில் முடிவு பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் அவர் மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் மேல் முறையீடு செய்யலாம்.

5.5.4 மேல்முறையீடு பெறப்பட்ட 96 மணி நேரத்திற்குள் மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு வழக்கை தீர்வு செய்து அதன் முடிவை வேட்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் நகலை மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

5.5.5 இந்தக் குழுவிடமிருந்து ஆணைப் பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள், மாநில ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவினை எதிர்த்து இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் (ECI) வேட்பாளர் மேல்முறையீடு செய்யலாம். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முடிவே இறுதியானதாகும்.

5.6 அனைத்து நடவடிக்கைகளும் / நடைமுறைகளும் வழக்கமாக தேர்தல் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

6. சில நேர்வுகளில், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது குறித்து அதிக எண்ணிக்கையிலான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அவற்றின் மீதான மேல் நடவடிக்கைகள் நிலுவையிலேயே இருக்கின்றன என்பது கண்டறியப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வழக்கும் உரியவாறு முடிவெடுப்பதற்காக கலந்தாலோசிக்கப்படுகிறது என்பதையும் பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்டது என்று சந்தேகிக்கப்படும் வழக்குகள் மட்டுமே

வேட்பாளருக்கு அறிவிப்பு வழங்குவதற்காக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அனுப்பப்படுகின்றன என்பதையும் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் உறுதி செய்ய வேண்டும். முக்கியத்துவமில்லாத / அற்பமான வழக்குகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை காணும் போது, உண்மையாகவே பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளை ஆய்வு செய்யும் போது எந்தக் கவனக் குறைவும் ஏற்படவில்லை என்பதை ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுதி செய்ய வேண்டும்.

7. பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வழக்குகள், மாவட்ட அளவில் / தலைமை தேர்தல் அதிகாரி அளவில் / ஆணையத்தின் அளவில் நேர்விற்கேற்ப பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் என்று முடிவு செய்யப்படுகின்றபோது உண்மையான / கருத்தியலான செலவினமானது, வேட்பாளருக்கு அல்லது அவரின் முகவருக்கு உரியவாறு தகவல் தெரிவிக்கப்பட்டதன்பேரில் சம்பந்தப்பட்ட வேட்பாளரின் தேர்தல் செலவுகளின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும்.

8. இது பணம் கொடுத்து வெளியிடப்பட்டசெய்தி வழக்கு என்று மாவட்ட / மாநில அளவிலான குழு அல்லது இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்கின்ற போது, அத்தகைய வழக்குகள், சம்பந்ததப்பட்ட ஊடகம் தொடர்பாக மேல் நடவடிக்கைக்காக இந்திய பத்திரிகை சங்கத்திடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

(ராகுல் சர்மா)
சார்புச் செயலாளர்.

# இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி—110 011.

எண். 491/ பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள்/2012/ஊடகம்.
நாள்09.10.2012.

பெறுநர்
அனைத்து மாநிலங்களின், மத்திய அரசின்
நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்.

பொருள்: தேர்தல் நேரத்தில் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளை சரிபார்ப்பதற்கான நடவடிக்கைகள் அதாவது ஊடகம் மற்றும் தொடர்புடைய பொருண்மைகளில் உள்ள செய்திகள் பற்றிய விளம்பரம் – திருத்த வழிகாட்டி குறிப்புகள் – தொடர்பாக.

*****

ஐயா / அம்மையீர்,

ஆணையத்தின் 27—8—2012 ஆம் நாளிட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக மேற்காண் பொருண்மை தொடர்பாக ஓரளவு திருத்தத்துடன் மேற்காண் கடிதத்தின் பத்தி 5.5.2. பின்வருமாறு படிக்கப்படலாம். மாவட்ட / மாநில அளவிலான ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவிடமிருந்து மறுமொழி அளிக்க அறிவிப்பு பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் குறித்த காலத்திற்குள் வேட்பாளரிடமிருந்து பதில் வரவில்லையாயின் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவே இறுதியானது மாவட்ட / மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உடனடியாக அதாவது பதில் பெற்ற 48 மணி நேரத்திற்குள் பதிலின் மீது முடிவு செய்து அதனுடைய இறுதி முடிவை அந்த வேட்பாளரிடன் கட்சியிடம் தெரிவிக்க வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

ஒம்/..........

(ராகுல் சர்மா)
சார்புச் செயலாளர்.

விரைவு அஞ்சல் மூலமாக

இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி–110 011.

எண். 491/ பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல்//2012 ஊடகம்.
நாள்15.10.2012

பெறுநர்
அனைத்து மாநிலங்களின், மத்திய அரசின்
நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரி.

பொருள்: தேர்தல் காலத்தில் 'பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை' சரிபார்ப்பதற்கான நடவடிக்கைகள் அதாவது ஊடகம் மற்றும் அவை தொடர்பான விவகாரங்களை செய்தி வடிவில் விளம்பரம் செய்தல் / திருத்திய வழிகாட்டி குறிப்புகள் –குறித்து.

----

ஐயா / அம்மையீர்,

ஆணையத்தின் 27.08.2012–ஆம் நாளிட்ட கடிதத்தை படித்து, ஆணையத்தின் 21.11.2008 –ஆம் நாளிட்ட ஆணையத்தின் ஆணையில் குறிப்பிடப்பட்டவாறு, ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டவாறு தனியார் FM சேனல்கள் உட்பட சேனல்கள்/கேபிள் நெட்வொர்க்குகள் மற்றும் வானொலி ஆகியவற்றில் மட்டுமல்லாமல், திரை அரங்குகளிலும் விளம்பரங்களின் சான்றளிப்பு ஒளிபரப்பப்பட வேண்டும் எனக் கூற நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள

(ராகுல் சர்மா)
சார்புச் செயலாளர்.

சிறப்புத்தூதர்/மின்னஞ்சல்/நிகரி மூலமாக

**இந்திய தேர்தல் ஆணையம்**

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி–110 011.

எண். 491/ DN /ஊடகம்/2013 நாள் 12.02.2013

பெறுநர்

திருமதி ஆனி ஜோசப்,
பொதுச் செயலாளர்,
செய்திகள் ஒளிபரப்பாளர்கள் சங்கம்,
ஜூரிஉஹவுஸ்,தரைத்தளம்,
22– இன்டேர் என்கிளேவ், பாஸ்சிம் விஹார்,
புதுதில்லி–110 087.

பொருள்: தேர்தல் காலத்தில் " பணம் கொடுத்து செய்தி வெளியிடுதலை" ஆய்வு / சோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் – அதாவது ஊடகங்களில் உள்ள செய்திகளை விளம்பர வடிவில் பெற்று விளம்பரம் செய்தல் – குறித்து.

அம்மையீர்,

தேர்தலில் கடுமையான ஒழுங்கீனச் செயலாக உருவெடுத்துள்ள "பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது" என்ற அண்மைக் கால நிகழ்வின் மீது உங்களுடைய கவனத்தை ஈர்க்க நான் பணிக்கப்பட்டுள்ளேன். பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது என்பது, "ரொக்கமாக அல்லது பொருளுமாக ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு யாதொரு ஊடகங்களில் (அச்சு மற்றும் மின்னணு) வெளியிடப்படுகின்ற யாதொரு செய்திகள் அல்லது ஆய்வு" என வரையறுக்கப்பட்டுள்ளது. சுதந்திரமாகவும், நியாயமாகவும் தேர்தலை நடத்த வேண்டும் என்ற சூழலில், இது ஆணையத்திற்கு கவலை அளிப்பதாக உள்ளது. பெரும் பிரிவு கொண்ட பல்வேறு ஒலிபரப்பு ஊடகம் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும், ஒளிபரப்பு ஊடகக்குழுக்களும், இதே போன்ற தங்களது கவலைகளை ஆணையத்திற்கு தெரிவித்துள்ளன. பல்வேறு பொறுப்பாளர்கள் ஆணையத்துடன் பல்வேறு தலைப்புகளில் பேச்சுவார்த்தை நடத்தினர். அதில், தேர்தல்களின் சீரானத் தன்மையைக் குலைப்பது, வாக்காளர்களின் மீது தகாத செல்வாக்கைப் பயன்படுத்துவது போன்ற ஒழுங்கீனச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென ஒருமித்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய ஒழுங்கீனச் செயல்களை கண்காணிப்பதற்காக ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 27.8.2012–ஆம் நாளிட்ட, ஆணையத்தால் வெளியிடப்பட்ட பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புதுதில்லி–110 011.

எண். 491/SM2013/தகவல் தொடர்பு நாள்25–10–2013.

பெறுநர்

1. அனைத்து மாநிலங்களின், மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள்.
2. அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய / மாநிலக் கட்சிகளின் தலைவர்கள் / பொதுச் செயலாளர்கள்.

பொருள்: தேர்தல் பிரச்சாரத்தில் சமூக ஊடகங்களின் பயன்பாடு குறித்து ஆணையத்தின் உத்தரவுகள்.

ஐயா,

தேர்தல் பிரச்சாரத்தில் சமூக ஊடகத்தின் பயன்பாடு குறித்தும் அவை தேர்தல் சட்டங்களை மீறுதல் குறித்தும், தேர்தலின் போது இவை வெளிப்படையாகப் பயன்படுத்தப்படுகிற வகையில் அவற்றை முறைப்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் தேர்தல் ஆணையத்தின் கவனம் ஈர்க்கப்பட்டது.

சமூக ஊடகம் என்பது, மக்களிடையே தகவல் பரிமாற்றம் செய்வதற்கான சாதனமாகும். அவை தகவல்களையும், கருத்துக்களையும் உருவாக்குதல், சமுதாயத்தினரிடம் பகிர்ந்து கொள்ளுதல், அல்லது தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் என்றும் பொருள்படும். இவை, பாரம்பரிய / தொழில் சார்ந்த ஊடகங்களிலிருந்து தரம், இலக்கை எய்தல், அலைவரிசை பயன்படுத்தும் தன்மை, உடனடித் தேவைகள், நிலையான தன்மை போன்ற பல்வேறு அம்சங்களில் வேறுபடுகின்றன.

பல ஆண்டுகளாக வலைதளம் மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாடு அதிகரித்து பரந்து காணப்படுகிறது. ஏனைய ஊடகங்களை முறைப்படுத்தியிருப்பதைப் போன்று தேர்தல் காலத்தில், சமூக ஊடகத்தை முறைப்படுத்துவதற்கு அரசியல் மற்றும் சமூகக் குழுக்கள் கோரிக்கை வைத்துள்ளன.

வெவ்வேறு வகையான ஐந்து சமூக ஊடகங்கள் உள்ளன.

(a) கொலாபரேட்டிவ் புராஜெக்ட் – (உ–ம் விக்கிபீடியா)
(Collabrative Project)
(b) பிளாக்ஸ் மைக்ரோ பிளாக்ஸ் – (உ–ம் டுவிட்டர்)
(c) கண்டெண்ட் கம்யூனிட்டிஸ் – (உ–ம் யு டியூப்)

(d) சமூக வலை தளங்கள் – (உ–ம் பேஸ்புக்)
(e) விர்சுவல் கேம் வேல்ட்ஸ் – (உ–ம்ஆப்ஸ்)

தேர்தல் பிரச்சாரம் தொடர்பான சட்ட விதிமுறைகள் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுகின்ற ஏனைய யாதொரு ஊடகத்தின் ஏனைய யாதொரு வடிவத்தில் பயன்படுத்துகிற சமூக ஊடகத்திற்கும் பொருந்தும். சமூக ஊடகம் என்பது, ஊடகத்தின் புதிய வடிவம் தொடர்புடையதாக உள்ளதால், பின்வரும் உத்தரவுகள் மூலம், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இதனைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

**A. தங்களுடைய சமூக ஊடகக் கணக்குகள் குறித்து வேட்பாளர்களால் அளிக்கப்பட வேண்டிய தகவல்கள்.**

வேட்பாளர், வேட்புமனு தாக்கல் செய்யும் போது படிவம்–26ல் உறுதிமொழிப் பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் ஆகும். ஆணையத்தின் 24–8–2012 ஆம் நாளிட்ட 3–4–2012 SDR ஆம் எண் கடிதத்தில் விரிவான உத்தரவுகளுடன், தாக்கல் செய்யப்பட வேண்டிய உறுதிமொழிப் பத்திரம் நிரப்பப்பட வேண்டிய படிவமும் அளிக்கப்பட்டுள்ளன. இப்படிவத்தின் 3ஆம் பத்தியில், வேட்பாளரின் மின்னஞ்சல் முகவரி ஏதேனும் இருப்பின்அது, இப்படிவத்தில் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். வேட்பாளரின் சட்டப்படியான சமூக ஊடகக் கணக்குகளையும் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று ஆணையம் கருதுகிறது. இத்தகவல்களை மேற்சொன்ன பத்தி 3ல் பின்வருமாறு அளிக்க வேண்டும்.

"என்னைத் தொடர்புகொள்வதற்கான தொலைபேசி எண்/எண்கள் ........., எனது மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) ............ மற்றும் சமூக ஊடகக் கணக்குகள் (ஏதேனும் இருப்பின்).......... ஆகும்.

**B.** அரசியல் விளம்பரங்களுக்கு முன்சான்றளிப்பு

இந்திய உச்ச நீதிமன்றத்தின் 13–4–2004 ஆம் நாளிட்ட SLP (சிவில்) N. 6679/2004 ஆம் எண் ஆணைக்கிணங்க, ஆணையம், அதன் 15–4–2004 ஆம் நாளிட்ட 509/75/2004 JS–1/4572 ஆம் எண் ஆணையில், இப்பொருள் குறித்து விரிவான உத்தரவுகளைப் பிறப்பித்தது. இந்த ஆணையில் தொலைக்காட்சி அலைவரிசைகள் / கேபிள் நெட்வொர்கில் அல்லது இவையிரண்டிலும் விளம்பரங்கள் செய்ய உத்தேசித்துள்ள பதிவுசெய்யப்பெற்ற ஒவ்வொரு தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளும், தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு விளம்பரம் செய்வதற்கு முன்னர், மின்னணு ஊடகம் குறித்த அனைத்து அரசியல் விளம்பரங்களின் முன் சான்றளிப்பிற்காக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு / குறிப்பிட்ட அதிகாரி விண்ணப்பம்

செய்ய வேண்டும். ஆணையத்தின் 27–8–2012 ஆம் நாளிட்ட ஆணையில் இந்த ஆணை மேற்கொண்டு திருத்தம் செய்து தொகுக்கப்பெற்றுள்ளது. அதில், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களுக்கு, பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதற்கு எதிராக செயல்படுகிற ஏனைய நடவடிக்கைகளுடன், அத்தகைய விளம்பரங்களுக்கு முன் சான்றிதழ் அளிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டன. சமூக வலைதள ஊடகங்கள், வரையறையின் படி மின்னணு ஊடகங்கள் என்பதால் 15–4–2004 ஆம் நாளிட்ட 509/75/2004/JS–1/4572 ஆம் எண் ஆணையில் அடங்கியுள்ள ஆணையத்தின், இந்த உத்தரவுகள், சமூக வலைத்தளங்கள் உட்பட வலைத்தளங்களுக்கு வேண்டிய மாறுதல்களுடன் பொருந்தும். மேலும், முன் சான்றளிப்பின் செயல் வரம்பின் கீழ் வரும். எனவே, மேற்சொன்ன ஆணைகளில் குறிப்பிடப்பட்டவாறு, அதே படிவத்தில், அதே நடைமுறைகளைப் பின்பற்றி, உரிய அதிகாரிகளிடமிருந்து முன் சான்றிதழ் பெறாமல், அரசியல் கட்சிகள், வேட்பாளர்களால் சமூக ஊடக வலைத்தளங்கள் உட்பட ஊடகம்/வலைத்தளங்கள் அடிப்படையிலான யாதொரு இணையதளத்திலும் அரசியல் விளம்பரங்கள் அளிக்கப்படவில்லை என்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**C. சமூக வலைத்தள ஊடகங்கள் உட்பட இணையதளம் மூலமாக செய்யப்படும் பிரச்சாரம் குறித்த செலவு.**

1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 77ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவுக்கிணங்க ஒவ்வொரு வேட்பாளரும், மனுதாக்கல் செய்யும் நாளிலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் நாட்களுக்கிடையே (அந்த இரண்டு நாட்கள் உட்பட) அவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவர் அல்லது அவரது முகவர் செய்கின்ற தேர்தல் தொடர்பான அனைத்து செலவுகளுக்கும் தனியான மற்றும் சரியான கணக்கை வைத்து வர வேண்டும். மாண்பமை இந்திய உச்ச நீதி மன்றம் 2005–ல் பொதுவான காரணம் எதிர் மத்திய அரசு ஆகியவற்றுக்கிடையிலான வழக்கில் அரசியல் கட்சிகள், தேர்தல் செலவுக் கணக்கு விவர அறிக்கையை இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், அத்தகைய விவர அறிக்கைகள், சட்டப் பேரவைத் தேர்தலைப் பொறுத்தமட்டில் 75 நாட்களுக்குள்ளும், நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தமட்டில் 90 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பித்தது. சமூக ஊடகத்தில் யாதொரு விளம்பரம் மூலம் செய்யப்படும் தேர்தல் பிரச்சாரம் குறித்த செலவு தேர்தல்களுடன் தொடர்பான அனைத்து செலவினங்களில் ஒரு பகுதி என்பது வெளிப்படை தெளிவற்ற ஏதேனுமொன்றை நீக்குவதற்காக, சரியான செலவுக் கணக்கைப் பராமரிப்பதற்காகவும் செலவுக்கணக்கு விவர அறிக்கையை அளிப்பதற்காகவும் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் ஏனையவற்றிற்கிடையே இதில், விளம்பரங்கள்

செய்ததற்காக இணையதள நிறுவனங்களுக்கும், வலைத்தளங்களுக்கும் வழங்கிய தொகைகளும் பிரச்சாரம் தொடர்பான கருத்தை உருவாக்கிய இயக்கச் செலவினங்களுக்காகவும், தங்களுடைய சமூக ஊடகக் கணக்குகளைப் பராமரிப்பதற்காக வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அமர்த்திய பணியாளர் குழுவுக்கு வழங்கிய ஊதியம் மற்றும் சம்பளம், ஆகியவற்றுக்காக செய்த செலவுகளும் அடங்கும். சமூக ஊடக விளம்பரத்தின் செலவு உட்பட, பிரச்சாரம் குறித்த அனைத்து செலவுகளையும், சேர்க்க வேண்டும் என்று இதனால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**D. சமூக ஊடகம் உட்பட இணையதளத்தில் வெளியிடப்படுகிற பிரச்சார கருத்து குறித்த தேர்தல் நடத்தை விதி பயன்பாடு.**

தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகளுக்காகவும், வேட்பாளர்களுக்காகவும், தேர்தல் காலத்தில் தேர்தல் நடத்தை விதிகளைக் கொண்டுள்ளது. இவை, ஆணையத்தால் தேர்தல் அறிவிக்கப்படும் நாள் முதற்கொண்டு முடிவுகள் வெளியிடப்படும் நாள் வரையில் செயலில் இருக்கும். தேர்தல் நடத்தை விதியின் விதித்துறைகள் மற்றும் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் உத்தரவுகள், ஆகியவை வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் சமூக ஊடக வலைதளங்கள் உட்பட இணையதளத்தில் வெளியிடப்படுகிற பிரச்சார கருத்திற்கும் பொருந்தும் என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

E. சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் நீங்கலாக ஏனைய யாதொரு நபரால் செய்யப்படும் விளம்பரத்தைப் பொறுத்தவரையில் அவை, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சாரத்துடன் நியாயமான முறையில் தொடர்புடையதாக இருக்கிற வரையில் அல்லது நியாயமான முறையில் தொடர்புடையதாக இருக்கலாம் என்கிற நிலையில், அது குறித்து நடைமுறைக்கு சாத்தியமான வழிகளில் நடவடிக்கை எடுப்பது குறித்து தேர்தல் ஆணையம், தொலைத் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து பரிசீலித்து வருகிறது.

இந்த உத்தரவுகள், உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், ஊடகம் மற்றும் தேர்தல் பார்வையாளர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படலாம்.

தங்கள் உண்மையுள்ள
(ஒம்)…….
(ராகுல் சர்மா)
அரசு சார்பு செயலாளர்
தொ.பே. 001–23052070
மின்னஞ்சல்: rahulsharma.eci@gmail.com

## இந்திய தேர்தல் ஆணையம்

நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி—110 001

எண்.491/பணம் கொடுத்து செய்தி வெளியிடுதல்/2014. நாள் 07.02.2014

பெறுநர்
அனைத்து மாநில/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளின்
தலைமை தேர்தல் அதிகாரிகள்

பொருள்: தேர்தலின் போது கண்காணிப்பு குழுக்கள் மூலம் அரசியல் விளம்பரங்களுக்கு ஊடகச் சான்றளிப்பு சான்றளித்தல் தெளிவுரைகள்.

-----

ஐயா/ அம்மையீர்,

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மை பற்றி குறிப்பிடவும், தேர்தலின் போது அரசியல் விளம்பரங்களுக்கு சான்றளிப்பது தொடர்பான பின்வரும் விவகாரங்களுக்கு தெளிவுரை அளிக்கவும், நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

1. பொது இடங்களில் அரசியல் விளம்பரத்தை/ பிரச்சார கருத்தை ஒலி—ஒளி வடிவில் காட்சிப்படுத்தலுக்கு, ஆணையத்தின் நடைமுறையிலுள்ள ஆணைகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட குழு சான்றளிக்க வேண்டும்.
2. மாநிலத்தில் தலைமையிடத்தைக் கொண்டிராத பதிவுபெற்ற அரசியல் கட்சிகள்/குழு/அமைப்பு/ சங்கம், மாநிலத்தில் அவர்களுடைய விளம்பரத்தை ஒளிபரப்புவதற்கு/ ஒலிபரப்புவதற்கு விழைகின்ற நேர்வில், தேர்வில் போட்டியிடுகின்ற மற்றும் பிரச்சார கருத்தைப் பயன்படுத்தக் கருதுகிற கட்சியின் மாநிலத்தில் உள்ள ஊடகம் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு விளம்பரச் சான்றளிப்பு குறித்து கருதிப் பார்க்கப்பட வேண்டும்.
3. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் 13.04.2004 ஆம் நாளிட்ட ஆணையைத் தொடர்ந்து ஆணையம் பிறப்பித்துள்ள 15.04.2004 ஆம் நாளிட்ட ஆணையத்தின் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) உத்தரவைப் பொறுத்த நேர்வில், எந்தவொரு தொலைக்காட்சி அலைவரிசை கேபிள் டிவி, இயக்குபவரும், நாட்டின் சட்டத்திற்கு ஒத்திசைவாக இராத மற்றும் நன்னெறிக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியதும் பண்பாடற்றதும், காண்பவரை பாதிக்கக்கூடியதும், அதிர்ச்சியையும், அருவருப்பையும், எதிர்க்கும் தன்மையையும் ஏற்படுத்துகிற எந்தவொரு விளம்பரத்தையும் ஒளிபரப்பு செய்யலாகாது. மேலும், எந்தவொரு விளம்பரமும் எவ்வித இன, சாதி, நிற, மத மற்றும் தேசத்திற்குப் புறம்பான

வகையிலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகவும் மற்றும் மக்களை குற்றம்புரியத் தூண்டும் வகையிலும், அமைதியின்மை அல்லது வன்முறை அல்லது சட்டத்தை மீறும் விதமாகவும் அல்லது வன்முறையை வளர்க்கும் விதமாகவும் அல்லது எவ்வித ஒழுக்கக்கேட்டை ஏற்படுத்துகிற வகையிலும் இருப்பதற்கு அனுமதிக்கலாகாது. ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மேற்கூறப்பட்டநிலையைக் கருத்திற்கொண்டு எல்லா நேர்வுகளிலும் நடவடிக்கை எடுக்கலாம். இருப்பினும், விளம்பரங்களுக்கு சான்றளிப்பு கோரும் அனைத்து வேட்பாளர்கள் / அரசியல் கட்சிகள், அவர்களுடைய விளம்பரங்கள், தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு இணக்கமாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

4. குழு, விண்ணப்பதாரர்களுக்கு சான்றளிக்கும் போது, பின்வரும் மறுப்புக் கூற்றினையும் சேர்க்கலாம். அதாவது விளம்பரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் உண்மைத்தன்மை மற்றும் சரியான தன்மைக்கும், சாட்டுரைக்கும் உரிய முழு பொறுப்பு அதனை வெளியிடுபவரை விளம்பரதாரரைச் சாரும். அத்தையை வெளியீட்டால் ஏற்படும் எவ்விதமான பாதிப்பு. இழப்பு அல்லது உரிமையியல் அல்லது குற்றவியல் சார்ந்த தீங்கிற்கு சான்றளிக்கும் குழு எவ்விதத்திலும் பதிலளிக்க கடமைப்பட்டதல்ல.

5. தொலைக்காட்சி

அலைவரிசைகளிலும் கம்பிவட கட்டமைப்புகளிலும் ஒளிபரப்புவதற்கு சான்றளிப்பதற்காக, விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்வது தொடர்பாக, ஆணையத்தின் 15.04.2004 ஆம் நாளிட்ட ஆணையின் படி அரசியல் விளம்பரத்திற்கு முன் சான்றளிப்பதற்கான விண்ணப்பத்தினைப் பரிசீலிப்பதற்கான விண்ணப்பத்தினைப் பரிசீலிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுக்கள். அத்தகைய விண்ணப்பங்கள் அனைத்தையும் ஒருவகை செய்து, நண்பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பம் பெறப்பட்டிருக்குமாயின், முடிவினைத் தெரிவிக்காமல் இருப்பதற்கு கட்டாய காணங்கள் இருந்தாலன்றி மற்றபடி விண்ணப்பம் பெறப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அதாவது இயன்றவரையில் அதே நாளன்று விண்ணப்பத்தாரரிடம் முடிவினைத் தெரிவிக்க வேண்டும் என்று ஆணையம் தீர்மானித்துள்ளது.

| தொடர் எண். | பணம் கொடுத்து செய்தி வெளியிட்டது தொடர்பாக அறிவிப்பு வழங்கப்பட்ட வேட்பாளர் மற்றும் அவர் சார்ந்துள்ள கட்சியின் பெயர் | செய்தியின் தலைப்பு | செய்தித்தாள் / ஊடகத்தின் பெயர் மற்றும் செய்தி வெளியிட்ட நாள் மற்றும் பக்க எண் / செய்தி வெளியான நிகழ்ச்சியின் நேரம். | செய்தி (ம) மக்கள் தொடர்பு இயக்குநர் **DIPR/ DVAP** கணக்கீட்டின் படி மேற்கொன்ன செய்திக்கான செலவுத் தொகை |
|---|---|---|---|---|

பீகாரில் பொது தேர்தல்–2010 நடந்த போது பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் குறித்த வழக்குகளின் நிலை

| தொடர் எண். | மாநிலத்தின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் பெயர் | பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பீகார் | 15 |

2011 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலின் போது பணம் கொடுத்து செய்தி வெளியிடப்பட்ட செய்தி வழக்குகளின் நிலை

| தொடர் எண் | மாநிலத்தின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் பெயர் | பணம் கொடுத்து செய்திகளின் உறுதிப்படுத்தப் பட்ட இனங்களின் எண்ணிக்கை | வழக்குகளில் வேட்பாளர்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கேரளம் | 65 | 65 |
| 2. | புதுச்சேரி | 3 | 3 |
| 3. | அசாம் | 42 | 27 |
| 4. | மேற்கு வங்கம் | 15 | 8 |
| 5. | தமிழ்நாடு | 11 | 22 |

2012 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலின் போது பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் குறித்த வழக்குகளின் நிலை

| தொடர் எண் | மாநிலத்தின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் பெயர் | வழக்குகளில் வேட்பாளருக்கு அறிவிப்புகளின் வழங்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளின் உறுதிபடுத்தப்பட்ட இனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | உத்தரப்பிரதேசம் | 97 | 97 |
| 2. | உத்ரகாண்ட் | 60 | 80 |
| 3. | பஞ்சாப் | 339 | 523 |
| 4. | கோவா | 63 | 9 |
| 5. | மணிப்பூர் | இல்லை | இல்லை |
| 6. | குஜராத் | 495 | 414 |
| 7. | இமாச்சலப்பிரதேசம் | 190 | 104 |

## 2013 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலின் போது பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் குறித்த வழக்குகளின் நிலை

| தொடர் எண் | மாநிலத்தின் / மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியின் பெயர் | வழக்குகளில் வேட்பாளருக்கு அறிவிப்புகளின் வழங்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளின் உறுதிபடுத்தப்பட்ட இனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரிபுரா | ஏதுமில்லை | ஏதுமில்லை |
| 2. | மேகலாயா | ஏதுமில்லை | ஏதுமில்லை |
| 3. | நாகலாந்து | ஏதுமில்லை | ஏதுமில்லை |
| 4. | கருநாடகம் | 93 | 93 |
| 5. | மிசோரம் | இல்லை | இல்லை |
| 6. | சத்திஸ்கர் | 35 | 32 |
| 7. | இராஜ்தான் | 110 | 81 |
| 8. | மத்திய பிரதேசம் | 279 | 165 |
| 9. | தில்லி என்.சி.டி | 80 | 25 |

## பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்:

கே. பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்தி என்றால் என்ன ?

ப. இந்தியப் பத்திரிக்கையாளர் சங்கத்தால் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திக்கு பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஊடகத்தில் (அச்சு மற்றும் மின்னணு) பணத்திற்காக அல்லது பொருளுக்காக வெளியிடப்படுகின்ற ஏதேனும் செய்தி அல்லது பகுப்பா என்ற, இந்தியப் பத்திரிகையாளர் சங்கத்தின் வரையறையை இந்த ஆணையம் பொதுவாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

கே. விளம்பரத்திற்கும், செய்திகளுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன ?

ப. இந்தியப் பத்திரிகையாளர் சங்கத்தின் வழிகாட்டி குறிப்புகள் தெரிவிப்பதாவது செய்தி உரிமைக் கோராதவர்களால் உரிமை துறப்பவர்களை பற்றி குறிப்பிட்டு விளம்பரங்களிலிருந்து செய்திகள் பிரிக்கப்பட வேண்டுமென அனைத்து வெளியீட்டாளர்களால் தண்டிப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும். செய்தியைப் பொறுத்தவரையில், அது தரமானதாக இருப்பதுடன் விளம்பரங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் குறிப்பிட்ட எழுத்து வடிவமைப்புடன் இருக்க வேண்டும். மேலும், விளம்பரம் என்பது ஊக்குவிப்பதாகவும், செய்தி என்பது தெரிவிப்பதாகவும் இருக்க வேண்டும்.

கே. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளை கட்டுப்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையம் என்ன செய்தது ?

ε. தேர்தல் நெறிமுறைகளின் போது தேர்தல் ஆணையம் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திப் பிரச்சனைகளை சந்தித்தது. அரசியல் கட்சிகள் மற்றும் ஊடகக் குழுக்கள் ஆணையத்தை அணுகி பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கக் கோரின. பாராளுமன்றம் இவ்விவாகரத்தை விவாதித்தது. 4.10.2010 மற்றும் 09.03.2011 ஆகிய நாட்களன்று ஆணையத்துடன் அனைத்து அரசியல் கட்சிகள் நடத்திய கூட்டத்தில் பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகளுக்கிடையே ஒருமித்தக் கருத்து ஏற்பட்டது.

கே. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளினால் ஏற்படும் விளைவுகள் என்ன ?

1. தேர்தல் களத்தில், பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள், பொதுமக்களை தவறாக வழிநடத்துவதுடன் வாக்காளர்களிடம் தவறான செல்வாக்கை ஏற்படுத்துகிறது. மேலும், அவர்களின் தகவல் உரிமையை பாதிக்கிறது.

2. மறைவான செலவினம் மூலம் தேர்தல் செலவினச் சட்டங்கள் / உச்சவரம்புகளை ஏமாற்றுவதற்கு அது முயற்சி செய்கிறது.

3. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு இடையேயான சமவாய்ப்பினை சீர்குலைக்கிறது.

கே. பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளை எவ்வாறு தடுப்பது ?

1. ஊடகங்கள் மற்றும் அரசியல் கட்சிக்காரர்களால் சுயமாக முறைப்படுத்தல்.

2. தேர்தல் களத்தில், பிரச்சினைகளை களைவதற்காக, தற்போதுள்ள உத்திகளை கண்டிப்புடன் பின்பற்றுதல்

3. மேற்குறிப்பிட்ட பொருண்மை தொடர்பாக மக்களிடமும் பொறுப்பாளர்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

கே. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளை ஒரு தேர்தல் குற்றமாக ஆக்குவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ?

ப. ஏதேனும் ஒரு வேட்பாளரின் வெற்றி வாய்ப்பை மேம்படுத்துகின்ற அல்லது, ஒரு வேட்பாளரின் வெற்றி வாய்ப்பினை பாதிக்கின்ற வகையில் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவது அல்லது செய்தி வெளியிட உதவுவது ஆகியவை **1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பகுதி–VII அத்தியாயம்–III இன் கீழ் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையுடன் கூடிய, தேர்தல் குற்றமாக அறிவிக்கும் திருத்தத்தினை மேற்கொள்ள உள்ளது.

கே. பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை தடுக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஏற்படுத்தப்பட்ட செயல் முறைகள் யாவை ?

ப. ஊடகத்தில் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகளை கண்காணிக்க மாநில அளவில் மற்றும் மாவட்டஅளவில் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினை ஆணையம் நிறுவியுள்ளது. இக்குழுவானது செய்திகள் உள்ளடக்கிய வடிவத்தில் அரசியல் விளம்பரங்களைக் கண்டுபிடிக்கும் பொருட்டு அனைத்து செய்தித்தாள்கள் மற்றும் மின்னணு

ஊடகத்தை கூர்ந்தாய்வு செய்து தொடர்புடைய வேட்பாளர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்.

கே. மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (MCMC) மற்றும் அதன் செயற்பாடுகள் என்பது என்ன ?

மாவட்ட ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவானது, பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி தொடர்பான புகார்களை / நிகழ்வுகளை ஒரு கண்காணிப்பு ஏற்பாட்டின் மூலம் ஆராய்கிறது. இக்குழு, அச்சு ஊடகம், மின்னணு ஊடகம், கேபிள் நெட்வொர்க் போன்ற அனைத்து ஊடகங்களையும் ஆய்வு செய்யும். சந்தேகிக்கப்பட்ட பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி குறித்த நேர்வுகளில் வேட்பாளர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அந்த ஊடகத்திற்கு / செய்தித்தாளிற்கு யாதொரு தொகை செலுத்தி இருந்தாலும் / இல்லாவிடினும், அவருடைய தேர்தல் செலவுகளில், வெளியிடப்பட்ட செய்திக்கான உண்மையான செலவினத்தை சேர்ப்பதற்கு அல்லது DIPR/DAVP வீதங்களில் கருத்தியலான செலவினத்தை சேர்ப்பதற்கு அறிவிப்பு வழங்குமாறு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்பாளரிடமிருந்து பெறப்பட்ட மறுமொழியின்பேரில் மாவட்ட ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு இறுதி முடிவு செய்து அதனுடைய இறுதி முடிவை வேட்பாளர் / கட்சிக்கு தெரிவிக்கும்.

கே. மாநில அளவிலான ஊடக சான்றிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (MCMC) மற்றும் அதன் செயற்பாடுகள் என்பது என்ன ?

ப. மாவட்ட அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவின் முடிவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளின் அனைத்து வழக்குகளையும் பரிசீலிக்கும். மேலும், அக்குழுவே தாமாகவே முன்வந்து எடுத்துக்கொள்ளும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர், வேட்பாளருக்கு அறிவிப்பு வழங்க உத்தரவிடும். மேல்முறையீடு பெற்ற **96** மணிநேரத்திற்குள் மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு வழக்கை ஒரு வகை செய்ய வேண்டும். மேலும், அதன் முடிவை வேட்பாளருக்கு தெரிவித்து, அதன் நகலை மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவிற்கும் அனுப்பும்.

கே. மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றம் கண்காணிப்புக் குழுவின் முடிவை எதிர்த்து எங்கே முறையீடு செய்ய வேண்டும் ?

ப. வேட்பாளர், மாவட்ட அளவிலான ஊடகச் சான்றிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவை எதிர்த்து மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடமும், மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவை எதிர்த்து இந்திய தேர்தல் ஆணையத்திடமும் மேல்முறையீடு செய்யலாம். ஆணையத்தின் முடிவே இறுதியானதாகும்.

கே. மாவட்ட அளவிலான மற்றும் மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு முடிவினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய காலக்கெடு யாவை ?

ப. மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முடிவை வேட்பாளர் ஏற்றுக் கொள்ளவில்லையானால், அவர் அம்முடிவினை பெற்ற 48 மணி நேரத்திற்குள் மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றம் கண்காணிப்புக் குழுவிற்கு மேல்முறையீடு செய்து அதனுடைய நகலை மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றம் கண்காணிப்புக் குழுவின் முடிவிற்கு எதிராக இந்த குழுவிடமிருந்து ஆணை பெற்ற 48 மணி நேரத்திற்குள் தேர்தல் ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும். ஆணையத்தின் முடிவே இறுதியானது ஆகும்.

கே. பணம் கொடுத்த வெளியிடப்பட்ட செய்தி பற்றி தீர்மானிப்பட்ட வழக்குகளில் ஊடகத்திற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

ப. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி என முடிவு செய்யப்பட்டவுடன், அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம் அவ்வழக்குகளை இந்திய பத்திரிக்கையாளர் சங்கத்திற்கும் தேசிய ஒளிபரப்பு நிலைகள் ஆணையத்திற்கும் (NBSA) இந்நிகழ்வு தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க இந்த ஆணையம் அனுப்புகிறது.

கே. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகள் என தீர்மானிக்கும் அளவீடுகள் யாவை ?

ப. அதிகாரப்பூர்வ ஆதாரங்களிலிருந்து விளக்கங்கள் மட்டும் தான் கிடைத்துள்ளன. ஆனால் சுருக்கம் அல்லது முழுமையான பட்டியல் கிடைக்கவில்லை.சில விளக்கங்கள் பின்வருமாறு:–

a. ஒரே நேரத்தில் வெவ்வேறு கட்டுரை ஆசிரியர்களின் வரி அல்லது யாதொரு கட்டுரை ஆசிரியரின் பெயர் அச்சிட்டு வெளியீடுகளில் வெளிவருகின்ற புகைப்படம் தலையங்ககங்களுடன் கூடிய ஒரே மாதிரியான கட்டுரைகள்.

b. குறிப்பிட்ட செய்தித்தாள்களில் ஒரே பக்கத்தில் கட்டுரைகளில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பற்றி அவர்கள் இருவரும் அத்தேர்தல்களில் வெற்றி பெறுவார்கள் என புகழ்ந்து குறிப்பிடுவது.

c. வேட்பாளர் சமூகத்தில் ஒவ்வொரு பிரிவின் ஆதரவைப் பெற்றுள்ளார் எனவும், அதனால் அவர் அந்தத் தொகுதியில் வெற்றிப் பெறுவார் என தெரிவிக்கின்ற செய்திகள்.

d. வேட்பாளர் ஒருவர் சிறு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டாலும் அதனை பெரிதுபடுத்துவது / திரும்ப திரும்ப ஒலிபரப்புவது மற்றும் / அல்லது எதிர்த்து போட்டியிடும் வேட்பாளருடைய செய்திகளை ஒலிபரப்பாமல் இருப்பது.

e. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி மீதான இந்தியப் பத்திரிகை சங்கத்தின் வழக்கு முடிவு மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் ஊடகச் சான்றளிப்பு மற்றம் கண்காணிப்புக் குழுவின் முந்தைய முடிவுகள் ஆகியவையும், வழிகாட்டி ஆதாரமாக விளங்கும்.

## விளம்பரங்கள் சான்றிப்பு மற்றும் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்:

## பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்:

1. விளம்பரங்களுக்கான சான்றிப்பு என்பது என்ன ?

தேர்தல் நேரங்களில் யாதொரு பதிவு பெற்ற அரசியல் கட்சி அல்லது நிறுவனம் அல்லது அமைப்பு அல்லது யாதொரு போட்டியிடும் வேட்பாளரால் தொலைக்காட்சி அலைவரிசைகளில் கேபிள் கட்டமைப்பு மற்றும் சமூக ஊடகங்களில் ஒலிபரப்பு செய்யப்படுவதற்கு முன்பு ஒரு குழுவிடமிருந்து அரசியல் விளம்பரத்திற்கு இசைவு பெறுதல்.

2. சான்றளிப்பதற்கானகுழுக்களின் வகைகள் மற்றும் அதன் செயற்பாடுகள் என்ன ?

தனி வேட்பாளரின் அரசியல் விளம்பரத்தின் சான்றளிப்பிற்காக குழுவில் பின்வரும் நபர்கள் அடங்குவர்:–

i. தேர்தல் நடத்தும் அலுவலர் (பாராளுமன்ற தொகுதி)

ii. தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் (உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு பதவித்தரத்திற்கு குறையாத)

கேபிள் நெட்வொர்க் அல்லது தொலைக்காட்சி அலைவரிசை ஆகியவை மீதான ஒரு விளம்பரத்திற்கான சான்றிதழுக்கான போட்டியிடும் ஒரு தனி வேட்பாளரால் தொடர்புடைய பாராளுமன்ற தொகுதியிலிருந்து அல்லது பாராளுமன்றத் தொகுதிக்குள் வரும் சட்டப் பேரவை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரின் விண்ணப்பத்தை இந்தக் குழு அனுமதிக்கும். இந்த சான்றளிப்பில் எந்த பங்கும் வகிக்காத ஏனைய சில உறுப்பினர்களுடன் மேற்கண்ட இரண்டு அதிகாரிகள் ஏற்கனவே மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் இருப்பர்.

2. மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு குழுவில் கீழ்க்கண்ட நபர்கள் இருப்பர்.

i. கூடுதல் / இணை தலைமைத் தேர்தல் அதிகாரி – தலைவர்

ii. மாநிலத் தலைநகரிலுள்ள ஏதேனும் பாராளுமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்.

iii. தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சகத்திலிருந்து கோரப்பட்ட அதிகாரியாக இருந்து பிரிவு –I அதிகாரிக்குக் கீழ்ப்படாத நிலையில் இருக்கும் ஒரு வல்லுநர்.

அந்த மாநிலத்தில் / மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியில் தலைமையிடம் கொண்டுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவுப் பெற்ற அரசியல் கட்சிகள்இக்குழுவானது மத்திய மற்றும் அம்மாநில அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பதிவுப் பெற்ற அலுவலகம் கொண்டுள்ள நிறுவனங்கள், மன்றங்கள் ஆகியவற்றிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பத்தை இந்த குழு அனுமதிக்கும்.

## பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி குறித்த பரிந்துரைகள்

29.10.2012 ஆம் நாளிட்ட இந்திய பத்திரிக்கையாளர் மன்றத்திடமிருந்து வரப்பெற்ற 17/16/10–11 ஆம் எண்ணிட்ட கடிதத்தின்படி:-

1. தேர்தல் நேரத்தில் பணம் கொடுத்து வெளியிடப்படுகின்ற செய்தியானது மூன்று குறிப்பிடத் தக்க நிகழ்வுகளைக் கொண்டது.

ஒன்று: வேட்பாளரின் சரியான செயல்பாட்டை அல்லது உண்மை நிலையை அறிய இயலாமல் போகிறது. செய்தியைப் படிப்பவர் அல்லது செய்தியைக் காண்பவர் அறியாமல் தன்னுடைய வாக்கை வேட்பாளருக்குச் சாதகமாகவோ அல்லது எதிராகவோ செலுத்துவது ஜனநாயகத்தின் அடிப்படை சாரத்தையே அழித்துவிடும்.

இரண்டு: போட்டியிடும் வேட்பாளர் அவருடைய தேர்தல் செலவுக் கணக்கைக் காட்டாமல் இருப்பது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 இன்கீழ் இந்திய தேர்தல் ஆணையத்தால் இயற்றப்பட்ட 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளை மீறுவதாகும்.

மூன்று: அத்தகைய செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் பணத்தை ரொக்கமாக பெற்றுக்கொண்டு, அவர்களுடைய அலுவலகக் கணக்கு விவர அறிக்கையில் குறிப்பிடப்படவில்லையெனில், ஏனைய விதிகள் மட்டுமின்றி 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம் ஆகியவற்றை மீறியதாகும்.

2. ஊடக நிறுவனங்களில் நிருவாகப் பணியாளர்களுக்கும் பதிப்பகப் பணியாளர்களுக்கும் இடையேயான வேறுபாடுகள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டுமென்றும், பதிப்பாசிரியரின் தனித்தன்மை/சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் கருதப்பட்டது.

3. இந்தியத் தேர்தல் ஆணையம், தேர்தல்கள் நடத்துவது தொடர்ந்து பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி குறித்து புகார்களைப் பெற ஒரு தனிப்பிரிவு அமைக்க வேண்டும். அதன்மூலம், வரும் புகார்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. அரசியல் கட்சிகள் குறித்து தேர்தல் நடப்பதற்கு 48 மணி நேரத்திற்கு முன் தொலைக்காட்சி அலைவரிசைகள் தேர்தல் பிரச்சாரத் தொடர்புடைய தகவல்

ஒலிபரப்பை நிறுத்த வரையறை செய்துள்ள உச்சநீதிமன்றத்தின் அந்தக் கட்டுப்பாட்டு ஆணையானது இந்த ஊடகப் பிரிவுக்கு தற்சமயம் பொருந்தாததால் அந்தக் கட்டுப்பாடு அச்சு ஊடகத்திற்கும் நீட்டிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி தொடர்புடைய தொலைக்காட்சிப் பொறுப்பாளர்கள் தங்களுக்குள் ஒரு விவாதத்தை நிகழ்த்த வேண்டும்.

5. பொய்யான அறிக்கைக்கும் மற்றும் நடுநிலைமையாடும், நியாயத்தோடும் அமைந்த அறிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை வாக்காளர்கள் பகுத்துணரும் வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று குழு தெரிவிக்கிறது.

6. அனைத்து வேட்பாளர்களையும் ஈடுபடுத்தி, சிக்கல்கள் குறித்துச் சிந்திக்கவும், குறிப்பாக பணம் கொடுத்து செய்தி வெளியிடுதலைத் தடுக்கவும் செயற்படுத்தக்கூடிய தீர்வுகளை எய்தும் வண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய முகாம் ஒன்றினை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் நடத்த வேண்டும்.

7. பாராளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் கொண்ட சிறு குழு ஒன்றினை ஏற்படுத்தி, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வதற்கான கருத்துக்களைக் கேட்க வேண்டும்.

<u>பரிந்துரைகள்</u>

1. 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில், தேர்தலில் பணம் கொடுத்த செய்தியானது தண்டிக்கத்தக்க ஒரு தேர்தல் முறைகேடாகக் கருதப்படும் வண்ணம் திருத்தம் செய்யப்பட வேண்டும்.
2. பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி குறித்து வரும் புகார்களைத் தீர்மானிக்க இந்திய பத்திரிகையாளர் மன்றத்திற்கு முழு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் மற்றும் அதன் தீர்ப்பே இறுதியானது.
3. பரிந்துரைகளின்படி பத்திரிகை மன்றச் சட்டம் திருத்தப்பட வேண்டும் மற்றும் மின்னணு ஊடகத்தை அதனுடைய கண்ணோட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டும்.
4. மின்னணு மற்றும் பிற ஊடகங்களிலிருந்து பிரதிநிதிகளை சேர்க்க இந்தியப் பத்திரிகையாளர் மன்றம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இந்த கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகளை வலியுறுத்துமிடத்து தற்போதைய நேர்வில் எதிர்தரப்பினரின் மீதுள்ள புகார் கொடுத்தவரால், குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை என்று குழு கருதியது. அதன்படி அது முடிவு செய்தது.

**பீகார் சட்டப்பேரவை தேர்தல் (2010) வழக்குகள் குறித்து இந்திய பத்திரிக்கையாளர் மன்ற விசாரணைக் குழுவின் கருத்துரைகள்.**

சுதந்திரமாக செயல்படும் பத்திரிகை மீது செல்வாக்கை செலுத்துவதால், பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தி என்பது ஒரு குறிப்பிட்ட ஆபத்தான நிகழ்வு ஆகும். சரியான மற்றும் உண்மையான தகவல்களை அளிக்கும் ஊடகம், பொதுமக்களின் நம்பிக்கைக் கருவூலமாகச் செயல்படுகிறது. இருப்பினும், பணம் கொடுத்து அளிக்கப்படும் தகவல் செய்திப் பொருளாக வழங்கப்படும்போது, அது பொதுமக்களைத் தவறாக வழி நடத்தி அதன்மூலம் சரியான கருத்தை உருவாக்கும். அவர்களது சிந்தனையை இடருற வைக்கும். பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்தி இரு இடர்களைத் தோற்றுவித்து, இந்திய ஜனநாயகத்திற்குப் பாதிப்பான தாக்கத்தை ஏற்படுத்துவதின்மூலம் ஊடகம் சுதந்திரமாகச் செயல்பட மற்றும் சுதந்திரமான மற்றும் தூய்மையான தேர்தல் நெறிமுறை மேற்கொள்ளப்பட தடைகளாக விளங்கும். இதனால், சரியான நடுநிலையுடன் கூடிய தகவலைப் பெறுவதற்காக பொதுமக்களின் உரிமையயைப் பாதுகாக்க வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது. அனைத்து பொறுப்பாளர்களின் உரிய கலந்தாலோசித்தலைப் பின்பற்றி, குழுவானது, பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியைக் கீழ்க்கண்டவாறு வரையறுத்திருந்தது.

அதாவது பணத்தை விலையாக அல்லது பொருள்களை ஈடான பயனாக ஏதேனும் செய்தியை அல்லது ஆய்வை ஏதேனும் ஊடகத்தில் (அச்சு மற்றும் மின்னணு) தோற்றுவிப்பதாகும்.

இந்தியப் பத்திரிக்கையாளர் மன்றத்தின் பரிந்துரைமீது இந்தியத் தேர்தல் ஆணையம், பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியைத் தடுக்க பல நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. அது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 127(A)3(b) எல்லையைப் பெரிதாக்கியுள்ளது. அதன்படி, தேர்தல் துண்டுப் பிரசுரம் அல்லது சுவரொட்டிகளும் ஏனைய ஆவணங்களின்கீழ் பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்தியாகச் சேர்க்க விளம்பரம் வேட்பாளரின் சம்மதத்துடன் இருந்தால், அது அவனுடைய/அவளுடைய தேர்தல் செலவுக்கான கணக்கில் சேர்க்கப்படும். பலதரப்பட்ட போட்டியாளர்களால் உண்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை விரைந்து இதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படாதவரை இந்தியப் பொதுமக்களே இழப்பிற்குரியவர்களாவர்.

## ஐயப்படும்படியான பணம் கொடுத்து வெளியிடப்பட்ட செய்திகளின் வழக்கின் விளக்கங்கள்:

- தலைப்புச் செய்தி மற்றும் புகைப்படத்துடன் கூடிய அதே கட்டுரை எழுத்தாளர் கட்டுரையின் வரிக்குறிப்புகளில் முன்போ அல்லது பின்போ அல்லது ஒரே நேரத்தில் போட்டியிடும் இதழ்களில் வரும்.
- குறிப்பிட்ட செய்தித்தாள்களின் அதே தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களைப் புகழ்ந்து தேர்தலில் அவர்கள் இருவரும் வெற்றி பெறலாம் என்று உரிமையோடு தெரிவிக்கும்.
- சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினரின் ஆதரவும் ஒரு வேட்பாளருக்குப் பெருகுகிறதென்றும், மேலும் அவர் அந்தத் தொகுதியிலிருந்து வெற்றி பெறுவார் என்றும் செய்தி இனத்தில் குறிப்பிடுகிறது.
- ஒரு வேட்பாளருக்கு ஆதரவாக செய்தி இனம் இருந்து அதற்கு எந்த எழுத்தாளர் என்ற பெயர் இருக்காது.
- ஒரு கட்சி/வேட்பாளர் மாநிலத்தில்/தொகுதியில் வரலாற்றை ஏற்படுத்தத் தயாராக இருக்கிறதென்றும் ஆனால் இந்தத் தலைப்பு செய்திக்கு ஏதேனும் செய்தி இனம் அதிலிருக்காது என்றும் ஒரு விளம்பரத் தலைப்பு செய்தித்தாளில் வெளியிட்டு குறிப்பிடும்.
- ஒரு கட்சி/அல்லது அதன் வேட்பாளரின் நற்பணி மற்ற கட்சி/மற்ற கட்சி வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பினை ஓரங்கட்டச் செய்திருந்தது என்று கூறி அந்தக் கட்சி வேட்பாளரே வெற்றி பெற வாய்ப்புள்ளது என்ற செய்தி வெளியில் நிலையான அளவு செய்தி இனங்கள் என்பவை ஒவ்வொன்றும் 125, 150 சொற்களுடன் இரண்டு பத்தி புகைப்படத்துடன் இருக்கும். விளம்பரங்கள் அடிக்கடி அமைந்துள்ளதுபோல, செய்தி இனங்கள் அப்படிப்பட்டதொரு கட்டுறுதியான படிவமைப்பிலும், அளவிலும் வெகு அரிதாகவே அச்சிடப்படும்.
- குறிப்பிட்ட செய்தித்தாள்களில், பன்முக எழுத்துருக்களின் விதங்கள் மற்றும் பன்முக சிறு எழுத்துக்களின் நேர்த்திகள் அதே பக்கத்தில் ஒரு செய்தித்தாளில் கண்டறியப்பட்டன. பக்கத்தில் ஒவ்வொரு பத்திகளுக்காக அவர் பணம் கொடுத்திருப்பதால் வேட்பாளரால் செய்தி கொடுக்கப்பட்டது, வடிவமைப்புகள், எழுத்துக்கள், மின் அச்சு, புகைப்படங்கள் ஆகிய அனைத்தும், செய்தித்தாள்களின் பக்கங்களில் உள்ள அச்சிடுதற்கான இடங்களுக்காகப் பணம் செலுத்திய வேட்பாளர்களால் வழங்கப்பட்டதால், இது நிகழ்ந்தது.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.